விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 28 ஞாயிற்றுக்கிழமை (12.03.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 083

# அதிவிசேட பாதுகாப்புடன்
# அரசுக்கு சாதகமாக த.தே.கூ தீர்மானம்!

## நேற்றைய கூட்டத்தில் கால அவகாசம் வழங்க முடிவு

(குருமன்காடு)

நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ.நா மனித உரிமை பேரவையின் 34-வது ஜெனிவா கூட்டத் தொடரில், இலங்கை மீதான ஜெனிவா - 2015 தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு அரசுக்கு இன்னமும் கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்ற விடயத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றைய தினம் கட்சித் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளது. (15-ம் பக்.)

கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களுக்குப் பதில் கடிதம் எழுதிய புருசோத்தமன் எழுதும் "தமிழரின் தலைவிதி எப்படியாகும்?" தொடர் நாளை தொடக்கம் உங்கள் வலம்புரியில் வாசிக்கத் தவறாதீர்கள்...

## கிளிநொச்சியில் 20-வது நாளாக கவனயீர்ப்பு!

(பரந்தன்)

கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும்தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை 20 ஆவது நாளாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டதுடன் இன்றும்

16 ஆம் பக்கம் பார்க்க....

## விடுதலைப் புலிகள் மீதான போர்க்குற்ற அறிக்கை!

### ஜெனிவாவில் சமர்ப்பிக்க இராணுவம் தயாரிப்பு

(கொழும்பு)

நாட்டின் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் 6 பேர் இணைந்து விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக கூறப்படும் 310 போர்க்குற்றங்கள் தொடர்பான அறிக்கையை ஜெனிவா மனித உரிமை ஆணையாளரிடம் சமர்ப்பிக்க உள்ளனர்.

மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, மேஜர் ஜெனரல் எஸ்.சந்திரசிறி, லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்க, மேஜர் ஜெனரல் சீவலி வணிகசேகர, அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம, ரியர் அட்மிரல் எம். அமரவீர ஆகியோர் இந்த அறிக்கையை

16 ஆம் பக்கம் பார்க்க....

## கலைப்பீட மாணவர்களால் நேற்று யாழ்.பல்கலையில் குழப்பநிலை

### சொத்துக்கள் நாசம்; பொலிஸ் வரவழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்கும் கலைப்பீட மாணவர்களுக்கும் இடையில் நேற்று பெரும் முறுகலுடனான குழப்பநிலை ஏற்பட்டிருந்தது.

இக் குழப்பநிலை காரணமாக பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள் மாணவர்கள் சிலரால் அடித்து நாசம் செய்யப்பட்டதை அடுத்து அங்கு பதற்றமான நிலைமையும் நேற்று ஏற்பட்டிருந்தது.

இதனால் சில மாணவர்களுக்கு இருவருட வகுப்புத்தடையும் விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

15 ஆம் பக்கம் பார்க்க....

## உழவு இயந்திரம் தபால் புகையிரதம் நேற்றிரவு விபத்து

(மல்லாவி)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி நேற்றிரவு பயணித்த இரவுத் தபால் புகையிரதம் - இரு சக்கர உழவு இயந்திரம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

கிளிநொச்சி இரணைமடு சந்திக்கும் திருமுறிகண்டிக்கும் இடையே

15 ஆம் பக்கம் பார்க்க....

## பொலிஸாருக்கு அதிக இலஞ்சம் வழங்கும் மக்கள்

(கொழும்பு)

இலங்கை பொலிஸாருக்கு, அந்நாட்டு மக்கள் அதிகளவில் இலஞ்சம் வழங்குவதாக ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் உள்ள இன்டர்நெஷனல் ட்ரான்ஸ்பேரன்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவ்வமைப்பு நடத்திய ஆய்வு அறிக்கைக்கு அமைய இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

கருத்து கணிப்புகளின் படி,17

15 ஆம் பக்கம் பார்க்க....

## "இராணுவமே எம்மை வாழவிடு"

### கேப்பாப்பிலவு மக்கள் போராட்டம்; இருவர் சாகும் வரை உண்ணாவிரதம்



(மல்லாவி)

கேப்பாப்பிலவு பூர்வீக கிராம மக்கள் தமது சொந்த கிராமத்தையும் தமது சொத்துக்களான காணிகள் மற்றும் குடியிருந்த வீடுகள் என்பனவற்றையும் கையகப்படுத்தி அதில் நிலைகொண்டுள்ள இராணு

15 ஆம் பக்கம் பார்க்க....

## போர்க்குற்ற விசாரணையை மழுங்கடிக்கின்ற தீர்மானம்!

### த.தே.கூ முடிவை ரெலோ நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என த.தே.கூ. எடுத்த முடிவை முற்றாக நிராகரிப்பதாக தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.

04 ஆம் பக்கம் பார்க்க....



## கால அவகாசம் வழங்க முடிவெடுத்த பின்பு கூட்டத்தை கூட்டியது வெறும் கண்துடைப்பே

### எமக்கு உடன்பாடில்லை என ஈ.பி.ஆர்.எல்.எப் அறிவிப்பு

(குருமன்காடு)

த.தே. கூட்டமைப்பின் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கப்படுவது தொடர்பான முடிவில் எமக்கு உடன்பாடில்லை. இக் கூட்டம் வெறும் கண்துடைப்பே என த.தே. கூட்டமைப்பின் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈபிஆர்எல்எப்) செயலாளருமான நடேசு சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் விசேட கூட்டத்தின் பின்னர் ஊடக

15 ஆம் பக்கம் பார்க்க....




## 5 மணி நேரத்தில் 1141 பேர் கைது!

(மல்லாவி)

நாடு முழுவதும் பொலிஸாரால் ஐந்து மணித்தியாலங்கள் மேற்கொள்ளப்பட்ட அதிரடி சுற்றி வளைப்பின் போது ஆயிரத்து 141 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

15 ஆம் பக்கம் பார்க்க....

PSP Rent a Car
யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக, திருநெல்வேலி.
(Premio, Axio, Nissan, Tata indica, Daweoo
கார்கள் நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு:-
077 3777502

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Mega Career Fair 2017
இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக் கலைக் கல்லூரி
ஒளி அழகன் ஸ்ரூடியோ British College of Beauty Studies
இணைந்து நடத்தும்
Women's day Celebration

இன்று 12.03.2017 வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது
பெண்களுக்கு பொருத்தமான துறை சம்பந்தமான இலவச கல்வி வழிகாட்டல் கருத்தரங்கும் இடம்பெறும்.
உங்களுக்கு நீங்களே பேசியல், கிளினப், கண் இமை, மேக்கப் எவ்வாறு போடுதல், இன்னும் பல பெண்களுக்கான விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளது. வரும் அனைவருக்கும் பரிசில்களும் Discount Voucherகளும் காத்திருக்கின்றன. இன்றைய தினம் எங்கள் கல்லூரியில் இணையும் அல்லது பதிவு மேற்கொள்பவர்களுக்கு Discount வழங்கப்படும்.
நேரம் 10.00 - 5 மணிவரை நடைபெறும்.
076 701 1645
பெண்களே! இது உங்களுக்கு மட்டுமான அழகுக் கலைக் கல்லூரி
British College of Beauty Studies
(8185)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

MASTER
MUSICAL ACADEMY
DRUMS, GUITAR, KEYBOARD
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
சிறுவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்
பழைய பொலிஸ் நிலைய வீதி,
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
T.P - 077 004 1014 (8186)

# முச்சக்கரவண்டி - மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் படுகாயம்

(குருமன்காடு)

வவுனியா பட்டானிச்சூர் முஸ்லிம் பாடசாலைக்கு முன்பாக நேற்றைய தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியாவில் இருந்து மன்னார் வீதியூடாக பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் எதிரே வந்த முச்சக்கரவண்டி ஒன்றும் மோதுண்டமையினாலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

அத்துடன் வீதியின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளை முச்சக்கரவண்டி மோதியதில் மோட்டார் சைக்கிளுக்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது.

படுகாயமடைந்தவர் சிகிச்சைகளுக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(செ-15.250)



## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர் **நடனமூர்த்தி கனகாம்பிகை**

கடந்த 10.02.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி நடனமூர்த்தி கனகாம்பிகை அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன் வீதி,
காளி கோவிலடி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
077 815 1798

(8183)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவித்தல்

பல்கலைக்கழகத்தின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை தொடர்பாகவும் பல்கலைக்கழக ஒழுக்க விதிகளை மீறி கலைப்பீட பீடாதிபதி அவர்களும் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் அவர்களும் வாய்மொழிமூலமாகவும் எழுத்து மூலமாகவும் (வரவேற்பு உபசார நிகழ்வு ஒன்றினை நடாத்துவதற்கு உரிய மாணவர் ஒழுக்காற்று விதிகள் சம்பந்தமான) விளக்கமான பணிப்புரைகளை அறியத்தந்திருந்தும் அவற்றை உதாசீனம் செய்து வரவேற்பு உபசார நிகழ்வினை நடாத்தியமை தொடர்பாகவும் பின்வரும் முடிவுகளை பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்துள்ளது என்பதனை அறியத் தருகின்றேன்.

01. கலைப்பீட மாணவர் ஒன்றியம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் கலைக்கப்படுகின்றது.
02. மேற்படி ஒழுக்க விதி மீறல்களில் நேரடியாக தொடர்புபட்டிருக்கும் மாணவர்கள் மீது உரிய விசாரணைகளினூடாக தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
11.03.2017
(சி-7784)

AC BIG SALES
AIRCONDITIONER, TV'S SPECIAL OFFERS
விசேட விலைக்கழிவில்
Split Wall Mounted AC
With Instalation

| Btu | Media | Panasonic |
|---|---|---|
| 9000 BTU | 58,500/= | 79,500/= |
| 12000 BTU | 62,500/= | 86,500/= |
| 18000 BTU | 78,500/= | 115,000/= |



PORTABLE AC
RS: 59,500/=
நீங்கள் விரும்பிய இடங்களிற்கு கொண்டு சென்று பாவிக்க கூடியது.
விசேட விலைக்கழிவுடன் Kings Electronics (Pvt) Ltd நிறுவனத்திடம் இருந்து இன்றே வாங்கிச் செல்லுங்கள்
12000 BTU
3 YEARS WARRANTY
LED TV'S

| | |
|---|---|
| Samsung 32" | -29900 |
| Hisence 32" | -24500 |
| Sony 40" | -67900 |
| Hisence 24" | -17900 |
| Tcl 32" | -21900 |
| Panasonic 32" | -28500 |

SONY DVD PLAYER
ONE YEAR WARRANTY
RS 5250/=
Best Deal
AIRCONDITIONER
STAND FAN 3190/=
KINGS ELECTRONICS(PVT) LTD
12A, Point Petro Road, Jaffna
(வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
021-4546699 mykings.lk kingsjaffna
(C-7785)

## கண்ணீர் அஞ்சலி



திருமதி **காங்கேயன் சத்தியலட்சுமி**

யாழ்.கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட R.காங்கேயன் (கணக்காளர் மக்கள் வங்கி) அவர்களின் அன்பு மனைவி திருமதி காங்கேயன் சத்தியலட்சுமி 11/03/2017 அன்று இறைபதமடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
தனபாலசிங்கம் குடும்பம்
(வண்.மேற்கு வைத்தியசாலை)

(8181)

## கண்ணீர் அஞ்சலி



சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முன்னாள் பணிப்பாளர் சபை உறுப்பினராகிய

**திரு. துரைசிங்கம் தனபாலசிங்கம்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து, அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர் சபை
உறுப்பினர்கள்,
இல்லப் பிள்ளைகள்,
பணியாளர்கள்

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(C - 7786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையின் 34 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் கடந்த 2015 ஆம் ஆண்டு கொண்டு வந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு 2 ஆண்டுகள் கால அவகாசம் கோரியுள்ளது. இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பல தரப்பினர் எதிர்ப்பு வெளியிட்டு மனித உரிமைகள் பேரவைக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளதோடு கட்சியின் தலைமை உள்ளிட்ட மறு தரப்பினர் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந் நிலையில் கூட்டமைப்பின் வடக்கு-கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் அவசர ஒன்று கூடல் நேற்று காலை 9.30 மணியளவில் வவுனியாவிலுள்ள விடுதி ஒன்றில் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தலைமையில் இடம் பெற்றது. (படங்கள்: குருமன்காடு செய்தியாளர்)

# எங்களின் பிரச்சினை சட்டரீதியானதென்றால் ஏன் இவ் விடத்தில் எம்மை குடியேற்றினீர்கள் பன்னங்கண்டி மக்கள் கேள்வி

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி மக்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று சனிக்கிழமை எட்டாவது நாளாக தொடர்ந்தது.

காணி அனுமதிப்பத்திரம்,வீட்டுத்திட்டம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளைக் கோரி பன்னங்கண்டி கிராம மக்கள் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.இந்த மக்கள் 1990 ஆம்ஆண்டு முதல் மேற்படி ஆகியோர் சட்டப் பிரச்சினையை மட்டும் பேசி வருகின்றார்கள்.தங்களின் மனிதாபிமான விடயத்தை பற்றி கவனிக்கவில்லை. எனக் குறிப்பிடும் பன்னங்கண்டி மக்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்கு தங்களின் பின்பு வந்து குடியேறியவர்களுக்கு எல்லாம் நிரந்தர காணிகளும் வீட்டுத்திட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் பன்னாங்கண்டி மக்களாகிய நாங்கள் இன்



கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் வாழ்கின்ற பிரதேசம் பன்னங்கண்டி பசுபதிகமம் என அழைக்கப்படுகிறது. தென்னிலங்கையில் இடம்பெற்ற வன் செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து வடக்கு நோக்கி வந்த மக்களில் சிலர் குறித்த காணியில் குடியேற்றியுள்ளனர் அப்போதைய நிர்வாகத்தினர்.

அக்காலப்பகுதிகளிலேயே இவர்களுக்கு கிளிநொச்சியில் அரச காணிகளை சொந்தமாக வழங்கியிருக்க முடியும். ஆனால் அது தொடர்பில் எவரும் அக்கறை கொள்ளவில்லை.தற்போது அதிகாரிகள், அரசியல்வாதிகள் றும் அகதிவாழ்க்கை போன்றே வாழ்ந்து வருகின்றோம் எனக் கூறுகின்றனர்.

எங்களின் பிரச்சினை சட்டரீதியான பிரச்சினை என்றால் இது ஏன் அன்று எங்களை இந்த இடத்தில் குடியேற்றும் போது அதிகாரிகளுக்கு தெரியவில்லையா? இந்தச் சட்டப் பிரச்சினை என்று.எனவே எங்களின் விடயத்தில் எல்லோரும் அக்கறையின்றியே இருந்து விட்டனர். எனவேதான் நாங்கள் எங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்திலாவது அவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்பதற்காக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார். (2-312-15)

# சித்தி விநாயகர் ஆலய உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருட்டு

(குருமன்காடு)



வவுனியா ஓமந்தை பிரதான வீதியிலுள்ள சித்தி விநாயகர் ஆலய உண்டியல் விசமிகளால் உடைக்கப்பட்டு பணம் திருட்டு போயுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்தனர். இதனிடையே கடந்த 8 ஆம் திகதி ஓமந்தை பகுதியில் அமைந்துள்ள தேவாலயம் ஒன்றின் உண்டியலும் உடைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஆதரவாக வவுனியாவில் நேற்று கவனயீர்ப்பு




(குருமன்காடு)

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று 16 ஆவது நாளாக மேற்கொள்ளப்பட்ட சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவாக ஊர்வலமொன்று நடைபெற்றது.




மாக்சிச லெனினிச கட்சி மற்றும் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு இணைந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் ஏற்பாடு செய்திருந்த இவ் ஊர்வலம் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்திற்கு முன்பாக இருந்து கடை வீதி வழியாக நகர்ந்து உணவு தவிர்ப்பு இடம்பெறும் போராட்ட தளத்தை வந்தடைந்தது.

புதிய மாக்சிச லெனினிஸ கட்சியின் முக்கியஸ்தர் செந்தில்வேல் தலைமையில் இடம்பெற்ற ஊர்வலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பதில் என்ன, அனைத்து அரசியல் கைதி களையும் விடுதலை செய், பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச்செய், மைத்திரி-ரணில் அரசே வாக்குறுதி என்னாச்சு போன்ற கோசங்களை எழுப்பியவாறும் பதாதைகளை தாங்கியவாறும் சென்றிருந்தனர்.(2-250-15)

# கல்லாறுக்களப்பு சிறுகடலில் இறால் பிடிப்பதற்குச் சென்ற இளைஞன் சடலமாக மீட்பு

(மல்லாவி)

தர்மபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிலுள்ள கல்லாறுக்களப்பு சிறு கடல் பகுதியில் இறால் பிடிப்பதற்காகச் சென்ற இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.எம்.என்.டீ. சதுரங்க தெரிவித்துள்ளார்.



இச் சம்பவத்தில் உரிழந்தவரின் சடலம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதில் தருமபுரம் பொலிஸ் நிலையப்பிரிவிலுள்ள கண்ணகிநகர், புன்னைநீராவினும் இத்தில் வசிக்கும் செல்வநாய [illegible] என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச்சம்பவம்தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு வினவிய போது,

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைபிற்பகல்2மணியளவில் தனியாக கல்லாறுக்களப்பு சிறுகடல் பகுதிக்கு இறால் பிடிக்க செல்வதாக வீட்டில் தெரிவித்துள்ளார்.

அன்றையதினம்இரவாகியும் வீடு திரும்பாத நிலையில் அவரது சகோதரன் சக நண்பர்களின் உதவியுடன் கல்லாறுக்களப்பு சிறுகடல் பகுதியில் தேடிய போது அவர் உயிரிழந்த நிலையில் கடலில் மிதப்பதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த இடத்திற்குவிரைந்த தர்மபுரம்பொலிஸார்சடலத்தை மீட்டு கிளிநொச்சி மாவட்ட நீதவான் பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சிமாவட்டவைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (2-15-312)




# சர்வதேச மகளிர் தினம்

(பூநகரி)

இலங்கை பொது வர்த்தக கைத்தொழிற்சங்கம் (C.M.U ) நிறுவனத்தால் கிளிநொச்சி இரணைமடுவில் உள்ள அதன் அலுவலகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சர்வதேச மகளிர் தினம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் அனைத்து மேற்படி சங்க மகளிர் உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அலுவலக இணைப்பாளர் திருமதி நா.யோகராணி கேட்டுள்ளார். (2-84)

இலங்கை வங்கி கிளிநொச்சி கிளை நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கிளிநொச்சி இலங்கை வங்கியில் வட மாகாண இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் மா. ஜே. பிரபாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வரவேற்புரையை இலங்கை வங்கி கிளிநொச்சி முகாமையாளர் க. ஐங்கரராஸ் நிகழ்த்துவார். வரவேற்பு நடனத்தை தொடர்ந்து பெண்கள், குழந்தைகள் சுகாதார விழிப்புணர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலை டாக்டர் எஸ். ஜெயலக்சுமி தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் திருமதி.ப. ஜெயராணி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

அன்றைய தினம் இலங்கை வங்கியின் சேவைகள் பற்றிய விளக்கமும் பரிசில் வழங்கல் நிகழ்வும் இடம் பெறும். (2-84)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.5 கிலோ கஞ்சா மீட்பு

(சுரணவாய்)

பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் உள்ள கடற்கரையில் மறைத்து வைக்கப் பட்டிருந்த 1.5 கிலோக்கிராம் கேரளக்கஞ்சா கடந்த 9ஆம் திகதி அன்று இரவு 10.30 மணியளவில் பருத்தித்துறைப் பொலிஸா ரால் மீட்கப்பட்டது.

எனினும் சந்தேகத்தின் பேரில் எவரையும் கைதுசெய்யவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## போர்க்குற்ற விசாரணையை ...

இது குறித்து அவ்வியக்கத்தின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந. ஸ்ரீகாந்தா வலம்புரிக்குத் தெரிவிக்கையில்,

வவுனியாவில் நேற்றையதினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நிறைவேற்றப்ப ட்ட தீர்மானம் இலங்கை அரசுக்கு கால அவ காசம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை அனுசரிக்கும் விதத்திலேயே அமைந்திருப்ப தனை ஆழ்ந்துபார்க்கும் போது உணரமுடியும்.

இவ்விவகாரம் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஒருங்கிணை ப்புக் குழுக் கூட்டத்தை கூட்டி அதில் விவாதிக் கப்பட்டு முடிவு செய்யப் பட்டிருக்க வேண்டிய விடயமாகும்.

மாறாக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபைஉறுப்பினர்கள் கூட்டம் கூடி இந்த முடிவுஎடுக்கப்பட்டுள்ளது.

எது எப்படியிருந்தாலும் தமிழீழ விடுதலை இயக்கமான (ரெலோ) எமது கட்சியைப் பொறுத்தமட்டில் கடந்த மாதம் 18ஆம் திகதி எமது தலைமைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமே எமது கட்சி யின் நிலைப்பாடாகும்.

எந்த விதத்திலும் இலங்கை அரசுக்கு கால அவகாசம் கொடுப்பதை எதிர்க்கின்றோம்.

போர்க்குற்ற விசாரணையை மழுங்கடிக் கவே இலங்கை அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

ஆனால் வவுனியாவில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் பலத்த வாதப்பிரதிவாதங்களுக்குப் பிறகு ஒரு சமரசம் ஏற் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

எனினும் இந்த முடிவை நாம் ஏற்கப் போவதில்லை என தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான ந. ஸ்ரீகாந்தா தெரிவித் துள்ளார்.

மேலும் இந்த முடிவை எமது மக்களும் ஏற்றுக் கொள்ள மாட்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**021 221 7603, 021 567 1532**



## வேலையாட்கள் தேவை

**சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. மூன்று நேர உணவு, தங்குமிட வசதி, மாதாந்த சம்பளத்துடன் கீழ்வரும் வேலையாட்கள் தேவை.**

1) சப்பிளையர் (உணவுபரிமாறுபவர்கள்) (ஆண் / பெண்)
2) காசாளர்
3) பில்கிளாக்
4) முகாமையாளர்
5) மரக்கறி வெட்டுபவர்கள்
6) குசுனி வேலையாட்கள்
7) சுத்திகரிப்பாளர்கள் (பெண்கள்)

**தொடர்புகளுக்கு:** பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
**0777917753**
**0755304521**

(8189)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவித்தல்

கலைப்பீடத்தில் சட்டத்துறை மற்றும் இராமநாதன் நுண்கலைத் துறை தவிர்ந்த ஏனைய கலைப்பீட மாணவர்களது கல்வி நடவடிக்கைகள் யாவும் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்படுகின்றன. பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள மேற்குறிப்பிட்ட கலைப்பீட மாணவர்கள் அனைவரும் உடனடியாக விடுதிகளைவிட்டு வெளியேறுமாறு கோரப்படுகின்றார்கள்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**11.03.2017**

(சி-7783)


## தென்னை நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு

நாற்று உற்பத்திக்காக பராமரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட 40 வருடத்திற்கு மேலான தாய்த் தென்னைகளிலிருந்து பெறப்பட்ட விதை நாற்றுக்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தரமான தென்னை நாற்றுக்கள் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

நாற்றுக்களைப் பெற விரும்புபவர்கள் முற்பதிவுகளை மேற்கொண்டு எமது கிராஞ்சி தென்னந் தோட்டத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விலை : 500 நாற்றுக்கு மேல் பெற விரும்புவோருக்கு நாற்று ஒன்றிற்கு ரூபா. 100/- உம் இதனைவிட குறைவான நாற்றுக்களைப் பெற விரும்பின் 120/- க்கு விற்பனை செய்ய முடியும்.

குறைந்தளவு நாற்றுக்களே உண்டு. உடனடியாகத் தொடர்பு கொள்க

முகவரி :-
தி.இராசநாயகம், தலைவர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி
தொலைபேசி இலக்கங்கள்: 0214923118, 0770604950
0717494370

(C-7789)


## கண்ணீர் அஞ்சலி



**திருமதி**
**சத்தியலட்சுமி காங்கேயன்**
**(ஓய்வு நிலை கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்)**

**யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க முன்னாள் செயலாளர் திருமதி சத்தியலட்சுமி காங்கேயன் அவர்கள் இயற்கை எய்திய செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி**

**யா/இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C - 7790)

## மரண அறிவித்தல்

## செல்லன் சண்முகராசா



**பிறப்பு:** 17.05.1963 **இறப்பு:** 10.03.2017

*1-ம் வட்டாரம் புல்மோட்டையை பிறப்பிடமாகவும் 07ஆம் வட்டாரம் குமுழமுனை மேற்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லன் சண்முகராசா 10.03.2017 வெள்ளிக் கிழமை காலமானார். அன்னார் மனோகரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மதுஷா, பர்விதன், மனோஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரமேஸின் மாமனாரும் சஜிந்தின் பாசமிகு பேரனுமாவார்.*

*அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2017) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக் கத்திற்காக பூதவுடல் தாமரைக்கேணி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

**தகவல் :**
**குடும்பத்தினர்**

(8188)


## வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 20.03.2017 க்கு முன்பதாக தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

1. அலுவலக ஊழியர்
2. களஞ்சியக் காப்பாளர், உதவிக் களஞ்சியப் பொறுப்பாளர்
3. மேற்பார்வையாளர் / முகாமையாளர்

தகைமைகள்

1. க.பொ.த சா/த பரீட்சையில் தமிழ், கணிதம், விஞ்ஞானம் உட்பட ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ.த உயர்தரத்தில் வணிகப்பிரிவில் அல்லது கணித, விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றிருக்க வேண்டும்
2. கணினி அறிவு விசேட தகைமையாகக் கருதப்படும். விவசாய அறிவும் கவனத்தில் கொள்ளப்படும்.
3. விண்ணப்பதாரர் தேக ஆரோக்கியம் உடையவராகவும் நற்பண்புகள் உடையவராகவும் சைவநெறி ஒழுக்கத்திற்கு அமைவாக நடப்பவராகவும், தியாகசிந்தனை, சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும். (கிராமசேவையாளர் உதவி அரச அதிபர் குணநல நற்சான்றிதழ் வேறு இரு பிரமுகர்களது நற்சான்றிதழின் பிரதி இணைக்க வேண்டும்)
4. வயதெல்லை 18 - 45 வரை

குறிப்பு :

☆ ஆறுமாத காலத்திற்கு தகுதிகாண் காலத்துள் வைக்கப்படுவர். அதன் பின்பே நிரந்தரமாக்கப்படுவர்
☆ இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.
☆ உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
☆ சம்பளம் ரூபா. 18000 வழங்கப்படும்

❖ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகல சான்றுப் பத்திரங்களின் நிழற் பிரதிகளுடன் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :-
தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்திநகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல : 077 060 4950, 021 492 3118
மின்னஞ்சல் முகவரி : rasa46@yahoo.com, mahadevaswamikalchildrenhome@gmail.com

(C-7788)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌர்ணமி கலைவிழா

(யாழ்ப்பாணம்)

தீவகக் கல்வி வலய பௌர்ணமி கலைவிழா இன்று காலை 9 மணியளவில் தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சந்தரசிவம் தலைமையில் யாழ். புங்குடுதீவு சர்வோதய மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் அலுவலகச் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் மற்றும் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை, ஓய்வு நிலைப் பேராசிரியர் கா. குகபாலன், கௌரவ விருந்தினர்களாக புங்குடுதீவு சர்வோதய அறங்காவலர் பொ. யமுனாதேவி, வடமாகாண அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிவாணி ஆகியோர் கலந்து கொள்வார். (இ-12)

# கொழும்பில் இனி வாரத்திற்கு ஒரு ஆர்ப்பாட்டம் மட்டுமே

கொழும்பு நகரில் தினமும் நடக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் காரணமாக மக்களின் அன்றாட வாழ்க்கைக்கும் பொருளாதாரத்திற்கும் ஏற்படும் பாதிப்புக்களை தடுக்கும் வகையில் தனியான சட்டத்தை கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பு நகரில் வாரத்திற்கு ஒரு எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்த முடியும் என்ற வகையில் புதிய முறைமை ஒன்றை ஏற்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் பிரதமரை சந்தித்து இந்த விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இதன் போதே புதிய சட்டத்தை கொண்டு வருவது குறித்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரண்டு கட்சிகளின் இந்த கோரிக்கை சம்பந்தமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு தரப்பு பிரதானிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (இ-7)

# மகளிர் தின விழா 15 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் மகளிர் தின விழா எதிர்வரும் 15 ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் மகளிர் உப சபைத் தலைவி ஜெ. துர்க்காயினி தலைமையில் சமாசப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. (இ-12)

# மரண அறிவித்தல்



## அமரர் சங்கரப்பிள்ளை நடராசா

பிறப்பு:-1949.05.10 இறப்பு:-2017.03.10

கப்பூது கரவெட்டியை பிறப்பிடமாகவும் இராஜவீதி தோப்பு அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சங்கரப்பிள்ளை நடராசா 2017.03.10 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை பொன்னம்மாவின் அன்பு மகனும் தெய்வராணியின் அன்புக்கணவரும் பொன்னையா ஞானம்மாவின் அன்பு மருமகனும் பாலசுந்தரம் (அமரர்), செல்லம்மா, மனோன்மணி இராசன் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தெய்வராணி, கெங்காதேவி ஆகியோரின் மைத்துனரும் யோகலக்சுமி (ஜேர்மன்), நிமலாதேவி, கலாநிதி, இராகவன் (சுவிஸ்), கோமதி, கலைமதி (சுவிஸ்), நதியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் றஞ்சன்(ஜேர்மன்), சாந்தகுமாரன் (அவுஸ்திரேலியா) சிவதாஸ், லிஷானி(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் தீபா (ஜேர்மன்), பிரசன்னா (ஜேர்மன்), தீபன் (ஜேர்மன்), பிரதீபன் (ஜேர்மன்), தனுசன், சஞ்சீவன், சிந்துஷா, சகானா, மேனகா, சிவகுமார், அக்ஷயா (சுவிஸ்), ஆருஷன் (சுவிஸ்) விதுஷன், பவித்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.03.2017 செவ்வாய்க்கிழமை அன்று மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோப்பு அச்சுவேலி.**
**077 721 0551**

(8177)

**தகவல்**
**குடும்பத்தினர்**

# இராசி பலன்

12.03.2017
(மாசி 28, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.25 மணிக்கு
பூரணை முன்னிரவு 8.46 மணிவரை
பூரம் மாலை 6.00 மணிவரை
சுபநேரம் 9.22-10.52 மணிவரை
இராகுகாலம் 4.52-6.22 மணிவரை
பூரணை விரதம், சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் புத | செவ் | | |
| சூரி கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவோணம், அவிட்டம் இரவு 11.53 இற்கு கன்-சந் | | |
| | | | ராகு சந் |
| | சனி | | குரு |

**மீனம்** நினைத்த காரியத்தை எளிதில் செய்து வெற்றி காண்பீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.

**இடபம்** சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு.

**மிதுனம்** சகோதர ஒத்துழைப்பால் பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**கும்பம்** குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.

**கடகம்** தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பொறுமையாக இருந்து காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புகளும் அதிகரிக்கும் நாள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள்.

**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய புள்ளிகளைச் சந்திக்கும் எண்ணம் உருவாகும், பயணங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**துலாம்** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், உறவினர்களின் வருகையுண்டு.

**கன்னி** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சி கூடும், விரதங்களில் நம்பிக்கை கூடும், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








யாழ். இந்தியத் துணைத்தூதரகமானது நவம்பர் 2010இல் யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் வருடாந்தம் இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் (ITEC Day) மற்றும் சர்வதேச மாணவர் தினத்தை (International Students' Day) கொண்டாடி வருகின்றது. இந்த வருடம் இந்நிகழ்வு யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் கடந்த 5ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இதில் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், த. சித்தார்த்தன், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா, அரச உயர் அதிகாரிகள் உட்பட இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் தமது பயிற்சிகளைப் பூர்த்தி செய்த அதிகாரிகள் மற்றும் இந்தியாவில் தமது உயர் கல்விகளை மேற்கொண்டவர்கள் உள்ளிட்டோர் கலந்து சிறப்பித்தனர்.

# தமிழ் மக்களுக்கு சேவை செய்ய இராணுவம் ஆவலாக உள்ளது

## யாழ். கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக அவர்களுக்கு வேண்டிய சேவைகளை செய்ய இலங்கை இராணுவத்தினராகிய நாம் ஆவலாக உள்ளோம் என பாதுகாப்பு படைகளின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு நல்லிணக்கபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளின் ஒரு தொகுதி வீடுகளை வீட்டின் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நல்லிணக்கபுர நூல் நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 வருடங்களாக இடம்பெறற யுத்தத்தினால் தமது சொந்த நிலங்களை, வீடுகளை இழந்து முகாம்களில் வசித்த மக்களின் தேவைகளை அறிந்து வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை இராணுவம் வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணியினை செய்து குறுகிய காலத்தில் நிறைவு செய்துள்ளது.

கொடிய யுத்தத்தின் காரணமாக யாழில் வசித்த மக்களின் நிலங்களை இராணுவ முகாம்களாக மாற்றி அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் அவற்றை இயன்றவரை மக்களின் பாவனைக்காக மாற்றி வழங்க முயற்சி செய் கிறோம்.

அந்த முகாம்களை அமைப்பது தேசிய நீதி ஆகும். தீவிரவாதிகளினால் நடத்திய யுத்தத்தின் நிறைவாக 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்.பிராந்திய மக்களின் இடங்கள் 13 கட்டங்களாக பிரிக்கப்பட்டு வழங்கியுள்ளோம்.

ஜனாதிபதியின் சிந்தனைக்கு ஏற்ப தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்கத்தை உருவாக்கும் நோக்கில் இந்த வீட்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் இலங்கை கடற்படையினரால் நீர் வசதி வழங்கப்படவுள்ளது.



மேலும் மாவை கலட்டி பகுதியில் மீள்குடியேறியுள்ள மக்களுக்கு 225 வீடுகள் மிக விரைவில் அமைத்துக் கொடுக்கவுள்ளோம். ஊறணி இறங்குதுறை அமைப்பதற்கு 4.5 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் துறை முகம் அமைக்கவுள்ளோம். முழுமையடைந்த வாழ்விடமாக இந்நல்லிணக்கபுரம் அமைக்கப்பட்டுள்ளது. யாழ்.மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்த அவர்களுக்கு சேவை செய்ய ஆவலாக உள்ளோம். சந்தோசமாகவும் சுதந்திரமாக வும் அவர்கள் வாழ்வதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் உதவி புரிய தயாராக உள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)




வட மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தினால் நடத்தப்படும் மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஆடை வடிவமைத்தல், அழகுக் கலை மனைப்பொருளியல் கண்காட்சி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தியடைப்பு முத்துமலர் மண்டபத்தில் நடைபெற்றது. ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர் திருமதி ஏ. அன்ரன் யோகநாயகம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் மற்றும் வடமாகாண மீன்பிடி மற்றும் போக்குவரத்து வர்த்தக வாணிப கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சிவில் பாதுகாப்புக்குழுவை மீளப் புதுப்பிக்க வேண்டும்

(கரணவாய்)

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுவை மீளப் புதுப்பிக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இச் சிவில் பாதுகாப்புக் குழு நீண்ட காலமாக இயங்குகின்ற போதிலும் பொலிஸாரால் அல்லது பொலிஸ் அதிகாரிகளால் தெரிவிக்கப்படும் கருத்துக்களை உரிய முறையில் பொதுமக்களிற்கு தெரிவிப்பதில்லை. மேலும் சிவில் பாதுகாப்பு குழுவில் உள்ள அங்கத்தவர்கள் தமது பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு உரிய பொலிஸாருடன் இணைந்து செயற்படுவதில்லை. எனவே பருத்தித்துறை சிவில் பாதுகாப்பு குழுவில் துடிப்பு மிக்க இளைஞர்களை இணைப்பதன் ஊடாகவும் பெண்களை சிவில் பாதுகாப்பு குழுவில் இணைப்பதன் ஊடாக பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமெனவும் பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3,60)

## மகளிர் தின நிகழ்வு நாளை

யாழ். சமூக செயற்பாட்டு மையம் நடத்தும் மகளிர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 4.30 மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கற்சுயின் பல்கலைக் கழக முன்னாள் ஆய்வு நிலையப் பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக முன்னாள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபரும் கல்வித்திணைக்கள இளைப்பாறிய பிரதிப்பணிப்பாளர் மற்றும் இளைப்பாறிய பிரெஞ் மொழி விரிவுரையாளருமான திருமதி சிவயோகநாயகி இராமநாதன், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்டச் செயலக பெண்கள் அபிவிருத்தி இணைப்பாளர் உதயனி நவரட்ணம் ஆகியோர் கலந்து கொள்வார்.(இ-12)

## அங்குரார்ப்பணக்கூட்டம்

(கரணவாய்)

கரவெட்டி சோனப்பு மயான அபிவிருத்திக்குழு அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கரவெட்டி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். கரவெட்டிப் பிரதேச சபைச் செயலாளர் அ. வினோராஜின் பங்குபற்றலுடன் இடம்பெறவுள்ள இவ் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் சோனப்பு மயானத்தின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் நோக்கிலும் மின் தகன மயானத்தை நிர்மாணிக்கும் நோக்கிலும் இவ் அங்குராார்ப்பணக் கூட்டம் இடம்பெறவுள்ளதால் அவ் அபிவிருத்தியைக் கருத்திற் கொண்டு கரவெட்டி பகுதி மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் அறிவித்துள்ளது.(இ-3,60)

## கருத்தரங்கும் வினாவிடை போட்டியும்

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்வி அமைச்சின் அனுமதியுடன் இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகம் நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கருத்தரங்கும் வினாவிடை போட்டியும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும். (இ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலமீட்புப் போராட்டத்திற்கு ஆதரவு; டென்மார்க்கில் பாரிய ஆர்ப்பாட்டம்





தமிழர் தாயகப் பிரதேசங்களில் தொடரும் நிலமீட்புப் போராட் டத்திற்கு ஆதரவு தெரிவித்து, நேற்று முன்தினம் டென்மார்க் தலைநகர் கொப்பன்ஹேகனில் புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்ட மொன்றை முன்னெடுத்துள்ளனர். எமது நிலம் எமக்கு வேண்டும் என்ற தலைப்பில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இணைந்து நடத்திய இந்த போராட் டத்தில் வேலை நாளாக இருந்த நிலையிலும் கொப்பன் ஹேகனில் வாழும் பல புலம் பெயர் தமிழர்கள் கலந்து கொண்டு தாயகத்தில் காணி மீட்புப் போராட்டத்தில் ஈடு பட்டுள்ள தமது உறவுகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்தனர். இந்த ஆர்ப்பாட் டத்தில் தமிழர் தாயகமான, வடக்கு, கிழக்கில் தொடரும் அடக்கு முறைகள் மற்றும் ஏனைய இனப்படு கொலை நடவடிக்கைகளை சித்தரிக்கும் புகைப்ப டங்களையும் மக்கள் ஏந்தியிருந்தனர். (இ-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் 2017 ஆம் ஆண்டிற்கான பரிபாலன சபை தெரிவிற்கான பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில் ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

கௌரவ, ஆயுட்கால அங்கத்தவர்களும் 2017 ஆம் ஆண்டிற்கான அங்கத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

## பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பணம்)

வயலின் வித்துவான் வி.ஆர். கிருஷ்ணனால் நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இயங்கும் நல்லூர் அறநெறிப் பாடசாலையில் இன்று காலை 9 மணியளவில் மாணவர்களுக்கான விசேட இசைப் பயிற்சிப்பட்டறை இடம்பெறும். (இ-12)

## 15 பொலிஸாருக்கு திடீர் இடமாற்றம்

நான்கு பிரதி பொலிஸ்மா அதிபர்கள், மூன்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், மூன்று பொலிஸ் அத்தியட்சகர்கள், ஐந்து உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் என்று, 15 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் தலைமைக் காரியாலயம் நேற்று அறிவித்தது. (இ-7)


## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவிலில் மட்டுவில் நுணாவில் எல்லை வீதியில் (ராசா கடை எதிர்ப்பக்க வீதி) A-9 வீதியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள 3 பரப்பு காணியில் 90% கட்டி முடிக்கப்பட்ட குழாய்க் கிணற்றுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உள்ளது. வீடு 37X22 அடியும் தெற்கு வாசலும் உடையது. விருப்பமுள்ளோர் மட்டும் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.

உடன் தொடர்பு கொள்ளவும்.
ராஜன்-072 922 9424.

(சி-7760)

## காணி, வீடு விற்பனைக்கு

A-9 வீதி, அரியாலையில் 3 1/2 பரப்புக் காணியும் தபால் நிலைய வீதி, சாவகச்சேரியில் 17 பரப்புக் காணியும் வீட்டுடன் கூடிய 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. (தரகர் வேண்டாம்)

தொடர்புகளுக்கு:-
T:P- 077 986 5761

(8167)

## தேவை

(8174)

கொழும்பு மனிங் சந்தைக்கு விற்பனைக்காக மரக்கறிகள் ஏற்றும் வியாபாரிகள் தொடர்பு கொள்ளவும் (முக்கியமாக பச்சை மிளகாய்)
தொடர்புகளுக்கு:- 075 745 8097



யாழ்ப்பாணத்தில் 13.05.2017 இல் நடைபெற இருக்கும்

IELTS பரீட்சைக்கு ஆயுத்தப்படுத்தும் வகுப்புக்கள்

16 - Practice Tests with Explanations Daily Writing Practice Daily Speaking and Listening Practice It is an Inovative Training Programme

IELTS

2016 ஆம் ஆண்டு September - October மாதங்களில் British Council - Colombo இல் நடைபெற்ற IELTS ஆசிரியர் Workshop மற்றும் Trainings இல் பங்குபற்றி IELTS பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தப்படுத்துவதற்கு British Council இனால் அங்கீகாரம் பெற்ற ஆசிரியரினால் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றது.

OUR TARGET IS BAND : 9



IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை
Grammar and Vocabulary
போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.
Pearson English Course Level B2

எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் — 13.03.2017



COURSE SCHEDULE
Mon, Tues, Wed, Thus 60 Hours 8.30 - 11.30, 5.00 - 7.00
Saturday & Sunday 60 Hours Time: 8.30 - 12.00

IELTS LIFE SKILLS A1, B1

கடந்த வருடம் A1, B1 பரீட்சைகளில் எமது நிறுவனத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 100% சித்தியடைந்துள்ளனர் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். அடிப்படையில் இருந்து ஆங்கிலம் 2 மாதங்களில் பூரணமான அறிவைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய வைப்போம்.

IELTS Registration Centre for British Council

BRITISH COLLEGE OF ENGLISH
No. 192, Navalar Road, Jaffna. (பெருமாள் கோவிலடி தினக்குரல் காரியாலயத்திற்கு முன்னால்)
Tel : 021 222 0384 , 077 880 3887

(8161)



## பதவி வெற்றிடம்

யாழ். நகரில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு 18 வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

01. கணனி சிட்டைப் பதியுநர் (Computer Billing Clerk)
02. சுத்திகரிப்பாளர்

தகைமையுடையோர் சுயவிபரக் கோவையுடன் நாளை திங்கட்கிழமை (13.03.2017) முற்பகல் 10.00 மணிக்கு 514/18, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரில் வரவும்.

(8171) பணிப்பாளர்

## TECHNICIAN தேவை/ பயிலுநர் தேவை

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் அன்டெனா/ கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை/ பிட்டிங் மற்றும் REPAIR செய்யும் நிறுவனத்திற்கு கீழ்காணும் வெற்றிடம் உள்ளது. அனுபவமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

## டிஷ் அன்டெனா பிட்டிங் நன்கு செய்யத்தெரிந்த TECHNICIANS (சம்பளம் 30 000/- + கமிஷன் )

RECEIVER ரிப்பேர் செய்ய தெரிந்த TECHNICIANS (சம்பளம் 40 000/-வரை )

டிஷ் அன்டெனா பிட்டிங் பழக விருப்பமுடைய பயிலுநர் (சம்பளம் 20 000/- ) உணவு, தங்குமிடம் இலவசம். தொடர்பு கொள்ளவும்.

(சி-7760) குமார்- 077 771 0785.



# நுவரெலியாவில் TREATOOO!

யாழிலும் மட்டக்களப்பிலும் சுற்றுலாத்துறையில் முன்னோடியான TREATOOO இன்று எழில்மிகு நுவரெலியாவிலும் கால் பதித்து விட்டது "TREATOOO WHITE PALACE" எனும் நாமத்துடன் உல்லாசப் பயணிகளின் மனதைக் கொள்ளை கொண்ட LOVER'S LEAP, PEDRO TEA ESTATE & TEA FACTORY, GREGORY LAKE, GOLF CLUB, SANDATHENNA, VICTORIA PARK உடன் தேயிலை மணம் வீசும் குறிஞ்சி நில மலைகளையும் கண்டு களித்திட வாரீர் !
( Attached bathroom, Hot water, Parking lot, Balcony, patio, Mountain view, Garden view , Sitting area, Dinning facilities, TV, WiFi, Sharing kitchen with Surcharged )
துரித பதிவுகளுக்கு அழையுங்கள் FOR INSTANT BOOKINGS:- 076 778 1017

PACKAGES AVAILABLE

1 - ELIZABETH PACKAGE
- 2 FAM Rooms + 1 SGL Room
- 11 pax
- Ground floor
- Rs.20,000/=



2– VICTORIA PACKAGE
- 4 DBL Rooms
- 12 pax
- First floor
- Rs.24,000/=



3- SEETHA PACKAGE
- 1 FAM Room+ 1 DBL Room
- 10 pax
- Ground floor
- Rs. 14,000/=

TREATOOO WHITE PALACE
இல.04, வஜிரபுர வீதி, பொரலந்த , நுவரெலியா.
தொ.பேசி:- 052 222 4003
மொபைல்:- 077 322 8851
மின்னஞ்சல்:- treatooowhitepalace@gmail.com

Tourists Guide வழங்கப்படும்

JAFFNA BRANCH
Treatooo city hotel,
No 41, Kandy Road,
chundikkuli,Jaffna.
தொ.பேசி.இல.:- 021 222 0298/99


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 பாகிஸ்தான் போர்க்கப்பல்கள் இன்று கொழும்பு வருகின்றன

பாகிஸ்தான் கடற்படையின் இரண்டு போர்க்கப்பல்கள் நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக இன்று கொழும்புத் துறைமுகத் துக்கு வரவுள்ளதாக பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.



பினன்ஸ் நாசர் மற்றும் பினன் ஸ்சாய்ப் ஆகிய போர்க்கப்பல்களே இன்று இலங்கைக்கு வரவுள்ளன.

இரண்டு நாடுகளினது கடற் படைகளுக்கும் இடையிலான பல மான மரபுசார் நிபுணத்துவ மற் றும் சகோதரத்துவ உறவின் ஒரு பகுதியாகவே பாகிஸ்தான் போர்க் கப்பல் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளன.

இந்தப் போர்க்கப்பல்கள் கொழும் புத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் போது, இலங்கையின் கடற்படை யினருடன் பல்வேறு நிபுணத்துவ பயிற்சி செயற்பாடுகளை மேற்கொள் வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன், நாளை பினன்ஸ் நாசர் போர்க்கப்பலில் வரவேற்பு உபசாரம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-7)

# நாடாளுமன்றத்தை முடக்க கூட்டு எதிர்க்கட்சி முயற்சி

## முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கூட்டு எதிர்க்கட்சி நாடாளு மன்ற நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக செயற்பட்டு நாடாளுமன்றத்தை முடக்க முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பில், நாடாளுமன் றத்தில் கடந்த சில தினங்களாக ஏற்பட்டுள்ள நிலைமை தொடர் பாக கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்ற நிகழ்ச்சி நிர லுக்கு எதிராக நடந்து கொண்டு நாடாளுமன்றத்தை நடத்திச் செல்ல முடியாத நிலைமைக்கு கொண்டு சென்று பணிகளை முடக்குவதற்கு கூட்டு எதிர்க்கட்சி திட்டமிட்ட வகையில் செயற்பட்டு வருகிறது.

நாடாளுமன்றத்தில் சபாநா யகர் வழங்கும் உத்தரவுக ளுக்கு கட்டுப்பட வேண்டும். அவர் தவறான தீர்மானம் ஒன்றை வழங்கினால் அதற்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேர ணையை கொண்டு வருவதே சரியான நடைமுறை.

இதனை விடுத்து ஒழுக்க விரோ தமாக நடந்து கொள்வது பொருத் தமற்றது எனவும் முஜிபுர் ரஹ் மான் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஆப்கான் தூதுவராக முன்னாள் படைத்தளபதி

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானுக்கான இலங் கைத்தூதுவராக, இலங்கைத் முன் னாள் விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் ககன் புலத்சிங்கள பதவியேற்றுள்ளார்.

இவர் கடந்த மார்ச் 7ஆம் திகதி, ஆப்கானிஸ்தான் ஜனாதி பதி முகமட் அஷ்ரப் கானியிடம், தமது நியமனப் பத்திரங்களைக் கையளித்தார்.

விமானப்படைத் தளபதி பதவி யில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்றதையடுத்து, எயர் சீவ் மார் ஷல் ககன் புலத்சிங்களவுக்கு இலங்கை அரசாங்கம் இந்த இராஜதந்திரப் பதவியை வழங்கி யுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங் கத்தின் காலத்தில் இராஜதந்திரப் பதவிகளுக்கு அதிகளவிலான படை அதிகாரிகள் நியமிக்கப் பட்டனர். அந்த நிலையை மாற்றப் போவதாக, தற்போதைய அரசாங் கம் பதவிக்கு வரும் போது கூறி யிருந்தது.

எனினும், அந்த வாக்குறு தியை மீறும் வகையில் இலங் கையின் ஓய்வுபெற்ற படை அதி காரிகள் தொடர்ந்தும், வெளிநா ட்டுத் தூதுவர் பதவிகளுக்கு நிய மிக்கப்பட்டு வருகின்றனர். (இ-7)



# தெற்கு அதிவேக வீதியில் விபத்து

## ஒருவர் பலி,இருவர் காயம்



(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் பலியானதுடன் இருவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெற்கு அதிவேக வீதியின் கொடகம பகுதியிலுள்ள வெளி யேறும் வீதிக்கு அருகிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள் ளதாகவும் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (இ-7)




- 1610 - ஜேக்கப் டி லா கார்டி தலைமையில் சுவீடன் படைகள் மாஸ்கோவைக் கைப் பற்றின.
- 1664 - நியூ ஜேர்சி பிரித்தானியாவின் குடியேற்ற நாடானது.
- 1879 - ஆங்கிலோ-சூலு போர்: நூற்றுக்கும் அதிகமான ஆங்கிலப் படைகள் சூலுக் களினால் சுற்றிவளைக்கப்பட்டு படு கொலை செய்யப்பட்டனர்.
- 1894 - முதற் தடவையாக கொக்கா-கோலா மென்பானம் கண்ணாடிப் புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.
- 1913 - ஆஸ்திரேலியாவின் வருங்கால தலைநகர் அதிகாரபூர்வமாக கான்பரா எனப் பெயரிடப்பட்டது. கான்பரா அமைக் கப்படும் வரையில் 1927 வரையில் மெல்பேர்ன் தற்காலிகத் தலைநகராக இருந்தது.
- 1918 - 215 ஆண்டுகளாக ரஷ்யாவின் தலைநகராக இருந்த சென் பீட்டர்ஸ்பேர்க் தலைநகர் அந்தஸ்து மாற்றப்பட்டு மாஸ்கோ தலைநகராக்கப்பட்டது.
- 1928 - கலிபோர்னியாவில் சென் பிரான்சிஸ் அணைக்கட்டு உடைந்ததில் 400 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 1930 - மகாத்மா காந்தி பிரித்தானிய ஆட்சியாளரின் உப்பு ஆதிக்கத்துக்கு எதிராக 200 மைல் நீள தண்டியாத் திரையை ஆரம்பித்தார்.
- 1938 - ஜெர்மனியப் படைகள் ஆஸ்திரியாவை ஆக்கிரமித்தன. அடுத்த நாள் இணைப்பு அறிவிக்கப்பட்டது.
- 1940 - குளிர் காலப் போர்: பின்லாந்து மாஸ்கோவுடன் அமைதி உடன் பாட் டிற்கு வந்தது. கரேலியாப் பகுதி முழு வதும் சோவியத் ஒன்றியம் பெற்றுக் கொண்டது. பின்லாந்துப் படைகளும் மீதமிருந்த மக்களும் உடனடியாக வெளியேறினர்.
- 1954 - சாகித்ய அகாதெமி இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- 1967- சுகார்ட்டோ இந்தோனீசியாவின் அதிபரானார்.
- 1968- மொரீசியஸ் பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது
- 1992- மொரீசியஸ் பொதுநலவாய அமைப்பினுள் குடியரசானது.
- 1993- மும்பாயில் இடம்பெற்ற தொடர் குண்டுவெடிப்புகளில் 300 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003 - செர்பியாவின் பிரதமர் சொரான் டின்டிச் கொல்லப்பட்டார்.
- 2006 - தென்னாபிரிக்கா ஒரு நாள் சர்வதேச துடுப்பாட்டமொன்றில் 438/9 ஓட்டங்களைப் பெற்று ஆஸ்திரேலி யாவை (434) வென்று சாதனை படைத்தது.
- 2007 - கலிபோர்னியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத்தீயினால் 2000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட நிலப்பரப்பு எரிந்து நாச மடைந்தன.

பிறப்புக்கள்

- 1925 - லியோ எசக்கி, நோபல் பரிசு பெற்ற ஜப்பானியர்
- 1984 - ஷ்ரேயா கோஷல், பாடகர்

இறப்புக்கள்

- 1991 - ராக்னர் கிரனிற், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1900)
- 2006 - சுந்தரிபாய், தமிழ்த்திரைப்பட நடிகை

சிறப்பு நாள்

- மொரீசியஸ் - தேசிய நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 40 | 50 | 50 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 | 120 | 160 | 120 |
| தக்காளி | 60 | 40 | 50 | 50 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 70 | 80 | 70 | 80 | 60 |
| கோவா | 40 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 60 | 40 | 60 | 60 | 100 | 40 |
| பூசணி | 60 | 35 | 50 | 50 | 60 | 40 |
| புடோல் | 60 | 40 | 80 | 60 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 50 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 100 | 100 | 90 | 100 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 80 | 200 | 160 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 50 | 100 | 80 | 160 | 80 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 50 | 60 | 120 | 60 |
| பயற்றங்காய் | 100 | 80 | 80 | 60 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 60 | 80 | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 100 | 60 | 50 | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 40 | 140 | 100 | 120 | 80 |
| முருங்கைக்காய் | 400 | 90 | 400 | 400 | 600 | 300 |
| போஞ்சி | 200 | 400 | 120 | 100 | 200 | 80 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 30 | 30 | 40 | 30 |
| கீரை - 1பிடி | 20 | 40 | 30 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 60 | 20 | 100 | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50 | 60 | 50-60 | 60 |
| இராசவள்ளி | 300 | 20-50 | 180 | 180 | 200 | 140 |
| வெங்காயப்பூ | 40 | 160 | 60 | 60 | 100 | 40 |
| முள்ளங்கி | 60 | 40 | 40 | 60 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 60 | 30 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 50 | 50 | 50 | 100 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க ஐ.நாவில் இந்தியா வலியுறுத்த வேண்டும்

## ஜி.கே.வாசன் வலியுறுத்து

(சென்னை)

மனிதவுரிமை மீறல் நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை அரச படைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க, ஐ.நா. கூட்டத்தொடரில் இந்தியா வலியுறுத்த வேண்டும் என்று த.மா.கா. தலைவர். முன்னாள் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்.

ஜெனிவாவில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையகத்தின் 34 ஆவது கூட்டத்தொடர் தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தக் கூட்டத்தில் இலங்கையின் சார்பாக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தின் வரைவு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதில், இலங்கை அரசுக்கு 2015ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்த 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இது தமிழர்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் வகையில் இந்தியா நடப்புக் கூட்டத்தொடரில் தனது வாதத்தை அழுத்தத்துடன் எடுத்துரைக்க வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் மீது மனித உரிமை மீறலில் ஈடுபட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க, மத்திய அரசு ஐ.நா. சபையை வலியுறுத்த வேண்டும் என்று ஜி.கே.வாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (இ-12)

## நாடாளுமன்ற உறுப்புரிமையை துறக்கத் தயார்

### ரத்ன தேரர் அறிவிப்பு



(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்புரிமையை துறக்கத் தயார் என அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியினர் அறிவிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாடாளுமன்ற உறுப்புரிமையை துறக்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு ரத்ன தேரர் அறிவித்துள்ளார்.

எந்தவிதமான நிபந்தனையும் இன்றி தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்புரிமையை மீள வழங்க முடியும் என அவர் தெரிவித்தார்.

அண்மைய நாட்களாக ரத்ன தேரர் அரசாங்கம் தொடர்பில் வெளியிட்ட சில விமர்சனங்கள் ஆளும் கட்சிக் கூட்டங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறான கூட்டமொன்றில் பங்கேற்ற போது நிபந்தனையின்றி நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்கத் தயார் என ரத்ன தேரர் அறிவித்துள்ளார். (இ-7)

# மிதந்து வந்த தேவாலயத்தில் நான்கு புத்தர் சிலைகள் மீட்பு

(கொழும்பு)

அம்பாறை, ஒலுவிலை அண்மித்த கடற்பரப்பில் கைவிடப்பட்டிருந்த, அலங்கரிக்கப்பட்ட மரத்திலான தேவாலயம் போன்று காட்சியளித்த, பாரிய தெப்பத்திலிருந்து, புத்தபெருமானின் சீடர் எனக் கருதப்படும் ஒருவரின் சிலையொன்றும் புத்தரின் சிலையொன்றும், மீட்கப்பட்டு, நேற்று முன்தினமிரவு அக்கரைப்பற்றுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், நேற்று பகல் மேலும் 4 சிலைகள் மீட்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



கடலில் மிதந்து கொண்டிருந்த இத்தெப்பத்தை, அவ்வழியாகப் பயணித்த ஒலுவில் துறைமுகக் கடற்படையினர் மீட்டதோடு, அதற்குள் இருந்த புத்தரின் சீடரின் ஒருவருடையது எனக் கருதப்படும் 3 அடி உயரச் சிலையும் 2 அங்குலம் அளவிலான புத்தரின் சிலையொன்றையும் நேற்று முன்தினமிரவு மீட்டுள்ளனர்.

பின்னர், விசேட தடயவியல் பொலிஸாரின் உதவியுடன், நேற்று மேற்கொள்ளப்பட்ட தேடுதலில், மேலும் நான்கு புத்த சீடர்களின் சிலைகள் தெப்பத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டு, அக்கரைப்பற்று பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அலங்கரிக்கப்பட்ட இத்தெப்பத்தின் வெளியே பௌத்த கொடிகளை ஒத்த கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளதுடன், தெப்பத்தின் உள்ளே பூஜைகள் நடைபெற்றமைக்கான ஆதாரங்களும் உள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.எல்.ஜெமீலின் உத்தரவுக்கமைய உப பொலிஸ் பரிசோதகர் இந்திர சாந்த தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# பெண் அணிந்திருந்த தங்கச்சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால்சென்று கொண்டிருந்த பெண்ணொருவரின் தங்கச்சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் பருத்தித்துறை வீதி கட்டப்பிராய் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம் பெற்றது.

40 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சங்கிலியே மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களால் அறுக்கப்பட்டது. அந்தப் பெண்ணிடம் தகவல் பெறுவது போன்று சென்று கழுத்தில் அணிந்திருந்த சங்கிலி மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்திருந்த நபரால் அறுக்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7-136)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் 549 பேருக்கு ஆசிரியர் நியமனம்

(நேற்றைய தொடர்ச்சி)

தி.செல்வஞானம் யாழ்ப்பாணம்- 882832139V, நா.குணாளன் யாழ்ப்பாணம்- 901491992V, தி.நளினி யாழ்ப்பாணம்- 896142720V, தி.பபிர்ரா யாழ்ப்பாணம்- 898640396V, த.நிதர்ஷன் யாழ்ப்பாணம்- 892291837V, கு.தாரணி யாழ்ப்பாணம்- 845523754V, ம.ஜனனி யாழ்ப்பாணம்- 887921954V, ந.தருசன் முல்லைத்தீவு-852342692V, பா.சனுயன் யாழ்ப்பாணம்- 870041128V, தெ.நர்மதா யாழ்ப்பாணம்- 886512147V, மா.பத்மராஜ் யாழ்ப்பாணம்- 771002161V, அ.விஜிதர் யாழ்ப்பாணம்- 888101179V, ஜெ.வினிசிகா யாழ்ப்பாணம்- 198955104063, ச.மார்க்சிங் யாழ்ப்பாணம்- 198818103823, அ.அன்பரசி யாழ்ப்பாணம்- 835840603V, சி.சரிதாஷினி வவுனியா- 886953585V, கு.சயந்தன் யாழ்ப்பாணம்-891652240V, ப.ரஜீவனா நெடுங்கேணி- 907380670V, த.விமல்றாஜ் யாழ்ப்பாணம்- 911912180V, க.சர்வசொரூபி யாழ்ப்பாணம்- 905292021V, சி.நிரோஜன் யாழ்ப்பாணம்-891492162V, றா.டிவ்னா யாழ்ப்பாணம்-198772002259, லோ.டெஜ்மன்ராஜா முல்லைத்தீவு- 902801758V, சு.ஜெயசக்தி யாழ்ப்பாணம்-198870810030, க.மயூரன் வவுனியா- 830712950V, ப.சிவதாஸ் யாழ்ப்பாணம்- 880453122V, க.லோஸினி யாழ்ப்பாணம்- 905623850V, ஞா.புஸ்பலிங்கம் முல்லைத்தீவு- 892541558V, செ.கெங்காதரன் யாழ்ப்பாணம்- 885780091V, கு.மௌளீசன் முல்லைத்தீவு- 810433396V, ம.ஹேஜினி யாழ்ப்பாணம்-905393600V, கா.பற்மினி கிளிநொச்சி- 886760132V, து.பாமினி யாழ்ப்பாணம் -895633585V, தி.யாசினி யாழ்ப்பாணம்-896431528V, மு.தர்மினி யாழ்ப்பாணம்-835182894V, க.நாகேந்திரன் யாழ்ப்பாணம்- 8921304 93V.

புவியியல்

அ.யோகினி யாழ்ப்பாணம்- 896980149V, த.பார்த்தீபன் யாழ்ப்பாணம் -900182554V, பா.பிருந்தா யாழ்ப்பாணம்- 895012190V, சி.துஷி யங்கா யாழ்ப்பாணம் -9069229 83V, அ.மேரி அலஸ்ரீனா கிளி நொச்சி- 898252892V, கு.நிறைஞ் சலா யாழ்ப்பாணம்- 887121885V, கி.ரஜீவன் யாழ்ப்பாணம் -890862136V, த.கீர்த்திகா யாழ்ப்பாணம்- 887901635V, அ.லலித்குமார் யாழ்ப்பாணம்-840112730V, ம.நிசன் யாழ்ப்பாணம்- 882342220V, க.காயத்திரி யாழ்ப்பாணம்- 917652988V, ஜ.மஸ்கூறா மன்னார்- 876553082V, யோ.அன்ரனிஅனுசா மன்னார்- 908613147V, இ.ஹரிஹரன் யாழ்ப்பாணம்- 882942465V, தெ.கஸ்தூரி யாழ்ப்பாணம்- 895720011V, ச.சிறோமி யாழ்ப் பாணம்- 905013254V; ம.மேரி டொறின் குரூஸ் மன்னார்- 877600920V, க.பசீலன் யாழ்ப்பாணம்-910722743V, ம.வானதி யாழ்ப்பாணம்-885433928V, டே.மரிய கொறற்றி சோசை மன்னார்- 906451409V, க.கார்த்திகேயன் யாழ்ப்பாணம்- 892012466V, ஸ்ரீ.லிஷானி யாழ்ப்பாணம்- 897623668V, மு.பார்வதி கிளிநொச்சி- 908260899V, கோ.மேனகா யாழ்ப்பாணம்- 905703234V, அ.கோபிகா யாழ்ப்பாணம்- 887943397V, ம.சௌதினி ஜோய் யாழ்ப்பாணம்- 906552957V, து.நிரோசன் வவுனியா- 880600729V, ஏ.ஜீவராசா முல்லைத்தீவு- 791472652V, கெ.நாமகள் யாழ்ப்பாணம்- 897342880V, அ.சுவேதர் யாழ்ப்பாணம்- 895612669V, ஜெ.ஜெய கிருஸ்ணா கிளிநொச்சி- 8504131 77V, ச.சத்தியாயினி யாழ்ப்பாணம்- 907852270V, து.சுகன்யா யாழ்ப்பாணம்- 887712093V, கோ.சுரேஸ் கண்ணா 890270387V, சி.கார்த்திகா யாழ்ப்பாணம்- 908021746V, கி.விஜோஜினி கிளிநொச்சி- 876664186V, அ.நேதிகா யாழ்ப்பாணம்- 896963554V, இ.இந்துஜா யாழ்ப்பாணம்- 897671 646V, செ.மர்லின் யாழ்ப்பாணம்- 897994089V, ஜெ.சஞ்ஜீவன் யாழ்ப்பாணம்- 892741166V, கி.ராஜேந் யாழ்ப்பாணம் -910303279V, மு.நஸீபா பேகம் மன்னார்- 847611936V, ம.கஜானி வவுனியா- 916002335V, க.சிறிகாந் யாழ்ப்பாணம்- 901353212V, இ.தனுஜா யாழ்ப்பாணம்- 897671654V, மா.தெரை சிற்றா திலானி யாழ்ப்பாணம்- 896122770V, யூ.மற்றில்டாறொஸானி வவுனியா- 886502001V, சி.புஸ்பமீரா யாழ்ப்பாணம்-926683152V, சி.துஷ்யந்தினி வவுனியா- 887671966V, தெ.கார்த்திகா யாழ்ப்பாணம்- 918203990V, அ.அரிதா யாழ்ப்பாணம்- 908640500V, ம.மணிநீரஜா யாழ்ப்பாணம்- 916912579V, பா.ரெனிசன் யாழ்ப்பாணம்- 912572684V, ம.புலேந்திரன் யாழ்ப்பாணம்- 873273984V, சி.சிவதீபன் வவுனியா- 890050506V, இ.ஹம்சினி யாழ்ப்பாணம்- 907032582V, இ.மந்தாகினி யாழ்ப்பாணம்- 896353675V, த.சுபாநந்தினி யாழ்ப்பாணம் - 817191606V, கு.ரேணுகா யாழ்ப்பாணம்-907332632V, ம.கஜநேசன் யாழ்ப்பாணம்- 911112973V, செ.ரகுகரன் கிளிநொச்சி- 890824463V, ம.டியோனஸ் பர்னாந்து மன்னார்- 902350144V, த.தர்சன் யாழ்ப் பாணம்- 901822140V, ர.அஜிந்தா யாழ்ப்பாணம்- 906722933V, த.சசிரேகா யாழ்ப்பாணம்- 885191860V, ற.தர்சினி யாழ்ப்பாணம்- 777420780V, த.ஜெயகோபி யாழ்ப்பாணம்- 851284230V, செ.கண்ணதாஸ் யாழ்ப்பாணம்-852162 392V, ஞா.இன்பராஜன் மன்னார்- 881411598V, க.மறீன் ஷங்கா யாழ்ப்பாணம்- 888501126V, யோ.எனஸ்ரீனா கிளி நொச்சி- 886921845V, சி.சசிரேகா யாழ்ப்பாணம்- 878082427V, ச.பாரதி யாழ்ப்பாணம்- 896362429V, வா.பிரபாலினி யாழ்ப்பாணம்- 888460934V, ந.சயந்தா முல்லைத்தீவு- 898282970V, மு.பாத்திமா ஸிபானா வவுனியா-908160789V, சி.கஸ்தூரி யாழ்ப்பாணம்- 908011848V, ஸ்ரீ.பத்மஜா யாழ்ப்பாணம்- 857962168V, வ.சாந்தநாயகம் முல்லைத்தீவு- 861212424V, ம.துவாரகை யாழ்ப்பாணம்- 905042025V, செ.கான்ஸ்டன்சியூஸ் பெஸ்கி மன்னார்- 861552411V, ச.நவமலர் முல்லைத்தீவு- 895253120V, யோ.வித்தியாழினி கிளிநொச்சி- 915512470V, க.ஸீபாசினி யாழ்ப்பாணம்- 906121824V, பா.இராகினி கிளிநொச்சி- 905823213V, செ. விஜோடக்ஸ்சலா கிளிநொச்சி- 916680856V, மு.நஜீமுன்நிஷா வவுனியா- 877102769V, நி.கீர்த்தனா யாழ்ப்பாணம்- 906652919V, ம.கிருஷ்ணகுமார் யாழ்ப்பாணம்- 772491530V, மு.ஹஷீறா பேகம் மன்னார்- 806033014V, சி.வேலழகன் யாழ்ப்பாணம்- 880021281V, தி.கிரிசாந்த் யாழ்ப்பாணம்- 9032 80590V, யோ.அனிதா முல்லைத் தீவு- 905943294V, ம.குயின்ரா யாழ்ப்பாணம்- 908553497V, வி.சுவிஸ்சனா வவுனியா- 908140818V, சு.காந்திகா யாழ்ப்பாணம் -888181717V.

வழிகாட்டலும்
ஆலோசனையும்

செ.வலஜி யாழ்ப்பாணம்- 887362254V, ஞ.மேரியூப்றே சியா யாழ்ப்பாணம்- 896922 360V, த.பிறவுண்சன் யாழ்ப்பாணம் - 910123432V, நா.ஹதீஜா மன்னார் -895081035V, த. டிஷாந்தி யாழ்ப்பாணம்- 918590986V, உ.நிரோஷன் யாழ்ப்பாணம்- 199126303195, ச.காண்டீபன் வவுனியா- 910102419V, பா.நிருஷா யாழ்ப்பாணம்-917863075V, ரா.பிரபாஜினி யாழ்ப்பாணம்- 917333394V, செ.தீபிகா யாழ்ப்பாணம்- 907392503V, ஜ.தட்சாயிணி வவுனியா- 907231577V, ப.விஷ்ணுவர்த்தினி யாழ்ப்பாணம் -897281511V, சி. விதுஷா யாழ்ப்பாணம் -897531364V, அ.அகமது உஸ்மான் மன்னார்- 883132041V, வி.மதிசங்கர் யாழ்ப்பாணம் - 902622357V, ப.போல் நிக்ஸன் வவுனியா- 901640025V, தெ.தட்ஷாயினி வவுனியா- 917941475V, இ.ரேணுகா யாழ்ப்பாணம்-907931722V, க.யானுகா யாழ்ப்பாணம்-915961452V, து.சிறிவர்ணன் யாழ்ப்பாணம்- 843493173V, சி.தமிழரசி வவுனியா-915191118V, ம.நிரோஷன் யாழ்ப்பாணம்- 902761985V, ம.அருள்றோசான் பறுனாந்து மன்னார்- 882901530V, தே.குளோறியற் தேன்மொழி மன்னார்- 917582033V, நா.கஜிதரன் யாழ்ப்பாணம்-9204513 22V, தே.திவ்விய யாழினி யாழ்ப்பாணம்- 907672328V, சி.கார்த்திகா யாழ்ப்பாணம்- 916903642V, ஜெ.பவாநந்தினி யாழ்ப்பாணம்- 875462512V.

தமிழ்

பா.துஷ்யா யாழ்ப்பாணம் - 886603452V , த. அஜந்தகுமார் யாழ்ப்பாணம் - 842412676V , மு. அருந்தஷா யாழ்ப்பாணம் - 838414893V , சி. மேனகதீபன் யாழ்ப்பாணம் -872920277V, நா.சுதர்சினி யாழ்ப்பாணம் - 846442782V, இ.பிரதாபன் யாழ்ப்பாணம் -881921561V , அ. ராஜி யாழ்ப்பாணம்-898302415V, பூ.தனச்செல்வினி யாழ்ப்பாணம் - 878630521V , ச.கமலகாந்தன் யாழ்ப்பாணம்- 912474615V, ச.கோபிதா யாழ்ப்பாணம்-888592210V, அ.நெல்சன் ஞானறாஜ் யாழ்ப்பாணம்- 893094024V, சு.இமயராஜ் யாழ்ப்பாணம்- 790443675V, யோ.பகீரதன் யாழ்ப்பாணம் -840493075V, மு.சஹீரா மன்னார்- 916593961V, பொ.சசிரூபன் யாழ்ப்பாணம்- 861882918V, ம.மனஸ்வினி யாழ்ப்பாணம் - 887811032V, ம.துவாகரன் யாழ்ப்பாணம்- 912572706V , பொ.சற்குணசீலன் யாழ்ப்பாணம் -770424267V , மோ. திவாகரன் யாழ்ப்பாணம் -853032409V, க.சுதாஸ்கரன் யாழ்ப்பாணம் - 861334252V, இ. கிஷோர்குமார் யாழ்ப்பாணம்- 890453414V, வை.கோகிலவாணி யாழ்ப்பாணம் -885043232V, ச.மகிழினி யாழ்ப்பாணம் - 856563561V, வி.சுவாதிகா யாழ்ப்பாணம் - 886670310V, இ.பத்மாதி யாழ்ப்பாணம் -907922197V, தெ.துர்க்காஜினி வவுனியா- 907081362V, யா.நிஹ்றி மன்னார் - 890222471V , இ.ரூபிகா கிளிநொச்சி- 887860858V, வி.தர்சிகா யாழ்ப்பாணம் - 898633837V, ஜெ.செல்வாஜினி யாழ்ப்பாணம்- 755020818V, பொ.சயிந்தினி யாழ்ப்பாணம் - 877203280V, தே.லக்சனா யாழ்ப்பாணம் - 907802116V, ந.ரோசிகா யாழ்ப்பாணம் - 896943944V, ஜெ.ஜெயதீஸ்வரன் யாழ்ப்பாணம் - 880422944V, சு.கவிதா யாழ்ப்பாணம் - 867062840V, வ.ராஜரூபன் யாழ்ப்பாணம் - 890903630V, இ.ராசகுலன் யாழ்ப்பாணம் - 840982327V, வீ.தவசிறீ வவுனியா- 87571 2276V, த.டல்சி யாழ்ப்பாணம் - 895250937V, யோ.ஹரிகரன் கிளிநொச்சி - 841284313V, ப.தினுஜா யாழ்ப்பாணம் - 887 333203V, ந.காஞ்சனா யாழ்ப்பாணம் - 878490142V, ந.லோஜன் யாழ்ப்பாணம் -882462307V, பே.யசோதா தேவி முல்லைத்தீவு - 917323305V, ம.மதுரா யாழ்ப்பாணம் - 887422818V, மு.அருணா யாழ்ப்பாணம் - 88 6101252V, வை.நவதரன் யாழ்ப் பாணம் - 851324143V , சி.பார்த் தீபன் யாழ்ப்பாணம்- 860101106V, பா.பிரதீபன் கிளிநொச்சி- 832985120V , சி.உதயகுமார் யாழ்ப்பாணம்- -740670891V, மா. குலசிங்கம் முல்லைத்தீவு - 780312998V , சி.ரவிசாந்த் யாழ்ப்பாணம்- 873643820V , சி.சிவரூபன் யாழ்ப்பாணம் - 813160455V , மு.சுபாஜினி யாழ்ப்பாணம் - 877261980V , த.அருள்க்குமரன் யாழ்ப்பாணம் - 882193365V, ந.யாழினி யாழ்ப்பாணம்- 86 5643209V , க.சிந்துஷா யாழ்ப் பாணம் -868171952V , இ.விக்கி னேஸ்வரி வவுனியா - 895480770V, பா.கோசலா யாழ்ப்பாணம் - 199067603508, நே.விஷ்ணுதாசன் யாழ்ப்பாணம் - 860392542V, ப.நிரஞ்சலா வவுனியா-875723014V, யூ.பிருந்தா யாழ்ப்பாணம் - 895890782V , மு.குபேரினி யாழ்ப்பாணம் - 847542268V, ஹ.கல்பனா கிளிநொச்சி - 877502317V , ச.விநோகா யாழ்ப்பாணம் - 887754446V , தெ.ரவீந்திரன் யாழ்ப்பாணம் - 761580922V, பு.நளாயினி யாழ்ப் பாணம் - 856671470V, ந.கஜனா யாழ்ப்பாணம் - 887503079V , ச.சிறீகரன் வவுனியா - 851500197V, து.செல்வவதனா யாழ்ப்பாணம் -895902918V , கு.வீணா வாஹினி யாழ்ப்பாணம் -868112387V, பா.தாட்சாயினி யாழ்ப்பாணம் -828392638V , அ.ஞானாயினி யாழ்ப்பாணம் - 896123980V , மோ.மஞ்சுதா வவுனியா- 796781769V, கௌ.நிறைஞ்சனா மல்லாவி - 855903652V, ந.சர்மிளா யாழ்ப்பாணம் - 896572059V, கு.மயூரி யாழ்ப்பாணம்- 908442776V, போ.சாரதா தேவி யாழ்ப்பாணம் - 885032575V ; ர.அனிதா யாழ்ப்பாணம் - 908522664V, பி.கார்த்திகா யாழ்ப்பாணம் - 857692349V , ந.சுமித்திரா கிளிநொச்சி - 857362748V, க.சுதர்சன் யாழ்ப்பாணம் -198913000077 , த.கவிதா யாழ்ப்பாணம் - 885291597V , வா.முகம்மது வாஸித் மன்னார் - 891781318V , அ.சித்திரலேகா யாழ்ப்பாணம் - 787754589V , தி.சிவசக்தி யாழ்ப்பாணம் - 837412366V , சு.ரமணி முல்லைத்தீவு - 857102231V , கு. தவராசா யாழ்ப்பாணம் - 761402919V , பி.நிஷாந்தினி யாழ்ப்பாணம் - 866452822V , ஜெ.கௌசிகா யாழ்ப்பாணம் - 867453334V , கி.தனுஷா யாழ்ப்பாணம் - 19905310193O , தி.வான்நிதி யாழ்ப்பாணம் - 866443653V, இ.சல்ஹானா வவுனியா- 918092463V , ம.தர்ஷனா யாழ்ப்பாணம் -895261866V , உ.நிலோஷினி முல்லைத்தீவு - 815835204V , சு.குகநாதன் யாழ்ப்பாணம் - 830442081V , தி.கஸ்த்தூரி யாழ்ப்பாணம் - 896503120V .ம.துஷ்யந்தி யாழ்ப்பாணம் - 805293543V , ச.ஹேமராணி யாழ்ப்பாணம் - 865823436V, செ. பிறைஸ்சில் றாஜநாயகம் கிளிநொச்சி - 901173702V , க.கவுதமி வவுனியா - 905653130V, யோ.சுதாகரன் யாழ்ப்பாணம் - 852374691V , அ.றொகானி மன்னார் - 908480856V , க.பவித்திரா யாழ்ப்பாணம் - 898640680V , ம.மேரி ஜக்கினோ மன்னார் - 877692540V , சு.கௌரி யாழ்ப்பாணம் -885872956V, ச.அனுஷா யாழ்ப்பாணம் - 828621157V, தி.சுரேகா யாழ்ப்பாணம் - 898310671V , ஜெ.ஜென்சி அமில்டா கிளிநொச்சி - 836401972V , கோ.துர்காலினி யாழ்ப்பாணம் - 868452200V , செ.செல்வராஜினி யாழ்ப்பாணம் - 876672570V , ம.இந்துமதி யாழ்ப்பாணம் -915883443V, சு.தனுஷா யாழ்ப்பாணம்- 877750604V, ப.மதிவதனி யாழ்ப்பாணம் - 877162427V , வி.ராதிகா யாழ்ப்பாணம்- 817104630V , வே.கௌரீஸ்வரி யாழ்ப்பாணம் -816460590V , பி.செல்வராணி யாழ்ப்பாணம் - 896622064V, செ.பிரியந்தி யாழ்ப் பாணம் - 888631151V , கா.தர்சினி முல்லைத்தீவு- 875433580V,. அ.மஹீஸா பானு வவுனியா- 876321530V, மே.அனிதா யாழ்ப்பாணம் - 886142277V , க.மிதுலா யாழ்ப்பாணம்- 875720732V, ல.காஜத்திரி யாழ்ப்பாணம்-827601985V, றோ.றொஷான் யாழ்ப்பாணம் - 892192642V, த.துளசிகா யாழ்ப்பாணம் - 906153114V , ம.லிலானி யாழ்ப்பாணம்-906443104V , க.சுபதர்சனா யாழ்ப்பாணம் - 885191061V , அ.சஜீபன் முல்லைத்தீவு- 883254643V , பா.நளினி யாழ்ப்பாணம் - 865814267V , ந.சர்மளா யாழ்ப்பாணம் - 888663045V , மு.யதீஸ்வரன் யாழ்ப்பாணம் - 852381736V, லி.மாலினி யாழ்ப்பாணம்- 827054011V , க.நர்மிலா யாழ்ப்பாணம் - 846703470V , க.நாகறஞ்சினி யாழ்ப்பாணம் - 835080 323V , சு.ஜாமினி யாழ்ப்பாணம் - 198369502650 , யோ.சில்வெஸ்ரர் லக்ஸ்ரன் யாழ்ப்பாணம் - 752530580V , த.விஜய தாரணி யாழ்ப்பாணம் - 905213890V , தி. பிறேமானந்தா யாழ்ப்பாணம் - 880393006V , ந.ரமா யாழ்ப்பாணம் - 826002468V, வி.கிருபா வவுனியா - 891474423V , த.கீதா ஜினி யாழ்ப்பாணம்- 858202078V , க.தவப்பிரிய யாழ்ப்பாணம் - 907172635V, சு.சசிகலா யாழ்ப்பாணம் - 836922042V , ச.கோபிதா யாழ்ப்பாணம் - 897682699V , மு.சித்தி றியாஸா வவுனியா - 897144301V.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான நிலையில் பாராளுமன்றம்; என்னை நீக்க சம்பந்தனே காரணம்

## தினேஷ் குற்றச்சாட்டு





(கொழும்பு)

தனக்கு ஒருவார கால பாராளுமன்ற தடை விதிக்கப்பட்ட நடவடிக்கை, ஏற்கனவே திட்டமிடப்பட்ட ஒன்று என கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இந்தத் தடையின் பின்னால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் காணப்படுகின்றார்.

பாராளுமன்றத்திலுள்ள 52 உறுப்பினரைப் புறக்கணித்து, 16 உறுப்பினர்களைத் திருப்திப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவது கவலையளிக்கின்றது.

பாராளுமன்றத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முன்னர், கட்சித் தலைவர்களை சபாநாயகர் அழைத்து கலந்துரையாடுவார். இருப்பினும், எனக்கு எதிரான தீர்மானம் எடுக்கப்பட்ட போது பாராளுமன்ற நடைமுறை சபாநாயகரினால் நிராகரிக்கப்பட்டது.

பாராளுமன்றம் ஆபத்தான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றது.

பாராளுமன்றத்துக்குள் பொலிஸாரை அழைப்பது என்பது பயங்கரமான ஒன்று. இவ்வாறு நடைபெற முன்னர் தான் கூட்டு எதிர்க்கட்சி பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்து வருகின்றது.

ஏதும் நடந்ததற்குப் பிறகு அழுவதை விடவும்.வர முன்னர் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றே நாம் கூறுகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# முகத்தை மூடும் தலைக்கவசத் தடை; முக்கிய அலுவலகங்களில் முறைப்பாடு

முகத்தை முழுமையாக மூடும் தலைக்கவசத்துக்கு தடை விதித்து, அரசாங்கத்தால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியானது, மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களின் பாதுகாப்பு உரிமையை கட்டுப்படுத்துவதாக அமைந்துள்ளது என்று கூறி, இலங்கை மோட்டார் சைக்கிளின் ஓட்டுநர்கள் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகளுக்கான அவசர நிதிக்கான இலங்கை அலுவலகத்திலும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை அலுவலகத்திலும் இந்த முறைப்பாடு, நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட இந்தப் பிரச்சினைக்கு, ஒழுங்கானதொரு தீர்வை வழங்குவதற்கு, அரசாங்கம் தவறிவிட்டது என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், குழந்தைகளுக்கான சிறப்பான தலைக்கவசங்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால், அவர்களுடைய வாழ்க்கைக்கு ஆபத்து ஏற்படும் என்பதற்குமாகவே, ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகளுக்கான அவசர நிதிக்கான அலுவலகத்தில் இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும், விபத்து ஏற்படும் போது பாதிக்கப்படுவோருக்கு, அநாவசிய செலவு ஏற்படவுள்ளது என்பதை தெரிவிக்கும் முகமாகவே, சர்வதேச நாணய நிதி அலுவலகத்தில் முறைப்பாடு செய்ததாக, இலங்கை மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் சங்க செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இந்த அமைதியான கொள்கை, இந்தப் பிரச்சினையை மேலும் மோசமடைய வைப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# பசுபிக் பிராந்திய கடல்சார் சக்திகளுடன் இணைந்து செயற்பட இலங்கை ஆர்வம்

வணிகத்தை பாதுகாப்பதற்கும், அமைதியான கடற்பயணங்களை உறுதிப்படுத்துவதற்கும் இந்தியப் பெருங்கடல் மற்றும் அதற்கு அப்பால் கடல்சார் சக்திகளுடன் இணைந்து செயற்பட இலங்கை ஆர்வமாக இருக்கிறது என்று அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வோஷிங்டனைத் தளமாகக் கொண்ட ஹட்சன்நிறுவகத்தில் 'இலங்கை இந்தோ- பசுபிக்கில் வளரும் கடல்சார் கேந்திரம்' என்ற தொனிப்பொருளில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"பண்டைய காலத்தில் இருந்தே இலங்கையின் அமைவிடம் அமைதி மற்றும் உறுதிநிலையை அடைவதற்கான கடல்சார் கேந்திரமாக இருந்து வந்துள்ளது.

இந்தியப் பெருங்கடலில் இந்த முக்கிய வகிபாகத்தை மீண்டும் அடைவதிலும், அதனை இந்தோ- பசுபிக் வரை விரிவாக்கம் செய்வதற்கும் இலங்கை அக்கறை கொண்டுள்ளது.

இந்தோ- பசுபிக் பிராந்தியத்தின் வளர்ந்த பிரதான நாடுகளுடன் கடல்பாதைகளை இணைக்கும்இடத்தில்இலங்கை அமைந்துள்ளது. இந்த பரபரப்பான கடல்பாதை இலங்கைக்கு தெற்கே 6 கடல் மைல் தொலைவில் உள்ளது.

இதன் வழியாக உலகின் மூன்றில் இரண்டு பங்கு பெற்றோலிய விநியோகமும், அரைப்பங்கு கொள்கலன் போக்குவரத்தும் இடம்பெறுகின்றன.

கொழும்பு துறைமுகம் ஏற்கனவே தெற்காசியாவில் போக்குவரத்து நெருக்கடிமிக்க துறைமுகமாக இருக்கிறது.

தற்போதைய அனைத்துலக சூழலில் பல நாடுகள் பாதுகாப்பற்றவையாகவும், கொந்தளிப்பு அல்லது சுற்றுச்சூழல் சவால்களுக்கு முகம் கொடுப்பதாகவும் இருக்கின்றன.

இந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை அமைதியான நாடாக உள்ளது.

ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டு, பொருளாதார வளர்ச்சி மீளமைக்கப்பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## புகையிரதத்தில் மோதி வெளிநாட்டவர் பலி

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த புகையிரதத்தில் மோதுண்டு, அவுஸ்திரேலியப் பிரஜையொருவர் பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த விபத்து நேற்று அலவ்வ- வலகுபுர பகுதியில் வைத்து இடம்பெற்றதாகவும் சடலம், பொல்கஹவெல வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# பாடசாலை சிற்றுண்டிச்சாலையில் மதுபானம் தயாரிப்பு; ஒருவர் கைது

ஹிங்குராங்கொட நகரிலுள்ள முக்கிய பாடசாலையொன்றின் சிற்றுண்டிச்சாலையில் மதுபான பீப்பாவொன்றை மறைத்து வைத்திருந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் கொழும்பு கலால் திணைக்கள விசேட சுற்றிவளைப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் குறித்த பாடசாலையில் சிற்றுண்டிச்சாலை நடத்திவரும் ஒருவர் என ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து மதுபானம் வடிக்க பயன்படுத்தும் உபகரணங்களையும் கலால் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

# யாப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை வழங்கியது தவறு

## பேராசிரியரின் கருத்தால் கூட்டத்தில் குழப்பம்

இலங்கையின் அரசியல் சாசனத்தில் பௌத்த மதத்திற்கும், சிங்கள இனத்திற்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளமை பாரிய தவறு என்று பேராதனைப்பல்கலைக் கழகத்தின் முன்னாள் பேராசிரியர் எம்.ஓ.ஏ. டி சொய்ஸா தெரிவித்த கருத்தால் கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

பேராசிரியர் சொய்ஸாவின் உரைக்கு கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்த அரச அதிகாரிகள் கடும் எதிர்ப்பை தெரிவித்ததுடன் பேராசிரியர் தனது கூற்றை மீளப்பெற்றுக்கொள்வதுடன் அதற்காக அவர் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் வலியுறுத்தி குழப்பம் விளைவித்துள்ளனர்.

மைத்திரி - ரணில் அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டு வரும் புதிய அரசியல் சாசனம் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தும் கருத்தரங்கொன்று கண்டியிலுள்ள கண்டிய நடனக் கலை மண்டபத்தில் இடம்பெற்றது.

அரசியல் மறுசீரமைப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கருத்தரங்கில் அந்தக் குழுவின் தலைவரான சட்டத்தரணி லால் விஜேநாயக்கவும், விசேட பேச்சாளராக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் எம்.ஓ.ஏ.டி சொய்ஸா கலந்துகொண்டிருந்தனர்.

பேராசிரியர் சொய்ஸா உரையாற்றுகையில், 1972 ஆம்ஆண்டு அரசியல்யாப்பை தயாரிக்கும் போது அப்போதைய பிரதமர் பௌத்த மதத்திற்கும் சிங்கள இனத்திற்கும் முன்னுரிமை கொடுத்து அரசியல் சாசனத்தை தயாரிக்குமாறு பணித்தமை மகா தவறு என்று குறிப்பிட்டதுடன் அவ்வாறான ஒரு செயலை சிறிமாவோ பண்டாரநாயக்க செய்யாதிருந்திருக்கலாம் என்றும் கூறினார்.

இது குறித்து அங்கு வந்திருந்த கண்டி பிரதான வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் நிஸ்ஸங்க விஜேவர்தன கேள்வி எழுப்பினார். பேராசிரியர் கூறுவது போல் பௌத்த மதத்திற்கும் - சிங்கள இனத்திற்கும் அரசியல் சாசனத்தில் முன்னுரிமை கொடுத்தது தவறு என்றால் புதிய அரசியல் யாப்பில் அந்த விடயங்கள் நீக்கப்படும் என்பதையா குறிப்பிடுகின்றீர்கள் என வைத்தியர் கேள்வி எழுப்பினார். இதனால் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. (இ-7)

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணிதேவி ஐயாத்துரை



நெல்லியடி வடக்கு வதிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தவமணிதேவி ஐயாத்துரை அவர்கள் 10.03.2017 காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற கட்டைத்தம்பி ஐயாத் துரை (ஆசிரியர் ) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தர் அப்பையா (ஆசிரியர்), திருமதி அன்னபூரணம் அப்பையா அவர்களின் அன்பு மகளும் வாரியார் கட்டைத்தம்பி, இலட்சுமி கட்டைத்தம்பி ஆகியோரின் மருமகளும் வீரகத்தி கனகசபை, வீரகத்தி சிவலிங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருமதி. ஜனககுமாரி குணரத்தினம் (ஆசிரியர்), ஐயாத்துரை ஜனககுமார் (நோர்வே), ஐயாத்துரை ஸ்ரீ ஜனககுமார் (சுவிஸ்), திருமதி. ஜனகராணி சத்தியதாசன் (குடும்பநல உத்தியோகத்தர், மந்திகை ஆதார வைத்தியசாலை), திருமதி. ஜனகமாலினி விஜயரத்தினம்( ஆசிரியர், யா/பொலிகண்டி இ.த.க. பாடசாலை), திருமதி ஜனக நளினி யோகதாசன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தாயாரும் சின்னத்துரை குணரத்தினம் (ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர்), அரியகுட்டி சத்தியதாசன்(பிரதேசபை,கரவெட்டி), வேலன் விஜயரத்தினம் (கெருடாவில், தொண்டை மானாறு), இராசபுத்திரன் யோகதாசன் (ரூபவாகினி கூட்டுத்தாபனம், கொழும்பு), திருமதி யோகபவானி ஜனககுமார் (நோர்வே), திருமதி சகுந்தலா ஸ்ரீஜனககுமார் (சுவிஸ்), ஆகியோரின் மாமியாரும் குணரத்தினம், குணஜீவன், ஜெனித்தா (வவுனியா), திருமதி துஷியந்தி கௌசிகன் (லண்டன்), வேணுகீதன் சத்தியதாசன், கஜரூபன் சத்தியதாசன், வருணப்பிரியன் சத்தியதாசன், ஜனனி ஜனககுமார் (நோர்வே), வைஷாலி ஜனககுமார் (நோர்வே), ஜலஷன் ஸ்ரீஜனககுமார்(சுவிஸ்), துலாபன் ஸ்ரீஜனககுமார்(சுவிஸ்), நர்த்தனி ஸ்ரீஜனககுமார் (சுவிஸ்), அவனீஸ் யோகதாசன் (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் ஆருக்ஷன் குணஜீவன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 12.03.2017 (ஞாயிற்றுக்கிழமை) இன்று முற்பகல் 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்.

தவமனை,
கலாநிலையம்,
நெல்லியடி வடக்கு,
வதிரி.

தகவல்
குடும்பத்தினர்

(சி-7787)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படத்தைப் பார்த்து இருக்கிறாரென தெரிவிக்கப்பட்ட என் கணவர் எங்கே?

## எனது பிள்ளையின் அப்பாவைத் தாருங்கள் என உருக்கமாகக் கண்ணீருடன் தெரிவித்தார் தர்சினி






2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற ஆனந்தபுரம் சுற்றி வளைப்பின் போது எனது கணவர் படுகாயமடைந்துள்ளார் என பாதுகாப்பு அமைச்சை மேற்கோள்காட்டிஇலங்கைவானொலி ஒன்றில் அறிவிக்கப்பட்ட எனது கணவர் எங்கே? என்ன செய்தீர்கள்? எனது பிள்ளையின் அப்பாவைத் தாருங்கள் என உருக்கமாக தெரிவித்துள்ளார் காணாமல் ஆக்கப்பட்ட மூர்த்திசந்திரபோஸின்மனைவி தர்சினி.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் 20 ஆவது நாளாகவும் நேற்று இரவு - பகலாக தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்ட சந்திரபோஸ் தர்சினி (வயது-35) என்பவரே தனது கணவன் காணாமல் ஆக்கப்பட்டது தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே கண்ணீர்மல்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்று. நான்காம் திகதி இருக்கும் என நினைக்கிறேன். இலங்கை பாதுகாப்பு அமைச்சை மேற்கோள் காட்டி இலங்கை வானொலி ஒன்றில் எனது கணவரின் விபரங்களை முழுமையாக குறிப்பிட்டு அதாவது புலிகளின் இராதா வான்காப்பு படையின் தாக்குதல் தளபதியான அன்பன் எனப்படும் மூர்த்தி சந்திரபோஸ் என்பவர் ஆனந்தபுரம் சுற்றிவளைப்பு தாக்குதலில் படுகாயமடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டார். இதனை வலைஞர் மடத்தில் வைத்து நான் நேரடியாகவே வானொலி மூலம் கேட்டேன். அத்தோடு இந்த சுற்றி வளைப்பில் தளபதிகளான பானு. தீபன். விதுசா.துர்க்கா போன்றோரும் இருந்ததாகவும் அவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என்றும் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் போராளியான எனது தம்பி. குறித்த சுற்றி வளைப்பில் இருந்து தப்பி வெளியேறி வந்து எனது கணவரும் ஆனந்தபுரம் சுற்றி வளைப்பிற்குள் இருந்தார் என உறுதிப்படுத்தினான்.

எனவே எனது கணவரின் பெயர். பதவி உள்ளிட்ட முழுமையான விடயங்களை குறிப்பிட்டு செய்தியறிக்கையில் தெரிவித்தமையானது அவர் இராணுவத்தினரால் கைது செய்யப்படாது இருக்க வாய்ப்பில்லை. அவரது விபரங்களை இராணுவம் அவரிடமிருந்தே பெற்றிருக்க வேண்டும் எனத் தெரிவித்த தர்சினி,

பின்னர் நாங்கள் செட்டிகுளம் வலயம் நான்கு முகாமுக்குச் சென்ற போது அங்கு பூசாவில் இருந்து சில இளைஞர்களை பரீட்சை எழுதுவதற்காக புலனாய்வுபிரிவின் அதிகாரிகள் அழைத்து வந்தார்கள். அந்த அதிகாரிகளிடம் எனது கணவரின் புகைப்படத்தை காட்டி வினவிய போது. அவர் பூசாவில் இருக்கின்றார். கவலைப்பட வேண்டாம். விடுதலை செய்யப்படுவார் என்றும் தெரிவித்தனர். ஆனால் இதுவரை எதுவும் நடக்கவில்லை. நானும் பூசா. வெலிக்கடை. நான்காம் மாடி என பல இடங்களுக்கு ஏறி இறங்கி விட்டேன். எல்லா இடங்களிலும் இல்லை என்றே கூறி வருகின்றார்கள்.

எனவே பாதுகாப்பு அமைச்சினால் உறுதிப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்ட செய்தியில் எனது கணவரின் முழுமையான விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. அவ்வாறு தெரிவிக்கப்பட்ட தகவல்கள் பாதுகாப்பு அமைச்சு எங்கிருந்து பெற்றது? எனது கணவரை தவிர குறித்த அந்த நெருக்கடியான காலத்தில் தகவலை வழங்கியது யார்? படுகாயமடைந்த என் கணவர் எங்கே? பூசாவில்இருப்பதாக புகைப்படத்தை பார்த்து தெரிவிக்கப்பட்ட என் கணவருக்கு என்ன நடந்தது.? என்ற தர்சினியின் கேள்விகளுக்கு பதில் எப்போது கிடைக்கும்?

தயவு செய்து எனது மகனின் அப்பாவை தாருங்கள். நாங் கள் இன்று சமூகத்தில் எல்லா நெருக்கடிகளையும் சந்தித்து வருகின்றோம். முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ் வளித்து விடுதலை செய்தது போன்று எனது கணவரையும் விடுதலை செய்யுங்கள் என வினயமாக கோருகின்றேன் என்றார். (2-312)




## வடக்கு மாகாணசபை உறுப்பினரின் நிதியொதுக்கீட்டில் துவிச்சக்கரவண்டிகள் மாணவர்களுக்கு வழங்கி வைப்பு



(மல்லாவி)

வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் றிப்கான் பதியுதீனின் வடக்கு மாகாண சபையின் பன்முகப்படுத்தப் பட்ட நிதியொதுக்கீட்டிலிருந்து பொருளாதார ரீதியாக பின் தங்கிய நிலையில் காணப்படும் குடும்பங்களில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது. தாராபுரம், எருக்கலம்பிட்டி, சாந்திபுரம், பெரிய குஞ்சுக்குளம் தாழ்வுப்பாடு. பெரிய பண்டிவிரிச்சான். கரிசல் ஆகிய கிராமங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது துவிச்சக்கர வண்டிகளை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி பிராந்திய பணிப்பாளர் என்.எம்.முனவ்பர் அமைச்சரின் இணைப்பாளர் எம்.முஜாஹிர் உட்பட அன்வர் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்துள்ளனர். (2-15)

### சர்வதேச மகளிர் தினத்தையொட்டி

## உள்ளூர் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனை

சர்வதேச மகளிர தினத்தை முன்னிட்டு உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி மற்றும் விற்பனை வவுனியா கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம். இலங்கைக்கான ஒக்ஸ்பாம் வதிவிட பிரதிநிதி பொஜன் மற்றும் பொறுப்பாளர் ஏ.ரேவதி உட்பட பலரும் கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

இதன்போது. உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் மற்றும் பெண்கள் தொடர்பான விழிப்புணர்வு நாடகமும் நடைபெற்றுள்ளது. (2-15)

## பன்னங்கண்டி மக்களின் பிரச்சினைகள் நியாயமானது; தீர்க்கப்படவேண்டும்

### உரிய மட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படும்-முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்

(பரந்தன்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பன்னங்கண்டி மக்கள் காணி அனுமதி. வீட்டுத் திட்டம் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொண்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் நியாயமானது. அதனை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



தொடர்கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுப்பட்டு வரும் மக்களை அண்மையில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,


கடந்த காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் சிவபுரம். நாதன் குடியிருப்பு. உழவனூர் மக்களின் பிரச்சினைகளையும் உரிய மட்டங்களுக்கு எடுத்துச் சென்று பல அழுத்தங்களை கொடுத்து காணி அமைச்சின் உயரதிகாரிகளை கிளிநொச்சிக்கு அழைத்து வந்து மக்களின் நிலைமைகளை நேரில் பார்வையிடச் செய்து பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தோம்.

தற்போது மேற்குறிப்பிட்ட கிராம மக்கள் வீட்டுத்திட்டங்கள் அமைக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இருந்தபோதும் அதிகாரம் இல்லை என்பதற்காக முயற்சி செய்யாது இருந்து விடப் போவதில்லை. கடந்த காலங்களில் ஏற்பட்ட அறிமுகங்கள். தொடர்புகள் ஊடாக பன்னங்கண்டி மக்களின் பிரச்சினைகள் உரிய மட்டங்களுக்கு எடுத்துச்செல்லப் படும். கடந்த காலங்கள் போன்று உறுதியான முடிவுகள் எதனையும் என்னால் வழங்க முடியாது. மக்களுக்கான எனது முயற்சிகளை கைவிடப் போவதில்லை எனத் தெரிவித்தார். (2-312)

### கள்ளியடிச் சந்தி - சிராட்டிக்குளம் வரையான

## வீதி சீரின்மையால் நான்கு கிராமங்களின் மக்கள் அவதி



மன்னார் பிரதான வீதி கள்ளியடிச் சந்தியில் இருந்து சிராட்டிக்குளம் வரையான 18 கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதுடன் பயணிக்கும் போது பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் நீர் தேங்கி நிற்கும் நிலையும் காணப்படுவதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் இவ் வீதியால் பேருந்து சேவையும் இடம் பெறுவதில்லை. இவ் வீதியை ஆத்திமோட்டை, கூராய், சீது விநாயகர்குளம், சிராட்டிக்குளம் ஆகிய கிரா மங்களைச் சேர்ந்த 250 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று வருவதற்கு பயன்படுத்தி வருகின்றனர்.

கிராமங்களில் வைத்திய சாலைகள் எதுவும் இல்லாத காரணத்தினால் பள்ளமடு வைத்தியசாலையை மக்கள் 20 கிலோ மீற்றர் தூரம் போக்குவரத்தைச் செய்தே வைத்திய சேவையைப் பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இப் பாதை சீரின்மையால் நோயாளர் காவு வண்டி மூலம் நோயாளர்களைக் கொண்டு செல்வதிலும் சிரமம் காணப்படுகின்றது.

இக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயத்தை பிரதான தொழிலாகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகும். இவர்களின் விவசாய உற்பத்திகளை சந்தைப் படுத்துவதிலும் அம் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு வீதி சீரின்மை காரணமாக அரச உயர் அதிகாரிகள் தமது கிராமங்களை வந்து பார்வையிடுவதிலும் சிரமப்பட்டு வராமல் செல்லும் நிலையும் காணப்படுகின்றது என பாதிக்கப்பட்ட கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (2-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியை கொல்லக்கூடாது.
அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்.
– சாமுவேல் கால்ரிட்ஜ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## துச்சாதனா! நின் செயல் கொடுமை! என்றுரைக்க ஒருவர் இல்லையே!

பாஞ்சாலி சபதம் என்று தனித்துவமாகக் கவி படைத்தவன் பாரதி.

மகாபாரதம் என்ற இதிகாசத்தைப் படித்த பாரதியாரால் திரௌபதிக்கு நிகழ்ந்த கொடுமையைத் தாங்க முடியவில்லை.

யுகம் கடந்தும் துரியோதனனின் கொடுமையும் துச்சாதனனின் பாதகச் செயலும் திரௌபதி பட்ட வேதனையும் பாரதியைக் கடுமையாகப் பாதித்தது.

இப்பாதிப்பில் இருந்து விடுபட முடியாத பாரதி பாஞ்சாலி சபதம் என்பதைப் படைத்தான். அந்தப் படைப்பு பாரதியின் உணர்வுகளை ஆற்றுப்படுத்தியது.

ஆடை குலைவுற்று நிற்கிறாள் அவள் ஆ என்று அழுது துடிக்கிறாள் வெறு மாடு நிகர்த்த துச்சாதனன் அவள் மைகுழல் பற்றியே இழுக்கிறான்... எனப் பாரதியின் இதயக் கொதிப்பு மொழி வரிகளாக வெடிக்கின்றன.

பாரதியின் இக்கடுப்புக்கு அடிப்படைக் காரணம், ஒரு பெரும் சபையில் திரௌபதியை அழைத்து அவளின் ஆடையைக் களையத் தலைப்பட்ட போது,

அப்பெரும் சபைதனில் வீற்றிருந்த வீஷ்மர், துரோணர், அசுவத்தாமன் போன்றவர்கள் மௌனமாக இருந்தனரல்லவா. இதுவே பாரதிக்கு கோபத்தைக் கொடுத்தது.

கதைக்க வேண்டியவர்கள் கதைக்கத் தவறினால் நீதி அழியும். அதர்மம் ஓங்கும்.

நல்லவர்கள் செயலற்றவர்களாக இருந்தால் அதனால் எவருக்கும் எந்தப் பயனும் கிடையாது. மாறாக அக்கிரமமும் அநியாயமும் கோலோச்சும் என்பதே உண்மை.

பாரதப் போர் ஏற்படவும் கௌரவர் சேனை அழியவும் காரணம் திரௌபதியின் துகிலை துச்சாதனன் பற்றி இழுத்த போது அதைத் தடுக்காமல் – தவறு என்று இடித்துரைக்காமல் மந்திரிகளும் மாகாண சபை உறுப்பினர்களும் இருந்ததுதான்.

துரியோதனனின் சபையில் மௌனம் காத்தது போல, நேற்றைய தினம் வவுனியாவில் நடந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் இலங்கை அரசுக்குக் கால அவகாசம் வழங்குதல் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது பலரும் மௌனம் காத்தனர்.

அந்தோ! என்னே அநீதி செய்கிறீர்கள். பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் துடிதுடித்து இறந்த கொடும் செயல் கண்டும் நீவிர் மனம் திருந்தவில்லையோ! இலங்கை அரசுக்குக் கால அவகாசம் கொடுப்பது முறையோ! நீதியோ! உங்களுக்கு போரில் அழிவு ஏற்பட்டால் இதைப் பொறுப்பீரோ!

அந்தோ! தமிழ் மக்களுக்கு அநீதி செய்து உமக்கும் உம் சந்ததிக்கும் ஏன்தான் பழி சுமக்கிறீர். போகும் வயதிலும் இப்படியொரு கொடூரமோ.

இலங்கை அரசுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இக் கொடுமை செய்கிறீரோ என்றுரைக்க வவுனியாக் கூட்டத்தில் ஒருவர் இல்லையே.

இறைவா! என்செய்வோம் நீயேனும் இக் கயவரை தண்டிக்க மாட்டீரோ என்று தமிழ் மக்கள் மனம் குமுறுகிறார்கள்.

இங்கோ பதவி ஆசை பிடித்தவர்கள் உண்மை தெரிந்தும் மௌனமாய் இருக்கிறார்கள். இஃது அறிவுக்கே அன்றி வேறு எதற்குமல்ல. இது சத்தியம்.

## அகதிகளின் எதிர்காலம் கேள்விக்குறி

### பிரிட்டனின் புதிய கொள்கையால் அச்சம்

பிரிட்டனில் அகதி அந்தஸ்துப் பெற்றுப் பின்னர் நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்களை மீண்டும் உத்தியோகபூர்வமாக மீள்பரிசீலனைக்கு உட்படுத்தும் புதிய கொள்கை அல்லது நடைமுறை ஒன்றினை உள்துறை அலுவலகம் வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய உள்துறை அலுவலகத்தினால் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ள இந்தப் புதிய கொள்கை அல்லது நடைமுறையின் பிரகாரம் பிரித்தானியாவில் முதன் முதலாக அகதி அந்தஸ்துப் பெற்று ஐந்து வருடங்களின் பின்னர் நிரந்தர வதிவிட உரிமைக்காக விண்ணப்பிப்போர் அனைவரினதும் கோரிக்கைகளை மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

அகதி அந்தஸ்துவழங்கப்பட்டு ஐந்து வருடங்கள் கழிந்தவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் அவர்களுக்கான நிரந்தரவதிவிட உரிமை அதன் தொடர்ச்சியாக வழங்கப்படும் நடைமுறை ஒன்றே இதுவரை பிரித்தானியாவில் நிலவிவந்தது.

ஆனால் குடிவரவுக் கொள்கைகளில் மேலும் இறுக்கமான நடைமுறைகளை அறிமுகப்படுத்தும் வகையில் நேற்று முன்தினம் வெளியான இந்தக் கொள்கை அல்லது நடைமுறையின்பிரகாரம், ஏற்கனவே அகதி அந்தஸ்து வழங்கப்பட்டு, அடிப்படையில் அவசியமான ஐந்து வருடங்களைக் கழித்தவர்கள் நிரந்தர வதிவிடக்கோரிக்கைக்கு விண்ணப்பிக்கும்போது, அவர்கள் மீண்டும் சொந்த நாடுகளுக்குத் திருப்பி அனுப்பப்பட்டால் அவர்களுக்கு ஆபத்துக்கள் இன்னமும் இருக்கின்றனவா என்பது குறித்து மீளாய்வு செய்யப்படவிருக்கிறது.

இந்த மீளாய்வு இடம்பெறும் போது குறித்த நாட்டில் அப்போது உள்ள களநிலைமைகளும் கருத்திற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதன் பிரகாரம், பாதுகாப்பு இன்னமும்தேவைப்படுபவர்களுக்கான நிரந்தர வதிவிட உரிமை இயல்பாகவே வழங்கப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுவிடயத்தில், கனதியான அறிவுறுத்தல்களும், வழிகாட்டல்களும் குறித்த விண்ணப்பங்களைக் கையாளும் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் உள்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 06.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில் நெடுந்தீவுபிரதேசம், பொக்கணை, கெருடாவில், தொண்டைமானாறு, அக்கரை, மயிலியதனை, சிதம்பரா வடக்கு, தெல்லிப்பழை, மாதனை, தெல்லிப்பழை சந்தை வீதி, தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வீதி, ஆஸ்பத்திரி வீதியில் காரைநகர் வீதி சந்தியிலிருந்து கே.கே.எஸ் வீதி சந்தி வரை, சீனிவாசகம் வீதி, சிவன்பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே.எஸ் வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச்சந்தி வரை, சப்பல் வீதி, யாழ் 1ம், 2ம், 3ம், 4ம் குறுக்குத் தெருக்கள் வேம்படி வீதி சந்தி வரை, பிரதான வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதாகபே வரை, பொற்பதி, கோண்டாவில் வோட்டர்வேர்க்ஸ் கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம் கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, இராணுவ முகாம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, யாழ். சிறைச்சாலை, யாழ் பொலிஸ் நிலையம், யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், யாழ்.பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் வவுனியா நகரப் பிரதேசம், சூசைப்பிள்ளையார் குளம், மில் றோட், 1ஆம் குறுக்குத் தெரு, 2ம் குறுக்குத் தெரு, ஓவியா விடுதி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## சிறைச்சாலைக்குச் செல்லும் முகச்சாயலுக்கு முற்றுப்புள்ளி வைத்து முக்காடு இல்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சிக்குள் நுழைவோம்

இயேசு உயர்ந்த மலையில் தோற்றம் மாறிய நிகழ்வை குறிக்கும் பைபிள் பகுதி இன்று எமக்கு தரப்படுகின்றது. பி.பி.சி நிறுவனம் தயாரித்த 'மனித உடல்" எனும் ஒரு அறிவியல் திரைப்படத்தை பற்றி இங்கு குறிப்பிடுவது நல்லது.:' காலையில் எலாம் அடிக்கிறது. தூங்கிக் கொண்டிருந்த ஓர் இளைஞனின் காதுகளைத் தாக்கிய அந்த ஒலி அலைகளால் அவன் காதுக்குள் இருந்த செல்களில் மாற்றங்கள். எலாம் கேட்டு கண் விழித்தான். கண்ணிமை உரசியதால் விழியின் மேல் படலத்தில் இருந்த செல்களில் மாற்றங்கள். அந்த இளைஞனின் அன்றைய வாழ்வுக் கான மாற்றங்கள் தொடங்கி விட்டன" என்ற வரிகளுடன் அந்த திரைப்படம் ஆரம்பமாகிறது. மாற்றம் என்பது மனிதனுக்கு அடிப்படையாக தேவையானது. மனித வாழ்வின் மையம். குழந்தைப் பருவம், வாலிபப் பருவம்,

### பரமபிதா காட்டிய பாதை

முதுமைப்பருவம்என்று மனித உடலிலும் மனதிலும் அறிவிலும் எத்தனை மாற்றங்கள்? பருவ மாற்றங்கள், கலாசார மாற்றங்கள், எண்ணங்களில் மாற்றங்கள். மாற்றங்கள் நேரும் போது போராட்டங்களும் இருக்கும். ஒவ்வொரு மாற்றமும் குழந்தை பெறுவது போன்றது. துன்பம், போராட்டம் இவற்றினின்று பிறப்பது மாற்றம். நம்மைச் சுற்றி எழும் மாற்றங்கள் ஒரு கனவுலகை உருவாக்கினாலும், அந்தக் கனவுகளின் நடுவிலும் வாழ்வின் குறிக்கோளை, இலட்சியத்தை நினைவில் கொள்வது நமக்கு நல்லது.

உருமாற்றங்கள்என்ன? ஏன், எப்படி அது உண்டாகிறது? மாற்றம் தேவையா. இல்லையா? மாற்றம்நல்லதா, கெட்டதா? கேள்விகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இந்த இடத்தில் முன்பு வாசித்த ஒரு கதையை சொல்லித்தான் ஆகவேண்டும்: 'இறுதி இரவுணவு" என்ற உலகப்புகழ்மிக்க ஓவியத்தை லியானார்டோ டாவின்சி வரையும் போது நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் ஒரு சம்பவம் இது.

லியானார்டோ டாவின்சி ஓவியம் வரைவதற்கு ஆட்களைத் தேடுகிறார் என்று அறிந்ததும், நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அவரது இல்லம் நோக்கி படையெடுத்தனர். அந்தக் கூட்டத்தில் அமைதியாக, கொஞ்சம் ஒதுங்கியே நின்ற ஒரு 20 வயது இளைஞனை டாவின்சி முதலில் தேர்ந்தெடுத்தார் அவரை வைத்து, இயேசுவை வரைந்தார். பின்னர் ஒவ்வொரு சீடரை வரைவதற்கும் ஆட்களைத் தேர்ந்தெடுத்து, வரைந்து கொண்டிருந்தார். ஆறு ஆண்டுகளாய்த் தீட்டப்பட்ட இந்த ஓவியத்தின் இறுதிக் கட்டத்தில் யூதாஸை வரைந்தார். உரோமையச் சிறையிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு இளைஞனை வைத்து யூதாஸை வரைந்து கொண்டிருந்த போது அவன் அழுதான். ஏன் அழுகின்றாய் என விபரம் கேட்டார் டாவின்சி. 'ஆறு வருடங்களுக்கு முன் நீங்கள் இயேசுவை தீட்டுவதற்கு பயன்படுத்திய இளைஞனும் நான்தான்" என்று அவன் சொன்னான்.


ஓர் இளைஞன் ஒரு சில ஆண்டுகளில் உருவம், பழக்கவழக்கம் இவற்றில் பெரும் மாற்றங்கள் அடைவதை எல்லோருமே பார்த்திருக்கிறோம்.

கூட்டுப்புழு கூட்டிலிருந்து வெளியேறுவதற்கு நீண்டதொரு போராட்டம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால், அந்தப் போராட்டத்தின் போது அதன் இறக்கைகள் பெரிதாகும். போராட்டத்தின் இறுதியில் அழகான வண்ணத்துப் பூச்சி வெளியேறி பறக்கும். கூட்டுப் புழு பார்க்க அழகில்லாதது. வண்ணத்துப் பூச்சி அழகுக்கு இலக்கணமாகிறது. இந்த மாற்றம் உருவாக போராட்டம் தேவை. போராட்டம், துன்பம் இவை ஈன்றெடுக்கும் குழந்தை தான் மாற்றம்.

உயர்ந்த மலையில் இயேசுவின் உருமாற்றம் சீடர்களிடம் உருவாக்கிய மாற்றங்கள்: பேச்சிழந்தனர், பயந்தனர், பின்னர் அவர்களுள் பேதுரு மட்டும் என்ன பேசுகிறோம் என்பதை உணராது எதையோ பேசினார். 'நாம் இங்கேயே தங்கி விடலாம்" என்கிறார். உடனே மேகங்களின் வழி இறைவன் சொன்ன பதில்: 'என் அன்பு மகன் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்." பேசுவதைக் குறைத்துக் கொண்டு, கேட்க வேண்டும். இறைவார்த்தையைக் கேட்க வேண்டும். இறைமகன் இயேசு என்ன கூறுகிறார். இங்கே தங்கியது போதும். வாருங்கள் மலையை விட்டிறங்கி நம் பணியைத் தொடர்வோம் என்று கூறுகிறார். கடவுள் அனுபவங்கள் வாழ்க்கைக்குத் தேவை. கடவுளோடு தங்குவதற்கு கூடாரங்கள், கோவில்கள் அமைப்பது நல்லதுதான்.

ஆனால், கோவில்களிலேயே தங்கிவிடக்கூடாது. இறைவனைக் கண்ட, தரிசித்த அந்த அற்புத உணர்வோடு, மீண்டும் உலகிற்குள் செல்ல வேண்டும்.

அங்கே, மக்கள் மத்தியில் இறைவனைக் காணவும், அப்படிக்காண முடியாத



வர்களுக்கு இறைவனைக் காட்டவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

உருமாறிய கடவுளைக் கண்ணாரக் கண்ட சீடர்களை அழைத்துக் கொண்டு இயேசு மலையிலிருந்து இறங்குகிறார். எதற்காக? அந்த மக்களை உருமாற்றவே.

வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்கள். அந்த மாற்றங்களை எதிர்கொள்ள நாம் மேற்கொள்ளும் போராட்டங்கள் இவை நம்மையும், நமது சூழ்நிலைகளையும் மாற்றும்.

இந்த நாட்களில் பலர் 'என்னடா வாழ்க்கை. எல்லாம் நரகமாக இருக்கிறது. ரோட்டில நாட்டில இருக்க முடியவில்லை. இந்த இளைஞர்கள் அட்டகாசம் கொஞ்ச நஞ்சமல்ல நாம் இங்கே இருப்பது நல்லது என்று சொல்லவோ நினைத்துப் பார்க்கவோ முடியவில்லை என அழுகிறார்கள்.

எனவே நாம் நல்லவராவோம். சிறைச்சாலைக்கு செல்லும் முகச்சாயலுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். இயேசுவின் முகச்சாயலை எம்மில் கொண்டு வருவோம். மக்களை உருமாற்றும் பணியில் நாமும் இணைவோம்.

**ம.பிரான்சிஸ்க்**
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி
## பலாலி விண்மீன் கால்பந்து , கபடி அணிகள் சம்பியன்





தெல்லிப்பழை பிரதேச செய லக விளையாட்டுப் போட்டியின் இறுதிப்போட்டிகளும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த வியாழக்கிழ மை அன்று மகாஜனா கல்லூ ரியில் நடை பெற்றது

முன்பு நடைபெற்ற போட்டி களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவான பலாலி விண்மீன் கால்பந்து அணி இறுதிப் போட்டியில் வித்தகபுரம் கண் ணகி விளையாட்டுக்கழகத்தை எதிர் கொண்டு 1:0 என்ற கோல் கண க்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்ட த்தை தட்டிச்சென்றது

முன்பு நடைபெற்ற போட்டியில் கபடி அணியும் சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது குறிப்பிடத்தக்கது

மற்றும்4 × 100 அஞ்சலோட்டப் போட்டியிலும் 4× 200 அஞ்ச லோட் டப்போட்டியிலும் இரண்டாம இடத் தையும் 10000m ஓட்டப் போட்டியி லும் 3ம் இடத்தையும் தட்டிச் சென் றது பலாலி விண்மீன். (க)

# 2 ம் சுற்றில் கருணாகரன் அணி



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் கடந்த வியா ழக்கிழமை அன்று நடைபெற்ற ஆட்டத்தில் கரவைச் சுடர் விளை யாட்டுக்கழகத்தை எதிர்த்து கருண ாகரன் விளையாட்டுக் கழகத்தினர் மோதினர்.

பரபரப்பாக நடைபெற்ற ஆட்ட த்தில் விளையாடிய கருணா கரன் விளையாட்டுக் கழகத்தினர் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளனர். (க)

# 3ம் சுற்றுக்கு தெரிவாகியது
## இமையாணன் மத்தி வி.கழகத்தினர்



வல்வை விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் கடந்த வியாழக்கிழமை அன்று நடைபெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளை யாட்டுக் கழகத்தினர் மோதினர்.

பரபரப்பாக நடை பெற்ற போட்டியில் இமை யாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தினர் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன் றாவது சுற்றுக்குத் தெரிவாகியுள்ளனர்.

திக்கம் இ.விளையாட்டுக் கழகம் சார்பாக அரிகரன் ஒரு கோலினையும் இமையாணன் மத்திய வி.கழகம் சார்பாக சாருசன் மூன்று கோலினையும் சுலக்சன் ஒரு கோலினையும் போட்டனர். (க)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் குமாரசாமி

**(இளைப்பாறிய உப அதிபர்- சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி)**

**பிறப்பு:-13.07.1937**

**இறப்பு:-11.03.2017**

பொன்னாலையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் 138, இராசாவின் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குமாரசாமி அவர்கள் நேற்று (11.03.2017) சனிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், இராயேஸ்வரியின் அன்புக் கணவரும், உமையாள், மீரா, பரணன், கணனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.03.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

138, இராசாவின்
தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்
021 222 2365

(8190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீட...

நேற்று நடைபெறவிருந்த கலைப்பீட புதுமுக மாணவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு நிறுத்தப்பட்டதை அடுத்தே இக் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் குழப்பநிலை தொடர்பாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கலைப்பீட புதுமுக மாணவர்களை வரவேற்று நிகழ்வு நடத்துவதற்கு சிரேஷ்ட மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தொடர்பாக பீடாதிபதியால் முன்னரே வழங்கப்பட்ட அறிவித்தல்கள் எதனையும் பின்பற்றாமலேயே இந் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை மாணவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

மேலும் நேற்று முன்தினம் இரவு நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளை செய்வதற்காக பல்கலைக்கழக வளாகத்திற்குள் நின்றிருந்த மாணவர்கள் சிலர் நிதானமின்றிய நிலையில விஞ்ஞான பீடத்தின் ஜன்னல் கண்ணாடிகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

இதுமட்டுமல்லாமல் நேற்று குறித்த நிகழ்வுக்காக ஒன்று கூடிய மாணவர்களும் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீறி சில விசேட ஏற்பாடுகளை செய்து நிகழ்வுகளை நடத்துவதற்கு முற்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக எனக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து நிர்வாகத்தினர் இணைந்து விசேட கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியதன் பின்னர், குறித்த நிகழ்வினை நடத்துவதற்கு அனுமதித்தால் மாணவர்கள் மத்தியில் வேறு சில குழப்பங்கள் ஏற்படும் என்ற காரணத்தினால் நிகழ்வு நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான அறிவித்தலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இருப்பினும் மாணவர்கள் அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் நிகழ்வினை தொடர்ந்து நடத்துவதற்கு எத்தணித்துள்ளனர். குறிப்பாக வெளி வாகனங்களை பல்கலைக்கழகத்திற்குள் கொண்டுவந்து நிகழ்வுக்கான ஏற்பாடுகளை செய்துள்ளனர்.

இதனால் வெளியாட்கள் உள்ளே நுழையாதவாறு பல்கலைக்கழகத்தின் வாசல் பூட்டப்பட்டது. இதற்கிடையில் சில மாணவர்களினால் பல்கலைக்கழகத்தின் சிற்றுண்டிச் சாலையும் அடித்து நாசம் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் ஏனைய துறையினைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக்கழகத்தினை விட்டு வெளியில் செல்ல வேண்டியிருந்ததால் சிறிது நேரத்தின் பின்னர் நுழைவாசல் திறக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் திறக்கப்பட்ட நுழைவாயிலை மீண்டும் மூடிய கலைப்பீட மாணவர்கள், ஏனைய துறையைச் சேர்ந்த மாணவர்களையும் பல்கலைக்கழகத்தினை விட்டு வெளியேற விடாமல் அங்கேயே மறித்து வைத்திருந்தனர்.

மாணவர்களுடைய செயற்பாடு எல்லை மீறி சென்றதாலும், நிலைமையினை சுமூக நிலைக்கு கொண்டுவருவதற்காகவும் சம்பவ இடத்திற்கு பொலிஸார் அழைக்கப்பட்டிருந்தனர்.

இருப்பினும் பொலிஸார் அங்கு வருவதற்கு முன்னரே கலைப்பீட மாணவர்களினால் பூட்டப்பட்ட கதவு திறக்கப்பட்டு, ஏனைய துறை மாணவர்கள் வெளியில் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இதன் பின்னரும் சிறிது நேரம் அங்கு நின்று குழப்பத்தில் ஈடுபட்ட கலைப்பீட மாணவர்கள் பின்னர் கலைந்து சென்றிருந்தனர்.

பல்கலைக்கழகத்தில் என்றும் இல்லாதவாறு இன்று (நேற்று) ஏற்பட்ட குழப்பநிலை தொடர்பாக பல்கலைக்கழக சமூகத்தினர் இணைந்து கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியிருந்தோம். அக் கலந்துரையாடலில் சில முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கலைப்பீடத்தில் சட்டத்துறை மற்றும் மருதனார் மடத்தில் இயங்கும் நுண்கலைப்பீடம் ஆகியவை தவிர ஏனைய துறையினருடைய கற்றல் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் சேதமாக்கப்பட்டு ள்ள சொத்துக்கள் மீள்சீரமைப்புச் செய்யப்படும் வரைக்கும் அவர்களுடைய கற்றல் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்படுவதே பொருத்தமான முடிவாகும்.

மேலும் சம்பவ தினத்திலும், அதற்கு முதல் நாளிலும் நிதானமின்றிய நிலையில் நின்று கொண்டு அட்டகாசம் புரிந்த மாணவர்களை 2 வருடத்திற்கு கல்வியை தொடராதவாறு நிறுத்தி வைப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்லாமல் கலைப்பீடத்தின் மாணவர் ஒன்றியத்தினை தள்ளுபடி செய்யவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார். (செ-4)

# உழவு இயந்திரம்...

உள்ள மலையாளபுரம் எஸ்.கே.முதியோர் இல்லத்திற்குச் செல்லும் வீதி வழியாக ஏ9, வீதியை நோக்கி பயணித்த இரண்டு சக்கர உழவு இயந்திரமே நேற்று சனிக்கிழமை இரவு 9.25, மணியளவில் புகையிரதத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவது,

கிளிநொச்சி புகையிரத நிலையத்தில் தரித்து பயணிகளை ஏற்றிக் கொண்டு புகையிரதம் பயணித்த சிறிது நேரத்தில் இந்த விபத்துச் நடந்துள்ளது. இந்த விபத்துச் சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிர் இழப்புக்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இருசக்கர உழவு இயந்திரத்தின் சாரதிக்கு வெளிக்காயங்கள் ஏற்படாத போதும் உடலின் உட்பகுதி பாதிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம்-பால கிருஷ்ணன் (வயது - 40) என்பவரே வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை விபத்து இடம்பெற்ற பகுதிக்குச்சென்ற விசமிகள் புகையிரதம் மீது கல்வீச்சு மேற் கொண்டதால் புகையிரதப் பெட்டிகளின் சில கண்ணாடிகள் உடைந்து சேதமடைந்துள்ளன.

கடந்த 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 11.45, மணியளவில் திருமுறிகண்டி பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து 9.45, மணிக்கு கொழும்பு நோக்கி பயணித்த யாழ் தேவி புகையிரதத்துடன் அக்கராயன்குளம் வீதி ஊடாக கிளிநொச்சிக்கு பயணித்த கயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் நடைபெற்ற நிலையில் நேற்றையதினம் மீண்டும் ஒரு விபத்துச்சம்பவம் நடை பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பொலிஸ் நிலையப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-15,85,312)

# கேப்பாப்பிலவு...

வத்தினர் அதனை விடுவிக்கவேண்டுமெனக்கோரி கடந்த 11 நாட்களாக கேப்பாப்பிலவில் அமைந்துள்ள முல்லைத்தீவு கேப்பாப்பிலவு இராணுவ தலைமையக பிரதான நுழைவாயில் முன்பாக தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பதினொரு நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு தமது சொந்த நில விடுவிப்பு தொடர்பில் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கப் பெறாத நிலையில் நேற்று சனிக்கிழமை தொடர்ந்து இந்த கிராமத்தை சேர்ந்த இளைஞர் ஒருவரும் மற்றும் முதியவர் ஒருவருமாக இரண்டு பேர் சாகும் வரையிலான உண்ணா விரதப் போராட்டத்தை கேப்பாப்பிலவு இராணுவ பிரதான நுழைவாயில் முன்பாக ஆரம்பித்துள்ளனர். இது தொடர்பில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இருவரும் தெரிவிக்கையில்,

எமது சொந்த நிலங்களை ஆக்கிரமித்துள்ள படையினர் அதிலுள்ள வளங்கள் அனைத்தையும் தாம் அனுபவித்துக் கொண்டு வாழ்ந்து வருகின்றனர். எங்களை, சொந்த நிலங்களில் குடியமரவிடாது உள்ளதுடன், எமது கிராமத்துக்கு ஊடாக செல்லும் பிரதான வீதியை கூட மறித்து பாரிய கதவு ஒன்றினை அமைத்துள்ளனர்.

ஏனெனில் அந்த வீதியால் நாம் சென்றால் எமது சொந்த நிலங்களை பார்வையிட்டு விடுவோம் எமது வீடுகளுக்குள் சென்றுவிடுவோம் என்ற காரணத்தில் எம்மை அந்த வீதியை கூட பாவிக்க விடுகின்றார்கள் இல்லை.

நாங்களும் இந்த நாட்டின் பிரஜைகள் தானே எமக்கு எமது சொந்த உரிமை இல்லையா? எமது நிலங்கள் எமது கைகளில் வரும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.

இன்று (நேற்று) தொடக்கம் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தில் நாங்கள் இரண்டு பேரும் எமது சுய முடிவுடன் ஈடுபட்டுள்ளோம். இது நாளடைவில் அதிகரிக்காது இருக்க வேண்டும் என்றால் எமது நிலங்கள் விடுவிப்பு தொடர்பில் எமக்கு நல்ல முடிவைத் தாருங்கள்.

அதுவரையில் பல்வேறு வடிவங்களில் எமது போராட்டம் தொடரும் என சாகும் வரை உண்ணாவிரதப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-15,281)

# பொலிஸாருக்கு...

நாடுகளில் இலஞ்சம் பெறுவதில் இலங்கை 15 சதவீதத்தை பெற்றுள்ளது. அதில் பொதுமக்கள் பொலிஸ் அதிகாரிகளுக்கு அதிக்கடி இலஞ்சம் கொடுத்து வருகின்றனர் என்றும் தெரியவந்துள்ளது.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் மக்களும் ஊழலும் என்ற தலைப்பில் கடந்த 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அறிக்கையிடல் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்தியா, பாகிஸ்தான், சீனா, இலங்கை, அவுஸ்திரேலியா, தாய்வான், ஜப்பான், ஹொங்கொங், தாய்லாந்து, சீனா, மியன்மார், தென் கொரியா, கம்போடியா, இந்தோனேஷியா, மங்கோலியா, மலேசியா மற்றும் வியட் நாம் ஆகிய நாடுகள் இந்த பட்டியிலில் இணைக்கப்பட்டுள்ளன.

ஹொங்கொங்,வியட்நாம், ஜப்பான், மங்கோலியா, மற்றும் மலேசியா அரசாங்கங்கள் தங்கள் நாடுகளில் உள்ள ஊழல் தொடர்பில் போராடி வருகின்றனர்.

எனினும்,தங்கள் அரசாங்கம் ஊழலுக்கு எதிராக நடவடிக்கைகள் முன்னெடுத்து வருகின்றது என இந்தியா, இந்தோனேஷியா இலங்கை மற்றும் தாய்லாந்தில் வாழும் மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நாடுகளில் சில மக்கள் ஊழலில் ஈடுபடுகின்றனர், சிலர் ஊழலுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட நாடுகளில் உள்ள அரசாங்கம் ஊழலுக்கு எதிராக செயற்பட வேண்டும் என இன்டர்நெஷனல் டிரான்ஸ்பேரன்சி ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. (செ-11)

# கால அவகாசம்...

ங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இன்றையதினம் (நேற்று) வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்று கூடி ஐ.நா மனித உரிமை பேரவையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் விடயம் தொடர்பாக ஆராய்ந்தோம்.

இவ் மனித உரிமை பேரவையிலே நடைபெறுகின்ற தீர்மானம் தொடர்பாக கால அவகாசம் வழங்குவதா இல்லையா என்பது பற்றி நீண்ட நேரம் பேசப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த பெரும்பாலான பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என்ற கருத்தை தெரிவித்திருந்தனர்.

இதற்கான காரணம் 2015ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட 18 மாத கால அவகாசத்திற்குள்ளேயே எந்தவித முடிவுகளையும் அரசாங்கம் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் ஆகும்.

எனினும் கடும் நிபந்தனையின் அடிப்படையிலேயே இந்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என தீர்மானம் எடுக்கப்பட்டது. எங்களது கட்சிக்கு இதில் உடன்பாடில்லை. நாங்கள் ஏற்கெனவே ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என கையொப்பமிட்டு கடிதம் ஒன்றை வழங்கியிருக்கின்றோம். நாங்கள் அவ்வாறு வழங்கி விட்டு கடும் நிபந்தனை அடிப்படையில் கால அவகாசத்தை வழங்குவது என்பது முரண்பட்ட கருத்தாகும்.

இரண்டாவதாக ஐ.நா மனித உரிமை ஆணையாளருடைய உத்தியோக பூர்வ அறிக்கை 22ஆம் திகதி தான் வெளிவர இருக்கின்றது. வெளிவந்த பின்னர் அதில் என்ன விடயங்கள் உள்ளடங்கியுள்ளது என்று நாங்கள் கூடி ஆராய வேண்டிய தேவையுள்ளது.

அந்த அறிக்கை வந்த பின்னர் எமது முடிவை தெரிவிக்கலாம். இதற்கப்பால் எங்களுடைய கட்சியின் தலைவர் இக்கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை. தலைவர் அழைக்கப்படாமையால் எமது கட்சியின் தலைவரோடும், மத்திய குழுவோடும் கூடி பேச வேண்டியிருக்கின்றது.

ஏற்கெனவே தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமையினால் சில நாடுகளுக்கு கால அவகாசம் வழங்கப்படலாம் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. இவ்வாறு கால அவகாசம் வழங்கலாம் என்ற செய்தி சொல்லப்பட்ட பின் இக் கூட்டம் கூடுவது ஒரு கண் துடைப்பாகவே உள்ளது.

நாங்கள், வடக்கு கிழக்கின் சிவில் அமைப்புக்கள், தமிழ் மக்கள் பேரவை, மதத்தலைவர்கள் பலர் உட்பட இலங்கை அரசுக்கு கால அவகாசத்தை வழங்கக்கூடாது என தெட்டத் தெளிவாக கூறி இருக்கின்றோம்.

ஆகவே முன்னுக்கு பின் முரணாக முரண்பட்ட ரீதியில் நாங்கள் நடக்க முடியாது. நான ஏற்கெனவே குறிப்பிட்டது போல சில இராஜ தந்திர நாடுகளுக்கு கூட்டமைப்பில் உள்ள தலைமை உள்ளிட்ட ஒரு சிலர் கால அவகாசத்தை வழங்கியிருக்கிறார்கள் என்ற மறக்க முடியாத செய்தியும் அதில் உள்ளடங்கியுள்ளது.

எனவே இது தொடர்பாக எமது கட்சி கூடி ஆராய்ந்து முடிவெடுத்து மேலும் அறிவிப்பை வெளியிடுவோம் என ஆனந்தன் எம்.பி தெரிவித்தார். இவ் ஊடக சந்திப்பில் அக்கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் மாகாணசபை உறுப்பினர்களான துரைரட்ணசிங்கம், தியாகராசா, இந்திரராசா, ரவிகரன் ஆகியோரும் உடன் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-250)

# 5 மணி நேரத்தில்...

நாடு தழுவிய ரீதியில் உள்ள நீதிமன்றங்களினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டவர்களும் மற்றும் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த குற்றவாளிகள் உட்பட மதுபோதையில வாகனம் செலுத்தியவர்கள் ஆகியோர் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சுற்றிவளைப்பு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 11 மணி முதல் நேற்று சனிக்கிழமை அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைக்காக 11 ஆயிரத்து 792 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.(செ-15)

# அரசுக்கு சாதகமாக...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற மற்றும் மாகாணசபை உறுப்பினர்களுக்கான சந்திப்பு வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இராணுவம் மற்றும் பொலிஸாரின் விசேட பாதுகாப்பின் மத்தியில் காலை 10 மணியில் இருந்து மாலை 4 மணிவரை இடம்பெற்றது. இதன்பின் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் ஊடகப்பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் மேற்படி தீர்மானத்தை அறிவிப்புச் செய்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களும் இணைந்த ஒரு கூட்டம் நடைபெற்றது.

இதில் விசேடமாக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையில் இப்பொழுது இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும், இலங்கை சம்மந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட இருக்கின்ற சூழ் நிலையில் ஒரு உத்தியோகபூர்வமான வரைபு ஒன்றை சில நாடுகள் முன்வைத்திருக்கின்ற நிலைமையில் இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனுடைய தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் எங்களுடைய நிலைமையை எடுத்துச் சொல்வதற்காக நாள் முழுவதும் நாங்கள் கருத்து பரிமாறல்கள் செய்தோம்.

இதன் இறுதியில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நான் இப்போது வாசிக்கின்றேன். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையால் 2015 ஐப்பசி முதலாம் திகதி இலங்கை அரசாங்கத்தின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட எச்.ஆர்.சி 30-1 என்ற தீர்மானத்தில் இலங்கை நிறைவேற்ற வேண்டும் என்று கூறப்பட்ட அத்தனை விடயங்களும் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும்.

இவை கடுமையான நிபந்தனையின் கீழ் நிறைவேற்றப்படுவதை ஐக்கிய நாடுகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் இலங்கையில் நிறுவப்பட்டு, மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

இலங்கை அரசாங்கம் மேற்சொன்ன விடயங்களை தகுந்த பொறிமுறைகளின் மூலம் நிறைவேற்றத் தவறினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த தீர்மானத்தின் மூலம் கிடைக்க வேண்டிய அனைத்து பெறுபேறுகளும் கிடைக்கும் வண்ணமாக அதற்குரிய பெறுபேறுகளை ஐக்கிய நாடுகள் பேரவை உறுதி செய்ய வேண்டும்.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கட்சியின் செயலாளர் நடேசு சிவசக்தி ஆனந்தன் இந்த தீர்மானத்தோடு தங்களது கட்சி இணங்க உடன்பாடில்லை என்பதையும் தெரிவித்தார். அதையும் நாங்கள் இங்கு குறிப்பிட்டுள்ளோம் எனத் சுமந்திரன் தெரிவித்தார்.

மேற்படி குறித்த ஊடக சந்திப்பில் எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கல நாதன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

முன்னதாக நடந்த கட்சிக் கூட்டத்தில் ஜெனிவா விவகாரம் தொடர்பில் நீண்ட நேரமாக பேசப்பட்டு உறுப்பினர்கள் பலரும் தமது கருத்துக்களை முன்வைத்திருந்ததுடன், பலத்த பொலிஸ் மற்றும் இராணுவ பாதுகாப்புக்கு மத்தியில் குறித்த சந்திப்பு இடம்பெற்றிருந்தமையும் அங்கு அவதானிக்க முடிந்தது.

இதேவேளை மேற்படி கூட்டத்தில் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில்...

தொடர்ந்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடய




த்தில் இனியும் காலம் தாமதிக்க வேண்டாம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்களை வெளிப்படுத்து போன்ற கோரிக்கைகளை முன் வைத்து இரவு பகலாக தொடர் போராட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் இருபதாம் திகதி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தொடர் கவனயீர்ப்பு போராட்டம் எவ்வித தீர்வும் இன்றி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த போராட்டத்தில் மகனை, மகளை, பிள்ளைகளை கணவனை, சகோதரனை தேடிக்கொண்டிருப்பவர்கள் வயோதிப நிலையிலும் நோய்வாய்ப்பட்ட நிலையிலும் மருந்து மாத்திரைகளுடன் தங்களின் உறவுக்கான போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-15-312)


### காணி விற்பனைக்கு

யாழ்.இந்துக் கல்லூரி ஒழுங்கையில் 50 மீற்றர் தூரத்தில்

தொடர்பு:-0773146394

(8148)

### வேலையாட்கள் தேவை

கொழும்பில் இயங்கும் Reflect நிறுவனத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணிபுரியக்கூடிய திட்டமிடல் மற்றும் விரிவாக்கல் பிரிவிற்கு வேலையாட்கள் தேவை.

* 18 - 30 வயதிற்கு உட்பட்டோர்
* ஆண், பெண் இருபாலாரும்
* அனுபவமுள்ளோர் அனுபவமற்றோர்

விண்ணப்பிக்கலாம் அனைவருக்கும் பயிற்சிகள் வழங்கப்படும். சுயவிபரக்கோவையினை reflectalways@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (067)

### எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

CNR

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062

follow us : cnrworldwideexpress

(சி-7781)


## விடுதலைப் புலி...

அடுத்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்து அதனை ஜெனிவாவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட சட்டத்தரணிகள் 6 பேர் விரைவாக தயாரித்துள்ள இந்த அறிக்கையானது ரியர் அட்மிரல் சரத் வீரசேகர ஜெனிவா மனித உரிமை பேரவையில் உரையாற்றிய பின்னர் பேரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்த அறிக்கை ஐ.நா மனித உரிமை ஆணையாளருக்கு பாரதூரமான சவாலாக இருக்கும் எனரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எந்த அரசாங்கமும் இதற்கு முன்னர் இந்த அறிக்கையை தாக்கல்செய்யவில்லை.

அந்த அறிக்கையில் இரகசியமான பல கடிதங்கள் இருப்ப தாகவும் கூறப்படுகிறது. (செ-11)


### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கில்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550*/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(சி-7779)

### V2 TRAVELS

தை மாதம் தங்கம் வென்ற அதிஸ்டசாலி




அதிஸ்ட எண் - N/13JAN17/1371/152

சி.தேவராசா
கரணவாய், கரவெட்டி

இவர் 13-01-2017 அன்று எமக்கூடாக 1கிலோ பொதி ஜெர்மனிக்கு அனுப்பினார்

நீங்களும் தங்கம் மற்றும் மோட்டார் சைக்கிள் வெல்ல

வாய்ப்புக்களுக்கு: 0768226240

(சி-7747)

### Physics/பௌதிகவியல்

A/L 2019, 2018, 2017 Day Class

ரமணன் B.Sc in physics

### Chemistry/இரசாயனவியல்

சக்தி (விரிவுரையாளர்) B.Sc, M.Sc

இடம் : கரிகணன் Printers அருகாமை

கொக்குவில் இந்துக் கல்லூரி அருகாமை

தொடர்பு :

077 170 3549

(8176)

### கனடாவில் நிரந்தர குடியேறல்/வேலைவாய்ப்பு/கல்வி- கருத்தரங்கு

இனிமேலும் சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல வேண்டாமே!

குறைந்த கட்டணத்துடன் சட்டபூர்வமாக குடும்பத்துடன் கனடாவில் குடியேறலாம்

வங்கி ஊழியர்கள், அரச ஊழியர்கள், தாதியர், உயர் பதவியில் இருப்பவர்கள், நிரந்தர வேலை செய்பவர்கள், தற்காலிக உத்தியோகத்தர்கள் மற்றும் பள்ளியில் படிக்கும் குழந்தைகள் உள்ள வர்த்தகர்கள் என அனைவருக்கும் வழிகள் பல உண்டு. (சி-7783)

கனடாவில் இருந்து வருகை தந்திருக்கும் Immigration அலுவலரால் பூரணவிளக்கம் அளிக்கப்பட்டு உங்கள் சந்தேகங்களுக்கு பதிலும் அளிக்கப்படும்.

கருத்தரங்கு
நாள்-12-03-2017
ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி

IMMIGRATION APPROVED Canada

V2 Travels

முற்பதிவுகளுக்கு - 0768226236

49 A சப்பல் லேன் யாழ்ப்பாணம்

### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

070 330 5500

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

உங்கள் அனைத்து விதமான பொதிகள் மற்றும் கடிதங்களை நம்பிக்கையுடனும், துரிதமாகவும், குறைந்தளவு கட்டணங்களுடன் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட நாடுங்கள். (சி-7704)

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | மீசாலை | திருகோணமலை | மல்லாவி |
| முல்லைத்தீவு | கிளிநொச்சி | கனகராயன்குளம் | வவுனியா |

### விற்பனைக்கு

வல்லிபுரம் ஆழ்வார் கோயிலுக்கு 2 கிலோ மீற்றர் தூரத்தில் வலிகண்டியில் 9 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 0774910183, 0091997001372 8

(4633)

### AHUJA®

ஒலிபெருக்கிச் சாதனங்கள்



60 வது ஆண்டுகளுக்கு மேலான நம்பிக்கையின் சின்னம்

உத்தரவாதத்துடன்
குறைந்த விலை
பலவித ரகங்கள்
தரத்தில் உயர்ந்தது
நீடித்த உழைப்பது

Rs.1645/- இலிருந்து



- அம்பிளிபயர்கள்
- மைக்ரோபோன்கள்
- கொன்பரன்ஸ் சிஸ்டம்கள்
- ரிப்லெக்ஸ் ஹோன்கள்
- மெகாபோன்கள்
- ஆடியோ மிக்ஸ்சர்
- பூஸ்டர் அம்பிளிபயர்கள்
- கொலம் ஸ்பிக்கர்ஸ்



*** தரம் இல்லாத போலியான AHUJA பொருள்கள் விற்பனையில் இருப்பதால் தரம் உள்ள AHUJA பொருள்களை எங்கள் முகவரிடம் கேட்டு வாங்கவும்***

அனைத்து மத வழிபாட்டு ஸ்தலங்களுக்கு, பாடசாலைகளுக்கு விசேட விலைகழிவு வழங்கப்படும்

றொபர்ட் ஏஜன்சீஸ் (பிறை) லிமிட்டட்

இல: 88, றெக்லமேசன் வீதி, கொழும்பு - 11. தொ.பே.:242 1009(Hunting) பெக்ஸ்:244 9590.
ஈ-மெயில்: sales@robertagencies.com கிளை : 108, கெய்சர் வீதி, கொழும்பு - 11.

(068) www.robertagencies.com


## அறிவித்தல்

### மருத்துவத்தின் அற்புதங்கள்

இது ஓர் ஆங்கில மருத்துவமோ ஆயுள்வேதமோ இல்லை. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள். இது ஹோமியோபதியில் மாத்திரமே.

நீரிழிவு நோய் உட்பட அஸ்மா, மூட்டுவாதம், பாரிசவாதம், குழந்தை மருத்துவம் போன்றவைகளுக்கு நிரந்தர தீர்வுகாண முடியும். மாத்தளை I.A.S Hospital ஸ்தாபனத்தவர்கள் தற்சமயம் தங்களின் நடமாடும் சேவையை செவ்வாய்க்கிழமைகளில் வவுனியா சிந்தாமணி பிள்ளையார் கோவில் மண்டபத்தில் (புகையிரத வீதி) மேற்கொண்டு வருகின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு : 077 444 1082

(சி-7778)


## வெளிவந்துவிட்டது!

அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற 1750 க்கு மேற்பட்ட ஆங்கிலச் சொற்களும் அவற்றுக்கான தமிழ் அர்த்தத்துடனும் கூடிய ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டிக்கான வழிகாட்டி.




விலை: ரூபா 120/-

- 0718473926, 0770027621

(8157)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலக படிப்பகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 108

வள்ளுவர் ஆண்டு 2048 | 12.03.2017 | தொலைபேசி : 021 222 3378





# எம் தலையில் மண்கொட்டும் கால அவகாசம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

வாத்தியார் வைத்திலிங்கத்தைத் தவிர மற்றைய எல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வழமையில் ஆலடி மாநாட்டிற்கு நேரகாலத்தோடு வாற வாத்தியாரை இன்னும் காணவில்லை, நாசமறுந்த டெங்கு, பன்றிக் காய்ச்சல் ஏதும் வாத்தியாரையும் தொற்றிற்றுதோ தெரியல்ல.

சாத்திரியார் சதாசிவம் தன் மனக்கிலேசத்தை வெளிப்படுத்தினார்.

சீ... சீ... அப்படி எதுவும் இருக்காது வாத்தியார். இப்ப வந்திடுவார். விதானையார் விசுவலிங்கத்தின் மறுப்ப ஆலடியில் முன்னெழுந்தது.

விதானையார் சொல்லி முடிப்பதற்குள் வாத்தியார் கையில் ஒரு பேப்பருடன் ஆலடிக்கு வேகமாக வந்து கொண்டிருந்தார்.

இந்தா வாத்தியார் வந்திட்டார். அவருக்கு ஆயுள் நூறு. கங்காணி கார்த்திகேயன் உரத்த குரலில் கூற, ஏனடா தம்பி ஈழத் தமிழன் இருக்கிற நிலைமையில நூறு வயது மட்டும் வாழ வேணுமோ!

நேரகாலத்தோட போறது தான் நல்லது.

வாத்தியார் விரக்தியோடு கூறியது ஆலடியில் மௌனத்தை ஏற்படுத்தியது.

என்ன சங்கதி வாத்தியார் ஒருக்காலும் இப்படிக் கூறியது கிடையாது. இண்டைக்கு இப்படிச் சொல்லுறார் எண்டால் ஏதோ சங்கதி இருக்கத்தான் செய்யுது.

மாநாட்டில் இருந்த அனைவரின் மனங்களும் தமக்குள் பேசிக் கொண்டன.

ஆலடியில் நிலவிய மௌனத்தோடு வாத்தியாரும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**பண்டிதர்:** என்ன வாத்தியார் இண்டைக்கு ஒரு மாதிரியாக இருக்கிறியள்.

**வாத்தியார்:** பண்டிதர் , எங்கட நாட்டில நடக்கிற சம்பவங்களைப் பார்க்கிற போது மனச் சந்தோசம் வருமா என்ன?

காணாமல் போன தங்கட உறவுகளைத் தேடி எங்கட தாய்மார் விடுகின்ற கண்ணீருக்கு ஒரு எல்லை இருக்கோ. ஒருத்தரும் திரும்பிப் பார்க்கிறாங்கள் இல்லையே.

ஜனாதிபதி மைத்திரி வந்தால், பிரதமர் ரணில் வந்தால், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் வந்தால், வீதியில் நிண்டு ஐயா, எங்கட பிள்ளைகள் எங்க, அவையளைக் கண்டு பிடிச்சுத் தாங்கோ இப்படிக் கேட்டு கதறி அழுது வீதியில் விழுந்து புரண்டு எழுந்தாலும் ஒருத்தரும் திரும்பிப் பார்க்காமல் போறாங்களே! இந்த அவலத்தில உண்மையான தமிழன் எவனும் நிம்மதியாக வாழ முடியுமா என்ன?

(வாத்தியாரின் மனப் புழுக்கம் ஆலடியில் வார்த்தையாகக் கொட்டியது. விதானையார் விசுவலிங்கம் தோளில் கிடந்த துவாயால் தன் கண்களை ஒற்றிக் கொண்டார்).

வன்னிப் பெருநிலப்பரப்பில தன் மூத்த மகனை இழந்த நினைப்பு விதானையாரை நிலை குலையச் செய்தது.

நிலைமையைச் சமாளிக்க பண்டிதர் முற்பட்டாராயினும் சிறிதுநேரம் மௌனமாகிவிட்டு அதன்பின்னர் கதைப்பதே பொருத்தம் என்பதையும் பண்டிதர் தீர்மானித்தார்.

பண்டிதரின் இந்த நினைப்பு ஆலடியில் மௌனத்தை ஏற்படுத்தியதாயினும் அந்த மௌனத்தை நீண்டு செல்ல விடாமல் கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:** கடந்த 4 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு வந்தவர் அல்லோ! காணாமல்போனவர்களின் உறவுகளைச் சந்திப்பதாக இருந்தபோதிலும் அது நடக்காமல் போயிற்று பார்த்தியளே!

**விதானையார்:** ஓம் கங்காணியார் காணாமல் போனவர் களின்ர உறவுகளையும் வேலையற்ற பட்டதாரிகளின்ர பிரதிநிதிகளையும் ஜனாதிபதி சந்திப்பார் என்று கூட்டமைப்பின்ர தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கூறினவரல்லோ, பிறகேன் அந்தச் சந்திப்பு நடக்காமல் போனது.

**சாத்திரியார்:** சந்திப்பு நடந்தால் அவருக்கு இலாபம் இல்லையெண்டால் என்ன? நட்டம்

**மூப்பர்:** என்ன இருந்தாலும் ஜனாதிபதியைச் சந்திக்க வைத்தபெருமை இல்லாமல் போனது பெரிய கவலைதானே.

**விதானையார்:** அதுமட்டுமோ காணமல் போனவர்களின்ர உறவுகள் அந்த எம்.பியைத்திட்டித் தீர்த்ததைப் பார்த்தனீங்கள் தானே!

**பண்டிதர்:** ரோசம் கெட்டவன் இராசாவிலும் பெரியவன் என்றொரு பழமொழி நம் தமிழ்மொழியில இருக்கல்லோ, அரசியலில வந் [illegible]

ஆரு என்ன சொன்னாலும் அடுத்த தேர்தல், பதவி இதுகள்தான் பெரிசாத் தெரியும்.

**மூப்பர்:** உண்மைதான் பண்டிதர். ஆனாலும் காணாமல் போனவர்களின்ர உறவுகள் வடக்கு ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால கூடி நின்றவையள். அவர்களில தாய் ஒருவர் சொன்னதைக் கவனித்துப் பார்த்தனீங்களோ,

**கங்காணியார்:** என்ன மூப்பர் சொல்லுறியள்?

**மூப்பர்:** அடுத்த தேர்தலுக்கு எங்கட ஊர்ப்பக்கம் வந்து பாருங்கள் விளக்குமாறால அடி போடுவம் எண்டு சொன்னவரல்லோ.

**வாத்தியார்:** கடவுளே!

அப்படிச் சொல்லுப்பட்டதோ!

அப்ப அடுத்த தேர்தலில பெரிய கரைச்சல் இருக்கத் தான் செய்யும்.

**விதானையார்:** வாத்தியார் எங்கட கூட்டமைப்புக்கு இதெல்லாம் ஒரு கரைச்சலோ. அடுத்த் தேர்தல் வரும்போது அதுக்கேற்ற மாதிரி பிரசார வியூகத்தை வகுக்கிறது தானே! போன உள்ளூராட்சித் தேர்தலில சம்பந்தர் ஐயா என்ன சொன்னவர் தெரியுமோ. எங்கட பலத்தை உள்ளூராட்சித் தேர்தலில நீங்கள் காட்ட வேணும். அப்படிக் காட்டினால் எங்களுக்கான தீர்வு நிச்சயம் கிடைக்கும்.

சம்பந்தரை நம்பி சனங்கள் வாக்களித்தினம். ஆனால் அவர் என்ன செய்தார்...

**சாத்திரியார்:** திருநெல்வேலிச் சந்தையில கிடந்த குப்பையைக்கூட தேர்தலில வெற்றி பெற்ற கூட்டமைப்பால அகற்ற முடியாமல் போயிற்றுது.

**விதானையார்:** சாத்திரியார் நீங்கள் என்ன சொன்னாலும் எங்கட சனங்கள் ஒரு மாற்றத்தை விரும்பாத வரைக்கும் எங்களைப் பிடிச்ச சனி ஒருக்காலும் போகாது.

**வாத்தியார்:** விதானையார் நீங்கள் சொல்லுறதை நான் ஏற்கமாட்டன். இப்ப இருக்கிற நிலைமையில எங்கட சனங்கள் மிகத் தெளிவா இருக்கினம்.

**விதானையார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்? 2015 ஆம் ஆண்டில ஐ.நா. சபை இலங்கைக்கு வழங்கின தீர்மானங்களை அமுல்படுத்த இன்னும் இரண்டு வருட கால அவகாசம் இலங்கை அரசுக்குக் கொடுக்க வேணும் எண்டு சம்பந்தரும் சுமந்திரரும் சொல்லுகினமே. இருந்தும் எங்கட சனங்கள் தங்கட எதிர்ப்பைக் காட்டுகினமோ!

**வாத்தியார்:** ஏன் காட்டல்ல. கொழும்பில நடந்த ஒருசொல்லாடு களத்தில யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மாணவர்கள் கேட்ட கேள்வியைப் பார்த்தனீங்கள்தானே!

சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது எண்டால் பிறகேனாம் காலஅவகாசம் எண்டு ஒரு மாணவன் கேட்டபோது அந்தச் சபையில கரகோசம் வானைப் பிளந்ததல்லோ. இதுதான் மாற்றம்.

எல்லாம் எல்லாக் காலமும் சரிவராதுதானே!

**பண்டிதர்:** இரண்டு வருடகால அவகாசம் வழங்கினால் அதுபோதும் மைத்திரி ஐயாவின்ர அரசின்ர ஆயுளும் அதோட முடிந்துவிடும். அதற்குப்பிறகு தேர்தல். எந்தத் துலைவார் வருவினமோ ஆருக்குத் தெரியும்.

ஒட்டுமொத்தத்தில இலங்கை அரசுக்கு கொடுக்கிற இரண்டு வருடகால அவகாசம் தமிழ் மக்களை ஏமாற்றுகிறதற்கு கூட்ட மைப்புத் தலைமையும் ஐ.நா.சபையும் சேர்ந்து செய்யிற சதி. இதுதான் உண்மை.

இதை தமிழ் மக்கள் உணர்ந்து தங்கட எதிர்ப்பைக் காட்டாவிட்டால் நடந்த அழிவுதான் எங்களுக்கு மிச்சம்.

பண்டிதர் இப்படிச் சொல்லி முடிக்க ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் சோகம் தாழமுடியாமல் ஆறுதலாக அடிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றதுடன் மூப்பர் தலைமையில் கச்சதீவுப் பெருநாளுக்கு செல்லவும் ஆயத்தமாயினர்.

ஆதித்தன்



## அழுது கண்ணீர் விட்டாலும் பார்ப்பார் எவரும் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு கால அவகாசம் எங்கள் தலையில் நாமே...

தமிழ்நாட்டு அரசியலுக்கும் நம் தமிழினத்தின் அரசியல் தலைமைக்குமிடையில் நிறைந்த பொருத்தப்பாடுகள் உள்ளன. எனினும் அங்கு ஜனநாயகப் பண்பும் ஊடக சுதந்திரமும் இருப்பதால் அங்குள்ள அரசியல் அலங்கோலங்களை அக்குவேறு ஆணிவேறாக விமர்சனப்படுத்த முடிகின்றது.

இதனால் தமிழகத்தின் அரசியல் அலங்கோலங்களை அடிமட்ட மக்கள் மத்தியிலும் அறியக்கூடியதாக- சாதாரண மக்களும் ஒன்றுகூடி விவாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

இதனால்தான் தமிழகத்தின் அரசியல் இப்படியாயிற்றே என்று நாமும் முணுமுணுக்கின்றோம்.

ஆனால் உண்மையில் தமிழக அரசியலைவிட எங்கள் தமிழினத்தின் அரசியல் தலைமையே மிகவும் மோசமானது. இருந்தும் அதுபற்றிய தகவல்கள், விமர்சனங்கள் எதுவும் வெளிவராமல் உள்ளன.

சுருங்கக்கூறின் உள்வீட்டு இரகசியங்கள் வெளிவராமல் இருந்து நல்ல பெயர் எடுத்துள்ளது அவ்வளவுதான் எனலாம்.

தமிழக அரசியல் கேவலங்களுடன் நம் ஈழத்தமிழ் அரசியலிலும் ஒத்துப்போகிறது என்று கூறும்போது எங்ஙனம் என்ற கேள்வி எழும். இங்குதான் சசிகலா போன்ற அதட்டல் பேர்வழிகள் நம்மிடமும் உளர். பன்னீர்செல்வம் போன்ற பயந்தவர்கள் எங்களிடமும் நிறையவே உண்டு. எடப்பாடி பழனிச்சாமிகளுக்கு எங்களிடமும் குறைவில்லை. எதிர்த்துக் கதைத்தால் அடுத்த தேர்தலில் ஆசனம் இல்லாமல் போய்விடுமே என்ற பயத்தின் காரணமாக பேசாமல் இருந்து பிழைப்பு நடத்துவதே சிறப்பு என்றிருப்போரும் உளர்.

எனினும் இந்த உண்மைகள் எதுவும் வெளிவராமல் கட்சி எடுக்கும் முடிவு என்பதாக துரோகத்தனங்கள் மறைப்புச் செய்யப்படுகின்றன.

இப்போது ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடந்து வருகிறது.

ஏலவே 2015 ஆம் ஆண்டில் ஜெனிவாக் கூட்டத்தொடரில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுல்படுத்துமாறு இலங்கை அரசுக்கு



உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு இலங்கை அரசால் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்ற நிலையில், கால அவகாசம் தேவை என்ற சாட்டை இலங்கை அரசு முன்வைக்கின்றது.

## இரண்டு ஆண்டுக்குப் பின் யார் அதட்டிக் கேட்பர்?

தமிழ்மக்களுக்கு இங்கு எதுவும் வழங்கக்கூடாது என்றிருக்கக்கூடிய இலங்கை ஆட்சியாளர்கள் ஜெனிவாவில் கால அவகாசம் கேட்பது அதிசயமானவிடயமன்று.

மாறாக இலங்கை அரசு கேட்கின்ற கால அவகாசத்தை வழங்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை விடாப்பிடியாக நிற்பதுதான் மிகப்பெரும் அபத்தம். ஏன்? எதற்காக? இப்படி கூட்டமைப்பு நிற்கிறது என்ற கேள்விகளுக்கான ஒரே பதில் விலைபோதல் என்பதாக மட்டுமே இருக்கமுடியும். எனினும் இதுபற்றிப் பேசவும் கதைக்கவும் யார் உளர்.

ஐந்து கட்சிகளின் சேர்க்கைதான் கூட்டமைப்பு என்றாலும் இப்போது இலங்கைத் தமிழரசுக் கட்சி தான் கூட்டமைப்பு என்று கூட்டமைப்பின் சேர்க்கைக்கட்சிகள் கூறிக் கொள்கின்றன. பரவாயில்லை அவர்களாவது அப்படித் துணிந்து சொல்கின்றனர். கூட்டமைப்பு என்பது இலங்கைத் தமிழரசுக் கட்சி என்று பெரும் எடுப்பாகச் சொல்லிவிடாதீர்கள். தமிழரசுக் கட்சி என்பதும் இரண்டு பேரின் சர்வாதிகாரத்திற்குள் இருக்கக்கூடியதுதான்.

எங்களின் கருத்துகளுக் குகெல்லாம் அங்கு இடமேயில்லை என்று சொல்லப் பயந்து நிற்பவர்கள் பலர்.

என்ன செய்வது முதலமைச்சர் ஜெயலலிதாவை அப்பலோ வைத்தியசாலையில் நான் ஒருபோதும் பார்க்கவில்லை என்று கூறுவதற்கே துணிச்சல் இல்லாத பன்னீர் செல்வங்கள் கட்சியில் இருந்தால் சசிகலாக்கள் தானாகத் தோன்றுவர் என்பதே உண்மை. அந்த நிஜத்தை தமிழகத்தில் மட்டுமல்ல எங்கள் ஈழத்தமிழினத்திலும் பார்க்க முடிகின்றது.

2015 ஆம் ஆண்டில் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இன்னமும் இரண்டு ஆண்டுகள் தேவை என்று இலங்கை அரசு கேட்கிறது என்றால் அதில் இருக்கக் கூடிய உள்நோக்கங்கள்; எங்களுக்கான பாதகங்கள்; தீர்மானங்கள் அமுல்படாமல் போகக் கூடிய ஆபத்துக்கள் இதுபற்றியெல்லாம் எடுத்துக்கூற வேண்டிய கூட்டமைப்பின் தலைமை அதனை அடியோடு புறந்தள்ளிவிட்டு கால அவகாசம் கொடுப்பதை ஆதரிக்கும் வகையில் தன் உறுப்பினர்களிடம் கையெழுத்துப் பெற நினைப்பது எந்த வகையில் நியாயமாகும். இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படுமாக இருந்தால் விடுபடக்கூடிய காணிகள் விடுபடாமல் போகும். தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் தடுத்து வைக்கப்படுவர்- காணாமல் போனவர்களின் கதை அப்படியே அமுங்கிப்போய் விடும். இவை, நம் அரசியல் தலைமைக்குத் தெரியாததல்ல. இருந்தும் நல்லாட்சியைக் காப்பாற்றுவது என்று உத்தரவாதம் வழங்கிய பின்னர் இதனைச் செய்தே முடிப்பேன் என்று கங்கணம் கட்டி நின்றால், தமிழினம் இன்னும் பலவற்றை இழக்க வேண்டிவரும்.

அதுவே இப்போது நடந்து வருகிறது. இதில் அதிசயமும் ஆச்சரியமும் என்னவென்றால்; கால அவகாசம் வழங்குவது எந்த வகையிலும் பொருத்தமானதல்ல, கால அவகாசம் வழங்கப்பட்டால் அது எங்களுக்குப் பாதகமாக அமையும் என்று எடுத்துரைப்பதற்கு தமிழரசுக் கட்சிக்குள் எவரும் இல்லாததுதான். இதைப் பார்க்கும் போதுதான் நெஞ்சு வெடித்துவிடும்போல் உளது.

அட, சசிகலாவின் தடிப்பில், அதட்டலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையும் உள்ளது என்பதை இப்போது உணரமுடிகின்றது. இதை நாம் சொல்லும் போது அப்படிச் சொல்லாதீர்கள். பதவி ஆசை எனும் பற்றே தலைமையை எதிர்க்க விடவில்லை. இதுவே உண்மை என்று சொல்லுங்கள் என நீங்கள் கூறுவதும் நம் செவிகளில் கேட்கிறது.

எது எப்படியாயினும் 2015 ஆம் ஆண்டில் ஜெனிவாக் கூட்டத் தொடரில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அமுலாக்குவதற்கு இரண்டு ஆண்டுகள் கால அவகாசம் வழங்கப்படுவதென்பது போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்காமல் செய்வது என்பதுதான்.

2015 ஆம் ஆண்டில் ஜெனிவாவில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு அமுல்படுத்த வேண்டுமா? என்று தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தன் உறுப்பினர்களிடம் கேட்பாராம். அதற்கு ஆம் என்று உறுப்பினர்கள் பதிலளிப்பார்களாம். அப்படியானால் இரண்டு வருட காலஅவகாசம் வழங்கப்பட்டாக வேண்டும். அதனை நீங்கள் ஆதரித்து ஒப்பமிட வேண்டும் என்றெல்லாம் கூற தமிழகத்தின் கூவத்தூரில் அடைபட்டிருந்தவர்கள் போல எங்கள் உறுப்பினர்களும் கையெழுத்து வைப்பர்.

யாராவது ஒருவர் எழுந்து சர்வதேச நீதிபதிகளை அனுமதிக்கமாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரி கூறுகிறாரே. அப்படியானால் கால அவகாசம் எதற்கு என்று கேட்பாரா?

அல்லது 2015 ஆம் ஆண்டுத் தீர்மானங்களை கால அவகாசம் இன்றி அமுல்படுத்துமாறு வலியுறுத்துவோம் என்று கூறுவரா? எதுவும் நடக்காது.

ஆக, ஒருபெரும் துரோகத்தனம் தமிழினத்திற்கு இழைக்கப்படுகிறது. இரண்டு ஆண்டு கால அவகாசத்திற்குப் பின்னரும் ஐ.நாவின் தீர்மானங்களை நிறைவேற்றாவிட்டால் ஐ.நா. தனது படைகளை இலங்கைக்கு அனுப்பி தமிழர்களுக்கு உரிமை பெற்றுக் கொடுக்கவா போகிறது.

ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்பதாக எங்கள் நிலைமையும் முடிந்து போகும். தமிழர்களின் ஊழ்வினை தமிழ் அரசியல் தலைமைக்குள்ளால் நடந்தேறுவது என்பது விதியென்றால், அதைத் தடுப்பது யாரால் முடியும். எங்கள் கையால் எங்கள் தலைகளில் நாங்களே மண்ணைக் கொட்டிக் கொள்வோம். வாழ்க தமிழரசுக் கட்சியின் இரு முக்கியஸ்தர்களும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்திசாலி வியாபாரி

ஆனந்தபுரி என்ற கிராமத்தில் ஆண்டியப்பன் என்ற ஏழை விவசாயி வாழ்ந்தான்.

அவனுக்கு மனைவியும் மூன்று பெண் குழந்தைகளும் இருந்தனர்.

மூத்த பெண் திருமண வயதை எட்டி நின்றாள்.

ஆண்டியப்பன் கடும் உழைப்பாளி.

ஆனால், கடுமையாக உழைத்தும் அவன் வீட்டில் வறுமை தலை விரித்து ஆடியது.

அன்றும் வழக்கம் போல் வயலில் இருந்து வீடு திரும்பினான் ஆண்டியப்பன்.

சோகமாக தூணில் சாய்ந்தபடி ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

"ஏனுங்க, உங்களைத் தானே கேட்கிறேன், என்ன ஆச்சு உங்களுக்கு?" என்று கேட்டாள் அவள் மனைவி ராசாத்தி. "மூத்த பிள்ளை திருமண வயதை தாண்டிவிட்டாள்.

அவளுக்கு திருமணம் முடித்து வைக்கணுமே.

அதுக்கு பணம் வேண்டுமே. நான் எங்கே போவது பணத்துக்கு? அதை நினைக்கிறபோது தூக்கமே வரமாட் டேங்குதடி" என்றான்.

"இதுக்குப் போய் இப்படி இடிஞ்சு போனா எப்படி? ரொம்பக் காலமாகச் சேமித்து வைச்ச பணம் எங்கிட்ட கொஞ்சப் இருக்கு " என்றாள் அவள்.

சற்று நேரத்தில் சிறிய பானை ஒன்றுடன் திரும்பி வந்தாள்.

பானையில் இருந்த பணத்தை கணவன் முன் தரையில் கொட்டினாள்.

காலையில் உற்சாகத்துடன் எழுந்து ஆண்டியப்பன் மனைவியிடம் விடைபெற்றுக் கொண்டு வயலுக்குப் புறப்பட்டான்.

வழக்கத்தை விட உற்சாக மாக வேலை செய்யும் ஆண்டியப்பனை வியப்புடன் பார்த்தனர் உடன் வேலை செய்பவர்கள்.

மதிய உண வுக்குப் பிறகு அனைவரும் வயல் ஓரம் மரத்தடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"அண்ணே, நேற்று ராத்திரி பக்கத்துக் கிராமத்திலே கொள்ளைக்காரங்க புகுந்து கொள்ளை அடிச்சிட்டாங்க"



அதைக் கேட்டு அனைவரும் திடுக்கிட்டனர்.

ஆண்டியப்பன் சற்றுக் கூடுதலாகவே திடுக்கிட்டான்.

"அய்யய்யோ! மகள் திரு மணதுக்கு வைத்திருக்கும் பணத்தை படுபாவிங்க கொள்ளையடிச்சா என்ன செய்வேன்?" என்று தனக்குள் பதற்றத்துடன் கூறினான் ஆண்டியப்பன்.

மாலையில் வீடு திரும்பிய ஆண்டியப்பன் கவலையுடன் இருப்பதைக் கண்டு மனைவி திடுக்கிட்டாள்.

"ஏனுங்க, என்னாங்க ஆச்சு. ஏனிப்படி பேயறைஞ்சாப்ல இருக் கீங்க?" என்று கேட்டாள் ராசாத்தி.

"அடியே நேற்றைக்கு பக்கத்து கிராமத்தில கொள்ளைக்காரங்க புகுந்து ஏகப்பட்ட பொருட்களை கொள்ளை அடிச்சாங்களாம்!" என்றான்.

மனைவி பயத்தால் வாய் பொத்தி நின்று தேம்பி அழுதாள்.

சற்று நேரத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

இருவரும் பயந்து நடுங்கினர்.

மீண்டும் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

அவன் எதுவும் பேசவில்லை.

மீண்டும் மீண்டும் கதவு தட்டப்பட்டது. "என்னாங்க உள்ளே யாரும் இல்லையா?" என்றது ஒரு குரல்.

மீண்டும் மீண்டும் அதே கேள்வி எழுந்தது.

வருவது வரட்டும் என்று. "யாருங்க அது?" என்று நடுக்கத்துடன் கேட்டான் ஆண்டியப்பன்.

"நான் ஒரு வியாபாரி. இந்தப் பக்கம் வந்த போது இரவு ஆயிடுச்சு.

அதனால இரவு இங்கே தங்கிவிடலாம்னுதான் வந்திருக்கிறேன்" என்றது அந்த குரல்.

சற்று நேரத்தில் கதவு திறந்து. உடல் நடுங்கியபடி வெளியே எட்டிப் பார்த்தான் ஆண்டியப்பன்.

"நீங்க ஏங்க இப்படி பயப் படுறீங்க?" என்று கேட்டான் வியாபாரி.

"ஒண்ணுமில்ல ஒண்ணுமில்ல" என்றான் ஆண்டியப்பன்.

இருவருக்கும் உணவு வழங்கினாள் ராசாத்தி.

இருவரும் ஊர்க்கதை பேசிக் கொண்டே உணவு சாப்பிட்டனர்.

"நீங்கள் பயப்படுகிறது போல இருக்கே. என்ன காரணம்?" என்றான் வியாபாரி.

இனிமேல் இவரிடம் எதையும் மறைக்கத் தேவையில்லை என்று முடிவு செய்த ஆண்டியப்பன், "ஐயா. ஊரெல்லாம் ஒரே திருட்டுப் பயம்.

பக்கத்துக் கிராமத்திலகூட கொள்ளை யர்கள் கொள்ளை அடிச்சிட்டாங்க.

என் மகளோட கல்யாணத்துக்காக கொஞ்சப் பணம் வைத்திருக்கிறேன்.

அதைக் கொள்ளைக்காரங்க கொள்ளை அடிச்சுக்கிட்டு போயிடுவாங்களோன்னு பயமாயிருக்குங்க" என்றான்.

அதைக் கேட்ட வியாபாரியும் பயந்து நடுங்கினான்.

"அப்படியா! அய்யய்யோ! அவனுங்க இங்கே வந்துட்டா என்ன பண்றது? ஆமா, நீங்க எவ்வளவு பணம் வைத்து இருக்கிறீர்கள்?" என்றான் வியாபாரி.

"ஆயிரம் பணம்" என்றான் ஆண்டியப்பன்.

வியாபாரி சற்று நேரம் யோசித்த பிறகு. "நான் ஒரு யோசனை சொல்கிறேன்" என்றான் வியாபாரி.


"சீக்கிரம் சொல்லுங்க" என்று ஆவலுடன் கேட்டான் ஆண்டியப்பன். "முற்றத்தில் ஒரு குழி தோண்டி பணத்தை அதில் புதைத்து விடுவோம். பிறகு கொள்ளைக்காரர்களால் கண்டுபிடிக்க முடியாது" என்றான் வியாபாரி.

"நல்ல யோசனை. அப்படியே அந்த பணத்தை எடுத்துக்கிட்டு வா" என்று மனைவியைப் பார்த்துக் கூறினான் ஆண்டியப்பன்.

பணப் பானையுடன் வந்தாள் ராசாத்தி.

(தொடரும்)

காய் குட்டீஸ்!
இந்தக் குட்டிப் பையன் கணனியைப் பயன்படுத்த அவனுக்கு பாதை காட்டுங்க பார்க்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள், இல.3,2 ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்) 021 567 1532



பெண்களுக்கான வன்முறைகள் ஒழியுமா?

உலகம் உருண்டை என்று முதன் முதல் சொன்னவரை இந்த ....

ஐ.நா. இலங்கைக்கு இரண்டு வருட அவகாசம் வழங்குவது பற்றி?

**கமல் — உரும்பிராய்**

அடிமையாய் வாழ்வது தமிழனின் தலைவிதியா?

என்ன செய்ய நாம் யாரை நல்லவர்கள் என்று நம்புகின்றோமோ அவர்களால் தமிழன் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறான். கிடைக்கும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக எம் இனத்தின் தலைவிதியை அடகு வைத்து உல்லாசம் காண்கிறார்கள். இதில் வேதனை என்னவெனில் இவர்களும் தமிழர் தான் என்பதுதான்.

**அமிர்தா — கல்வியங்காடு**

சிங்களவர்கள் தமிழர்களை புரிந்துகொள்வார்களா?

எங்களுக்கு தெரிந்த இனவாத சிங்களவர்கள் எல்லாம் அரசியல்வாதிகள் மட்டும்தான். அவர் வெறும் 2 வீதத்தினர் மட்டும் தான். மீதிது 98 வீத சிங்களவர்கள் தமிழருக்கு சுயாட்சி வழங்க தயாராக இருக்கிறார்கள்.

கொழும்பில் நடந்த உண்மைக்கதை. கிளிகளை கூண்டில் அடைத்து ஒரு சிங்கள இளைஞன் வீதியில் விற்றுக் கொண்டிருக்கிறான். அதைக் கடந்துபோன கார் ஒன்று மீண்டும் அந்த இடத்திற்கு வருகிறது.

பத்து கிளியும் கூண்டுக்குமான விலை பேசப்பட்டு பணம் வழங்கப்படுகிறது. அடுத்த கணமே அந்தக் கிளிகள் அனைத்தும் கூண்டிலிருந்து பறக்க விடப்படுகிறது கூண்டுகள் எறியப்படுகிறது.

இப்படிப்பட்ட சிங்களவர் அதிகம். ஆனால் நமக்குத் தெரிந்த சிங்களவர்கள் இனவாதம் பேசிக் கொண்டிருக்கிறார்கள் அவ்வளவு தான்.

**கேதீஸ் — மாவிட்டபுரம்**

உலகம் உருண்டை என்று முதன் முதல் சொன்னவரை இந்த உலகம் ஏற்றுக்கொள்ள வில்லையே?

அதுதானப்பா உலகம். யார் உண்மை சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளவேமாட்டார்கள். இப்போது கூட ஐ.நாவில் விசாரணைக்கு மேலும் இரண்டு வருடம் இலங்கைக்கு வழங்க ஒப்புதல் அளிக்கிறது எம் அரசியல் தலைமை. இதைவிடக் கொடுமையான விடயம் வேறொன்று உண்டோ. இதை அடிக்கடி நாம் சொன்னால் கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் என்று பட்டம் சூட்டுகிறார்கள்.

தமிழர்க்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு துணை போவதற்கு எந்தப் பழியும் இல்லை. பிழையை சுட்டிக்காட்டினால் அதற்குத்தரப்படும் பட்டம் துரோகி. இது எந்த வகையில் நியாயமானது அறிவார்ந்த தமிழினமே சிந்திக்கமாட்டாயா?

**துவா — யாழ்ப்பாணம்**

ஐ.நா. இலங்கைக்கு இரண்டு வருட அவகாசம் வழங்குவது பற்றி?

தமிழ் மக்கள் பிரதிநிதிகள் தமிழ் மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைத்தான் உலகிற்கு சொல்ல வேண்டும். ஆனால் இங்கோ ஒட்டுமொத்த தமிழ் மக்களின் விருப்பையும் புறம்தள்ளி அரசுக்கு ஆதரவு தருகிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன?

இங்குதான் தமிழன் மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படுவதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஏலவே வழங்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒரு துரும்பளவு கூட நிறைவேற்றாமல் புதிதாக என்ன புடுங்கிவிடப் போகிறார்களோ தெரியவில்லை.

அன்பு வாசகர்களே!

அரசியல், ஆன்மீகம், அறிவியல், பொழுது போக்கு கேள்விகளை

**021 567 1532**

எனும் இலக்கத்திற்கு **SMS**

அனுப்பி வையுங்கள்.

**மனோ — இணுவில்**

பாரதிகண்ட புதுமைப் பெண் பிலவுக் குடியிருப்பு கௌசி தானோ?

எங்கே பாரதியே இங்கேவா எங்கள் வீர மங்கையரை வந்து பார். எம் பாரில் அறப்போர் நடத்தி வெற்றிவாகை சூடி நிற்கும் குலமகள்களுக்கு உன் வீர வரிகளால் அர்ச்சனை செய். பெண் தென்றல் போன்றவள். கொடுமை கண்டெழும் போது புயல் போன்றவள்.

**மது — யாழ்ப்பாணம்**

இரண்டாம் காதல் செய்வது தப்பா?

நாசமறுக்க. காதல் செய்வதே தப்பு. இதில் இரண்டாம் காதல் வேறா? அட பாவிங்களா நீங்களெல்லாம் எங்கே இருந்தடா வாறீங்க.

**ஆதவன் — தெல்லிப்பழை**

வயது கூடிய பெண்ணை திருமணம் செய்யலாமா?

உன் பெற்றவர்களிடம் கேட்க வேண்டிய கேள்வி.

**குமார் — கொக்குவில்**

காதலை சொல்வது எப்படி?

இந்தக் கறுமாந்திரக் கேள்விக்கு எத்தனை தரம் தான் பதில் தருவது.

**கமல் — கிளிநொச்சி**

கற்பு என்பது எதுவோ?

புலர் பெண்களுக்கு மட்டும் உரித்தானது என்று நினைக்கிறார்கள். நேரத்துக்கு ஒரு கதை. தன் இனத்திற்கு ஈனம் செய்வது கூட கற்பு நெறி தவறல் என்கின்ற வரையறைக்குள் தான் வரும்.

**சஞ்சி**

மீன்களின் தலைவன் என சுறாவை அழைப்பதன் காரணம் என்ன?

சுறாவைப்பற்றி எனக்குத் தெரியாது. மனிதர் பற்றியே தெரியும். முதலில் தலைவன் என்பவனுக்கு தன்மானம் இருக்க வேண்டும். தன் மக்கள் மீது அக்கறை, அளவற்ற பாசம் இருக்க வேண்டும். சுயநலம் என்பது அது மக்கள் நலன் சார்ந்தே இருக்கவேண்டும்.

எதிரி தரும் அற்ப சொற்ப சலுகைகளுக்கு விலைபோகாமல் எங்கும் எதிலும் எப்போதும் ஒரே வார்த்தை, அதுவும் மக்களின் உள்ளங்களில் பொங்கி எழும் வார்த்தை அவனூடாக சிந்த வேண்டும். இனி நீங்கள் சுறாவுக்கும் எம் தலைமைக்கும் முடிச்சுப் போட்டு பாருங்களேன்.

**ரவிசாந் — குப்பிளான்**

பெண்களுக்கான வன்முறைகள் ஒழியுமா?

ஆபத்து வரும் போது பெண்களின் நகம் கூட அவர்களுக்கு ஆயுதமாக மாறலாம் என மகாத்மாகாந்தி கூறியிருக்கிறார். வன்முறைகளுக்கு அடங்கிப்போகாமல் அதற்கு எதிராக எப்போது பெண் எழுகிறாளோ அப்போதுதான் வன்முறைகள் அடங்கும்.

**ஜெயரூபன் — பருத்தித்துறை**

காதல் பற்றி ஒரு கவிதை?

தான் தொட்ட
கைவிரல்களைக் கேட்டாள்
வெட்டிக் கொடுத்தேன்
தன்னைப் பார்த்த
கண்களைக் கேட்டாள்
பிடுங்கிக் கொடுத்தேன்
தன்னை வைத்திருக்கும்
இதயத்தைக் கேட்டாள்
அது அவளிடம் தான்
இருக்கிறது என்பதை புரியாமல்.

**யாதவன் — வரணி**

தாய் தந்தையை முதியோரில்லத்தில் விட்டு விட்டு வெளிநாடு சென்று அவர் இறந்த பின்பு இங்குவந்து மரண வீட்டை கொண்டாடும் பிள்ளைகள் பற்றி?

மரண வீட்டில் கொளுத்தும் வெடியுடனும் மயானத்தில் கொடுக்கப்படும் கொக்கக் கோலா சோடாவுடனும் பெற்ற கடன் முடிந்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## இளமையும் முதுமையும்

பத்து திங்கள் கருவினில் சிசுவாம்
பிறந்தபின் அழகிய நல் சேயாம்
துடிப்புள்ள துடிப்பான சிறுவனாம்
கட்டிளம் வாலிபராம் இளமையாம்
பெற்றோர் தயவில் வாழும் இளைஞர்
இருபால் இனமொத்தது திருமணமாம்
பேறில் உயர்ந்தது மக்கள் போறாம்
பெற்றதும் விடைபெற விளையும் இளமை
பிள்ளைகள் தன்னை சான்றோனாக்கிட
அன்னையும் பிதாவும் பாடுபடுகின்றபோது
விடைபெறப்போகும் இளமைக்குரமாகும்
இளமைவிடைபெற முதுமைதாள் திறக்கும்
கனவுகள் கலைந்து காலமும் கடந்து
சலித்தது வாழ்வு வெறுப்புமுண்டாகி
கடிதென நோயும் விரட்டும் வறுமையும்
வலிந்து நெருக்கிட இளைத்தது மெய்யும்
தோலும் சுருங்கி நடையும் தளர்ந்து
கண்ணும் புகைந்து பார்வையும் குன்றி
தோன்றி நரை திரை நடுக்கமுண்டமாகி
தேகம் மெலிந்து போவது முதுமையாம்

**கு.சண்முகம்**
**வந்தாறுமூலை,**
**மட்டக்களப்பு**

## காகிதக்கப்பல்

தொழில் இன்றி தவிர்ப்பதற்கா
கொட்டும் மழையிலும்
நுளம்புக்கடிக்குள்ளும்
பாடுபட்டுப் படித்து
பட்டங்கள் பெற்றோம்
கிடுகும் வரட்டியும் வித்து
வந்த காசிலதான்
சட்டை வாங்கி பள்ளிக்கு
அனுப்பிவைத்தா எங்கம்மா
பிள்ளைகள் நாங்கள்
அவைகளின்ட கனவுகளை
தீர்க்காமல் காகிதக் கப்பலாம்
கண்ணீருக்கள் மூழ்கின்றோம்

**நி.கவியழகன்**
**தாவடி**

## இளைஞனே வீறுகொண்டெழுவாய்

இளைஞனே!
தாவணிக் கனவுகளில்
மிதந்து களிக்கும்
உன் நினைவுகளை
மீட்டெடு
அணுவணுவாய்
உன்னைக் கொல்லும்
போதையையும் புகைத்தலையும்
தூக்கியெறி
வீழ்ந்து கிடப்போர்க்கும்
வேதனையில் துடிப்போர்க்கும்
உன் உதவிதேவை
முதலில்
உன்னைத் தூக்கி
நிலை நிறுத்திக்கொள்
அன்பெனும் கண்கொண்டு
உலகத்தைப் பார்
பாலைவனமாய்–உனக்கு
காட்சி தந்தவைகூட
பூத்துக்குலுங்கி
ஆனந்தம் பொங்கி
வழியக் காண்பாய்
உனக்குள்ளேயே எல்லாமுண்டு
நீ ஒரு விதை
உன்னால் ஒரு மரத்தையல்ல
தோப்பையே உண்டாக்க முடியும்
முடியும் என்று
நம்பிச் செயற்படு
கடைசியில் எல்லாம்
நலமே நடக்கக்காண்பாய்

**விஜயகண்ணன்**
**யாழ்ப்பாணம்**

## தமிழா விழித்தெழு

தமிழா!
பசுந்தோல் போர்த்திய
புலிகளை இனங்கண்டாயா?
புலிவேசம் போடும்
நரிகளை இனம்கண்டாயா?

தெற்கிற்குத் தலையும்
வடக்கிற்கு வாலும் காட்டும்
விலாங்குகளை இனங்கண்டாயா?

தேர்தலில் வெடிப்பதும்
வென்றதும் பிசுபிசுக்கும்
புஸ்வாணங்களை இனங்கண்டாயா?

கிடைக்கும் சலுகைகளை
சுளையாய்ப் பெற்றுவிட்டு– தமிழர்
சுயநிர்ணயத்தை அடகு வைக்கும்
அந்த அவர்களை இனம்கண்டாயா?

அடிக்கும் போஸ்டர் அத்தனையும்
ஆயிரம் அணுகுண்டாய்
வெடித்தவர்கள்– இப்போ
இன்னும் இரண்டாண்டு...
கண்டாயா கண்டுகொண்டாயா?

கணவனைத் தேடி மனைவி கதற
தந்தையைத் தேடி பிள்ளை குமுற
மகனைத் தேடி தாய் உருக
உருகா ஏசியில் அவர்கள்
உல்லாச வாழ்க்கை கண்டாயா?

தமிழா!
இன்னும் நீ விழிக்காவிடின்
இனி வராது சந்தர்ப்பம்
விழித்திடு அவர்களை ஒழித்திடு

**மாவை. நா.கஜேந்திரன்**



## நீதி வாழுமோ?

உறவுகளை இழந்து
ஏங்கி வாடும்
இதயங்கள் இங்கே
இன்னல்களைத் தாங்கி
உறவுகளின் வரவை
எதிர்பார்த்து
காத்துக்காத்துக்
கண்களும் பூத்தது
யுத்தத்தின் கொடுமையால்
தொலைந்த நம் உறவுகள்
இரத்தத்தின் உணர்வாய்
ஏங்கும் பாச உள்ளங்கள்
கண்ணீா வடித்து
கலங்கி வாடுது
எம்மோடு இருந்தவர்கள்
எங்கே போனார்கள்– அவர்
உருவப் படத்தோடு
உருக்குலைந்து வாடுகிறோம்
இழந்த உறவுகள்
இங்கே எமக்கு
மீள வருமோ
கண்ணீா துடைக்கும்
கையிங்கில்லையோ
நீதி வாழுமோ
தர்மம் நிலைக்குமோ
கலங்கும் நம் உள்ளம்
கவலையின்றி வாழ
கைகொடுத்துதவும்
கண்ணியவான் யார் இங்கே?

**சி.திவ்வியா**
**யா.ப.மெ.ம.வி**

# மௌனத்தின் தேடல்– 344

## காணாமலாக்கப்பட்ட உறவுகளின் கண்ணீர்

கையில் புகைப்படமும்
நெஞ்சில் கனத்த சோகங்களும்
நம் வாழ்க்கையானது
குண்டுகள் கொன்றதுவோ?
எம் உறவுகளை
குண்டுதாரிகள் கொன்றனரோ?
காணாமற் போனார்களோ?
இல்லை காணாமல் ஆக்கப்பட்டனரோ?
நல்லாட்சியென நாடகமாட
காணித்துண்டுகள் பிச்சை போட்டு
ஐ.நாவில் அவகாசம் வேண்டினாயோ?
அடிக்கடி ஆணைக்குழுவின் முன்
சாட்சி சொன்னோம்
என்னதான் தீர்வு சொன்னாய் எமக்காய்
குறைகேள் அலுவலகம்
திறக்க வந்த தலைவருக்கு
நம் குறை கேட்க முடியாமல் போனதேனோ?

**எளிமைக்கவி றொபின்**
**புன்னாலைக்கட்டுவன்**

## தாய்மை

ஆர்ப்பாட்டமா? போராட்டமா?
முன்னுக்கிருந்து செய்வது யார்?
நுளம்புக்கடியோடு
பட்டினியாய்க்கிடந்து
போராடுவது யார்?
காணியைத் தா
காணாமல்போன உறவுகள் எங்கே?
கதறுவது யார்?
பெண்கள் பெண்களேதான்
ஓடினது மாடு
பெயர் சம்பந்தனுக்கா?

**சுந்தா, வவுனியா**

## தொடர்ந்து செல்

போரும்
போராட்டமும்
கண்ணீரும் கம்பலையுமாய்
தமிழர்
நாம் வாழ்வில்
விதி
எழுதிவிட்டுப்போன
வலிமையை
வெளிப்படுத்தும்
புதிய வழிகாட்டிகள்

**தேன்நிலா**
**நல்லூர்**

## எழுந்து நில்

வீதியில் ஆறாத
துயரங்களுடன்
கதறி அழும்
தாய்மார்களின்
புலம்பல்களுக்கு
செவிசாய்க்காது
காணாமல் போனோருக்கு
கதைகள்
பல சொல்லி
காலத்தை ஏமாற்றும்
கயவர்களுக்கு
பாடம் புகட்ட
மனவுறுதியுடன்
எழுந்து நில்லுங்கள்
விடியல் பெறுவீர்கள்


**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

## பொங்காதீர் மனம் வருந்தி

பொறுத்துப் பொறுத்து
மனம் வெறுத்துப் போயினதோ!
வருத்தும் அவர் கருத்தால்
வாழ்க்கை பாழாயினதோ!
பெற்ற பிள்ளைகளை
உம் பேரன்புக்கிள்ளைகளை
உற்றவர் உடன் பிறந்தோரைப்
பிரிந்து படும் தொல்லைகளை
நீக்க ஒருகாலம் வரும்
நீசர் அவர் மனம் திருந்தி
போக்க அவர் வருவார்
பொங்காதீர் மனம் வருந்தி

**மிருசுவில் தமிழ்தாசன்**
**மீசாலை கிழக்கு**

# மௌனத்தின் தேடல் –345



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15.03.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி ஜனாதிபதி ட்ரம்ப் அவர்களே இந்த நாடு பிளவுபட்டுக் கொண்டிருக்கிறது நீங்கள் ஒற்றுமை பற்றிப் பேசுங்கள்

உலகமே எதிர்பார்க்கும் சினிமா விருது களில் ஒஸ்கார் முக்கியமானது. ஒஸ்கார்மேடையில்எப்போதும்உலகின்ஏதாவது ஒரு பிரச்சினைக்கு எதிராக சர்ச்சை வெடிக்கும். சென்ற முறை டி காப்ரியோ பேசிய உரை, குளோபல் வார்மிங்கின் விளைவுகள் பற்றி ஓங்கி ஒலித்தது. இந்த முறையும் ஒஸ்கார் மேடையில் பரபரப்புக் குப் பஞ்சமில்லை. நிகழ்ச்சி தொட ங்கிய 10ஆவது நிமிடத்தில், நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஜிம்மி கிம்மெல், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராகத் தனது குரலை முதலில் பதிவுசெய்தார்.

ஒஸ்கார் விருதுகளைச் சில வருடங் களாகவே ட்ரம்ப் மோசமாக விமர்சித்து வந்தார். 'அகடமி விருதுகள் அர்த்தமற்றவை. அவை வெள்ளை இன மக்களுக் கானவை' எனக் கடுமையாக விமர்சித்திருந்தார். அதற்கு, தக்க பதிலடி கொடுத்தார் ஜிம்மி கிம்மெல். "நன்றி ஜனாதிபதி ட்ரம்ப் அவர்களே! 'இந்த நாடு பிளவு பட்டிருக்கிறது. நீங்கள் ஒற்றுமை பற்றி பேசுங்கள்' என்று என்னிடம் நிறைய பேர் கூறினார்கள். ஆனால், நான் ஒருத்தன் பேசி ஒன்றும் ஆகப் போவது இல்லை. இன்று ஒட்டு மொத்த அமெரிக்காவும் 225 நாடுகளும் இதனைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவர்கள் நம்மை வெறுக்கி றார்கள்" என்றார்.

அத்துடன் நிற்காமல், நிகழ்ச்சியின் நடுவே தனது செல்போனை திரையில் இணைத்து ஜனாதிபதி ட்ரம்ப்புக்கு லைவ் டுவீட் செய்தார். "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் ட்ரம்ப்... நிகழ்ச்சி ஆரம்பித்து இரண்டு மணி நேரம் ஆகிறது. உங்களின் டுவீட்டை காணவில்லை" என நக்கல் செய்தார். அடுத்து #merylsayhi என்ற ஹேஷ்டேக் மூலம், ஏற்கனவே கோல்டன் குளோப் விருது வழங்கும் விழா மேடையில் ட்ரம்ப்பை விளாசிய மெரில் ஸ்ட்ரீப்பை நினைவுபடுத்தி ட்ரோல் செய்தார்.


இன்னொரு பக்கம், ஒஸ்கார் மேடையில் நிற்க வேண்டியவரை வீட்டில் அமர வைத்திருக்கிறார் ட்ரம்ப். ஆம்! சிறந்த ஆவண குறும்படமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட 'வைட் ஹெல்மெட்' படத்தில் பணியாற்றிய ஒளிப்பதிவாளர் காலித் கதீப், சிரியாவில் வசிப்பவர். ஏழு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு வரக் கூடாது என்று ட்ரம்ப் தடை விதித்ததால், மூன்று நாட்கள் விமான நிலையத்தில் போராடிப் பார்த்துவிட்டு வீடு திரும்பி இருக்கிறார் காலித். இதேபோல், சிறந்த அயல் நாட்டு மொழிப் படத்துக்கான விருது 'சேல்ஸ் மன்' திரைப்படத்துக்கு வழங்கப் பட்டது. ஆனால், இந்தத் திரைப்படத்தின் இயக்குநர் ஃபர்ஹாடி இந்த விருதை வாங்காமல் புறக்கணித்தார். இதற்குக் காரணமும் ட்ரம்ப் பிறப்பித்த தடை உத்தரவுதான். ட்ரம்ப்... எதிர்ப்புகள் உங்கள் மீது அதிகரித்தே வருகின்றன. ஒஸ்கார் மேடை அதற்கு ஒரு சாட்சி!




## அமெரிக்க ஜனாதிபதிக்கு ஒஸ்கார் அர்ச்சனை

நன்றி: விகடன்

# சிற்பம் சொல்லும் செய்தி!



ஒரு கல்லுக்கு உயிர் கொடுக்கும் சிற்பி கள், தங்கள் மனதில் உள்ள எண்ணங்களை சிற்பங்கள் வாயிலாக வெளிப்படுத்துகிறார்கள். அது பார்ப்போரின் மனங்களிலும் விதைக்கப்படுகிறது. அந்த வகையில், சிங்கப்பூரில் ஃபுல்லர்ட்டன் (Fullerton) என்ற ஹோட்டல் அருகே ஐந்து சிறுவர்கள் ஆற்று நீரில் பாய்வது போல இருக்கும் சிற்பம், உலகப் புகழ்பெற்றது. முதல் தலைமுறை (First Generation) எனப்படும் இந்தச் சிற்பம், 2000-ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி சிங்கப்பூர் சுற்றுலாத்துறையினரால் நிறுவப்பட்டது. சிங்கப்பூர் குழந்தைகள் இழைந்து வாழ்ந்தார்கள் என்பதை நினைவூட்டும் வகையில் இதை உருவாக்கினார்.



### மூதாதையர் கண்டுபிடிப்பு!

தென் ஆபிரிக்காவின் ஜோஹன்ஸ்பர்க் நகருக்கு அருகில், குகை ஒன்றில் அகழ்வாராய்ச்சி செய்த விஞ்ஞானிகள், மனிதனின் பரிணாம வளர்ச்சிக்கு முந்தைய மூதாதையர்களைக் குறிப்பிடும் 'நலெடி' (Naledi) என்ற மனிதனைப் போன்ற உயிரினத்தின் படிமங்களைக் கண்டுபிடித்து, அருங்காட்சியகத்தில் வைத்துள்ளனர். இது, மிகவும் முக்கியமான கண்டுபிடிப்பு என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



### உப்பு ரோச் லைட்!

உப்பு நீரில் எரியும் புதிய விளக்கைக் கண்டுபிடித்து, உலகைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது பிலிப்பைன்ஸ். அங்கே, பெரும்பாலான தீவுகளில் மின் வசதி இல்லை. மண்ணெண்ணெய் விளக்கும், மெழுகுவர்த்தியுமே பயன்படுத்துவதால், செலவு அதிகம் ஏற்படுகிறது. இதைத் தடுக்கும் வகையில், புதிய 'உப்பு விளக்கை'க் கண்டுபிடித்துள்ளனர். இதில், யு.எஸ்.பி கேபிள் மூலம், ஸ்மார்ட் போன் போன்றவற்றுக்கும் சார்ஜ் செய்துகொள்ளலாம்.



### அதிசய நதி!

அமேசான் மழைக்காடுகளின் இடையே மர்மநதி ஒன்று ஓடிக்கொண்டிருக்கிறது. சுமார் 6.4 கி.மீ நீளத்துக்கு, இந்த நதியின் நீர் 50 டிகிரியிலிருந்து 90 டிகிரி செல்சியஸ் வரையும், சில இடங்களில் அதிகபட்சமாக 200 டிகிரிக்கு மேலும் வெப்பமாகிறது. இந்த நதிக்குள் தவறி விழும் விலங்குகள் சில நிமிடங்களிலேயே உயிரிழந்து விடுகின்றன. ஆற்றில் இருந்து ஆவி வந்து கொண்டே இருக்கும். ஆனால், இந்தத் தண்ணீரைக் குடிக்க, சமைக்கப் பயன்படுத்தலாம் எனவும், மருத்துவ குணம்கொண்டது எனவும் இந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுகதை

# அன்புக்கு உண்டோ அடைக்கும் தாள்

அழகான காதல் திரைப்படம். பிரசாந்- இசா கோபிகர் நடித்த காதல் கவிதை படத்தை சீடி பிளேயரில் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த சயித்தாவின் உணர்வுகள் நினைவுகள் வேறெங்கோ ரீங்காரித்துக் கொண்டிருந்தன. எத்தனையோ தடவைகள் பார்த்தாலும் அவளுக்கு இன்றுவரை சலித்துப்போனதில்லை. அவளுக்கு மட்டுமல்ல அந்தப் படத்தை பார்ப்பவர்களுக்கு சாதாரணமாகத் தோன்றும் ஒரு விடயம் இப்படி ஒரு அப்பா அம்மா எங்களுக்கும் இருந்தா நல்லாயிருக்கும் எண்டதுதான். அந்த உணர்வு சயித்தாவையும் ஒட்டிக்கொண்டதில் எந்த வியப்புமில்லை. காதலை அழகாக்கிய அகத்தியனின் படைப்பு அவளையும் ஆட்கொண்டு அடிக்கடி அவள் பார்க்கும் படமாக அதை மாற்றியது.

சயித்தா ஒரு கிராமத்து பஞ்சவர்ணக்கிளி. தனியார் வங்கி ஒன்றில் பணி புரியும் பேரழகி. மோடன் மகாலட்சுமியும் இல்லாமல் கிராமத்துப் பட்டிக்காடு என்றும் சொல்லும் அளவுக்கும் இல்லாமல் இரண்டும் கலந்த பிகாசோவின் ஓவியம், திராட்சை போன்ற கருவிழிகள், அகன்ற நெற்றி, நீண்ட கூர்மூக்கு, ஒற்றைநாடி பொன்னிறம். பிரம்மன் அற்புத படைப்புகளில் உயர்படைப்பு சயித்தா. எனினும் என்றைக்கும் அவள் அணியும் ஆடைகளில் ஓர் நேர்த்தி இருக்கும். அதில் ஒரு துளிகூட ஆபாசமிருக்காது. இவை எல்லாம்தான் அவளைக் காதலிக்கும் ஆண்களின் எண்ணிக்கையை தினம்தினம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. எனினும் இது வரை அவள் எந்த ஆணின் காதல் வலையிலும் விழுந்ததில்லை. அதற்கு ஒரேயொரு காரணம்தான். அது அவளுடைய அப்பா. சிறுவயதிலிருந்தே அவளுக்குக் கல்வியுடன் வெளிநாட்டு மோகத்தையும் ஊட்டி வளர்த்திருந்தார். அவளுக்கும் வெளிநாட்டு மோகம் பற்றிக்கொள்ளவே அவளுக்கு உள்ளூரில் அவளைச் சுற்றிய யாரையும் பிடிக்காமல் போனது. அப்படியிருந்த சயித்தாவிற்கு அவளது அக்காவும் இரண்டு வருடங்களுக்கு முன் திருமணமாகி லண்டன் போனது அவளது வெளிநாட்டு ஆசையை மேலும் தூண்டிவிட்டது.

லண்டன் போன அவளின் அன்பு அக்கா செய்த முதல் வேலை தனது கணவனின் நண்பனுக்கு சயித்தாவை நிச்சயம் செய்ததுதான். அவனும் நல்ல உயரமும் மாநிறமும் கிட்டத்தட்ட சயித்தாவைப் போலவே இருந்தான். அவனை சயித்தாவின் குடும்பத்திற்கும் பிடித்துப் போய்விட்டது. பிடித்ததற்கு ஒரே காரணம் அவன் லண்டன் என்பது மட்டும்தான். அவனுக்கும் அவளைப் பிடித்துப் போகவே அவனும் சம்மதம் சொல்லிவிட்டான். முறைப்படி பேச்சுவார்த்தைகள் இடம்பெறாததால் அவர்களது பழக்கம் நட்பாகவே ஆரம்பித்தது. சயித்தாவிற்கும் அவளுக்கு அவள் அக்கா பார்த்த ரூபனுக்கும் அவனுடன் பழகிய ஒரு சில நாட்களிலேயே அவனைப் பற்றிய ஒட்டுமொத்த விபரங்களும் சயித்தா வசமானது. நிறைய நல்ல குணங்கள் அவனிடமிருந்தாலும் லண்டன் குளிரைக் காரணம்காட்டி அவன் அடிக்கடி தம் அடிப்பதையும் மாலைவேளைகளில் தண்ணியடிப்பதையும் அவளால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. அதை அக்காவிடமும் சொல்லிப்பார்த்தாள். அவளும் அதைக் கண்டுகொள்ளாமல் இங்கு அதெல்லாம் சகயம்டி என்றது அவளுக்கு மேலும் எரிச்சலை உண்டாக்கியது.



இப்படியிருந்த சந்தர்ப்பத்தில்தான் அவளின் வாழ்க்கையில் கண்ணன் நுழைந்தான். கண்ணன் பெயருக்கேற்றாற்போல் கறுப்பும் உயரமும் வாட்டசாட்டமான உடம்புடன் விசால் போலிருந்தான். தனியார் நிறுவனமொன்றில் உயர்பதவி ஒன்றை வகிப்பவன். மாதம் நாற்பதாயிரத்திற்குக் குறையாத சம்பளம் எடுப்பவன். நட்புத்தான் அவனது ஒட்டுமொத்த உலகம். அப்பா,அம்மா, திருமணமான அக்கா, அழகிய தங்கை இதுதான் அவனது குடும்பம். ஒரு கோயிலில்தான் அவளை முதன்முதலில் கண்டான். பிரசித்தியான அந்தக் கோயிலின் திருவிழாவிலே பல்லாயிரக்கணக்கானவர்கள் வந்திருந்தார்கள். அவர்களையெல்லாம்விட்டுவிட்டு அப்பா, அம்மாவுடன் தலையில் மல்லிகைப்பூ மாலையுடன் வந்திருந்த சயித்தாவை அவன் கண்கள் வட்டமிட்டன. திருவிழா முடிந்ததும் வீடுவரை பின்னாலேயே வந்துவிட்டான். கொஞ்சத்தூரமல்ல அவளது வீட்டையும்தாண்டி கிட்டத்தட்ட 18 கிலோமீற்றர். அவன் அவர்கள் வீட்டைத் தாண்டிய போதுதான் சயித்தாவிற்கே புரிந்தது கோயிலில் தன்னை கண்களால் கைது செய்ய முயன்ற அதே முகம். அன்று போனவன் ஓரிரு நாட்களில் எவ்வாறு அவளைப் பற்றி அறிந்தான் என்றே தெரியவில்லை. ஒருநாள் வங்கி வாசலில் வந்து வழியை மறித்து என்னைக் கல்யாணம் கட்டிக்கிறியா எண்டு கேட்டே விட்டான். அவனது அசட்டுத் துணிச்சல் அவளைத் தூக்கி வாரிப்போட்டது. முன்பின் அறிமுகமில்லாமல் பார்த்த உடனே அவனால் எப்படிக் கேட்ட முடிந்தது என மனதுக்குள் எண்ணியவாறே பதிலேதும் கூறாமல் அவளது [illegible] எடுத்துக் கொண்டு போ[illegible] அவனும் விடுவதாயில்லை. தினம் தினம் அவளது வங்கி வாசலில் இருந்து அவளது வீடு வருவான். அவனது வீடு வந்ததும் போயிடுவான். சிலவேளைகளில் அவளது வீடு வரை பின் தொடர்வான். அவன் பின்னால் வருவதை எப்படியாவது நிப்பாட்டணும் என்று நினைச்சு ஒருநாள் சயித்தா அவனிடம் தனக்கு வெளிநாட்டில் திருமணம் நிச்சயமாகிவிட்டது என்ற உண்மையைப் போட்டுடைத்தாள். அவனும் அதைப் பெரிதாக அலட்டிக் கொள்ளாமல் ஓகே சொறி சயித்தா என்றவன் ப்ரண்ட்ஸ் என்றவன் கையை நீட்டியவனை நட்புடன் அவளும் கையைக் குலுக்கிக் கொண்டாள். அன்று ஆரம்பித்த நட்பு இன்று ஆலமரமாய் வளர்ந்திருந்தது. அப்படியொரு நட்பு இருவருக்குமிடையில் எந்த ஒளிவுமறைவுமில்லாமல் வளர்ந்திருந்தது. குடிக்கமாட்டான், தம் மடிக்கமாட்டான், வேலை முடிஞ்சு இருட்டும் வரை நண்பர்களுடன் அரட்டை அடிப்பான். ஊரைச்சுத்துவான். குடும்பம் என்றால் உயிர், தங்கச்சி என்றால் காணும். தங்கச்சி கோல் பண்ணின அடுத்த நிமிசம் அந்த இடத்திலே நிப்பான். இதெல்லாம் அவளை அவனிடம் நெருக்கமான நட்பை உருவாக்கியிருந்தது. அவனிடம் அவளுக்குப் பிடிக்காத ஒன்றேயொன்று என்னையும் கொஞ்சம் லவ் பண்ணன்டி என்பான், வா ஓடிப்போவோம் என்பான். பலமுறை இதற்காகவே சயித்தாவிடம் திட்டு வேண்டினாலும் திருந்தாமல் அடிக்கடி சொல்லுவான். பகிடிக்கில்லை. உங்க அப்பா உன்னை வெளிநாட்டுக்கு வேலைக்காரி வேலைக்கு அனுப்பப் போறார். அதற்கு முதல் என்னோட ஓடி வந்துடு. நான் உன்னை ராணிபோல பாத்துக்கொள்வன். எங்கட வீட்டுக்காரருக்கும் உன்னைப் பற்றிச் சொல்லியிருக்கன். சோ அவங்களும் உன்னை ஏத்துக்குவாங்க. எப்ப வேணுமெண்டாலும் வீட்ட வா உனக்காக எங்கட வீட்டுக்கதவு எந்தநேரமும் திறந்தே இருக்கும் என்பான். வெளியால திட்டினாலும் சயித்தாவின் மனதிலும் அவன் சொன்ன வார்த்தைகளும் அவனது [illegible] நிழலாடும்.

இவ்வாறு இரு ஆண்களின் நட்புக்கிடையில் ஓடிக்கொண்டிருந்த அவள் வாழ்க்கையில் ஓர் திடீர் திருப்பம் லண்டனிலிருந்து ரூபன் இரண்டு நாளில் இந்தியா வாறான் எண்டதுதான். நாளைக்கு சயித்தாவும் அப்பா அம்மாவும் கொழும்பு போகவேண்டும். இப்போதுதான் அவளுக்கு அப்பா, அம்மா, கண்ணன், நண்பர்கள் பிரியப்போவது பெரிதாய் தெரிந்தது. லண்டன் போனால் அதிக நேரம் வேலை. நடுச் சாமம் வரும் கணவர், இயந்திர வாழ்க்கை ஒரு சில மணிநேரமே கணவனும் மனைவியும் ஒன்றாக வீட்டிலிருக்கும் அவலம். இதெல்லாம் ஒருநொடியில் அவளது வெளிநாட்டுக் கனவைத் தூக்கிச் சாப்பிட்டது. இங்கென்றால் அப்பா, அம்மா அருகில். ஐந்து மணிக்கு வேலை முடிந்தால் குறைந்தது தினமும் பதினைந்து மணிநேரம் கணவனின் அரவணைப்பு. அதிகமான விடுமுறை நாட்கள். வீதிக்கொரு கோவில், சொந்தபந்தம், தனது வெளிநாட்டுக் கனவு பறிபோன கோபத்தில் சில நாட்கள் அல்லது சில மாதங்கள் கதைக்காவிட்டாலும் எப்படியும் மீண்டும் கதைப்பார் அப்பா என்ற நம்பிக்கை. அதைவிட அவளின் பலவருட வெளிநாட்டுக் கனவை தூக்கி எறியவைத்த அந்தக் கறுப்பனின் கரங்களில் ஆயுள் முழுக்க அன்புக்குரிய அடிமையாய் இருக்கும் சுகம். இதெல்லாம் எண்ணியவள் அப்பாவும் அம்மாவும் வீட்டை வரமுதல் போகவேணும் என்ற படபடப்புடன் ரிவியை நிறுத்திவிட்டு தனது நிலையை சிறு கடிதமாக எழுதி மேசை மீது வைத்துவிடு ஒருசில உடுப்புகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு கண்ணனுக்கு போன் பண்ணி தன்னைக் கூட்டிப்போக வாடா என்று கூறியவளின் வார்த்தைகள் முதலில் கனவு போல் இருந்தாலும் தன்னைத் தானே கிள்ளிப்பார்த்து உறுதி செய்த பின் தனது மனைவியை அழைத்துவர விரைகிறான் கண்ணன்...

எம்.கிருஷ்ணா
கல்வியங்காடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜெயலலிதா மரணம் பீதியைக் கிளப்பும் 19 சர்ச்சைகள்

ஜூனியர்விகடன்

சந்தேகத்தைத் தீர்ப்பதற்காகச் சொல்லப்படும் விளக்கம், இன்னும் பல புதிய சந்தேகங்களை உருவாக்குமா? ஜெயலலிதா மரண விடயத்தில் தமிழ்க அரசு சார்பில் அளிக்கப்படும் விளக்கங்கள் அப்படியான விளைவுகளையே ஏற்படுத்துகின்றன. 'மருத்துவமனையில் ஜெயலலிதா இட்லி சாப்பிட்டார்', 'நர்ஸ்களோடு விளையாடினார்', 'காவிரிப் பிரச்சினை குறித்து விவாதித்தார்' என்றெல்லாம் சொன்னார்கள். 'ஜெயலலிதா எப்போது வீட்டுக்குத் திரும்ப வேண்டும் என்பதை அவரே முடிவு செய்வார்' என அப்பலோ தலைவர் பிரதாப் ரெட்டி சொன்னார். ஆனால், 'இவற்றில் எதுவுமே உண்மையில்லை' என்பதை இப்போது அவர்கள் தந்திருக்கும் அறிக்கைகளே அம்பலப்படுத்தி இருக்கின்றன.

ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை தொடர்பான அப்பலோவின் 12 பக்க சிகிச்சை சுருக்கம், டில்லி எய்ம்ஸ் மருத்துவமனைக் குழு ஐந்து முறை வந்து, சிகிச்சை பற்றி நிகழ்த்திய ஆலோசனைகள் தொடர்பான அறிக்கை, இவைதவிர, தமிழக அரசு சார்பில் ஓர் அறிக்கை என மூன்று அறிக்கைகள் மார்ச் 6ஆம் திகதி, சுகாதாரத்துறை செயலாளர் ராதாகிருஷ்ணனால் வெளியிடப்பட்டன. ஜெயலலிதா மரணம் குறித்த சந்தேகங்களைக் கிளப்பி ஓ.பன்னீர்செல்வம் அணியினர் உண்ணாவிரதம் இருக்கும் நேரத்தில். இந்த அறிக்கைகள் வெளியாகியுள்ளன. எனவே, இந்த அறிக்கைகளின் நோக்கம் வெளிப்படையாகத் தெரிகிறது. ஆனால், அந்த நோக்கத்தை இவை பூர்த்தி செய்தனவா?

**சர்ச்சை -1**

ஜெ. அனுமதிக்கப்பட்டதும் அப்பலோ வெளியிட்ட முதல்அறிக்கை, 'நீர்ச்சத்துக் குறைபாடுக்கு ஜெயலலிதா சிகிச்சை பெறுகிறார்' எனச் சொன்னது. ஆனால், இப்போது அவர்கள் அளித்திருக்கும் அறிக்கை, முற்றிலும் வேறாக இருக்கிறது. மருத்துவமனைக்கு வந்தபோதே ஜெ.வுக்கு ஒன்பது பிரச்சினைகள் இருந்ததாகப் பட்டியலிடுகிறது அப்பலோ. செப்டிசீமியா நோய்த்தொற்று, நுரையீரல் தொற்று, இதய வால்வில் பிரச்சினை, தீவிர நீரிழிவு நோய், இரத்த அழுத்தக் குறைவு, தைராய்டு குறைபாடு, ஆஸ்துமா, வயிற்றுக் கோளாறு, தோல் அரிப்பு என அந்தப் பட்டியல் நீள்கிறது.

**சர்ச்சை -2**

அப்பலோ அம்புலன்ஸ் செப்டெம்பர் 22ஆம் திகதி போயஸ் கார்டனுக்கு வந்தபோதே, ஜெயலலிதா அங்கு சுயநினைவற்ற நிலையில்தான் இருந்திருக்கிறார். அவரது இரத்த அழுத்தம் தாறுமாறாக இருந்துள்ளது. சுவாசிக்க முடியாமல் தவித்திருக்கிறார். செயற்கை சுவாசம் அளித்தபிறகும், அவருக்கு நினைவு திரும்பவில்லை.

**சர்ச்சை -3**

நீரிழிவு நோய்க்கும், இரத்தக் கொதிப்புக்கும் பல ஆண்டுகளாக மாத்திரை சாப்பிட்டு வந்தார் ஜெயலலிதா. இதுதவிர, தோல் அலர்ஜி ஏற்பட்டதால் ஸ்டீராய்டு மாத்திரைகளையும் அப்போது எடுத்துக் கொண்டு இருந்திருக்கிறார். 'அப்பலோவில் அட்மிட் ஆவதற்கு ஒரு வாரம் முன்பாக அவருக்குக் கடுமையான வயிற்றுப்போக்கு இருந்துள்ளது' என்கிறது இந்தச் சிகிச்சை அறிக்கை. அத்துடன், 'கடுமையான சிறுநீரகத் தொற்று ஏற்பட்டு ஒரு வாரமாக ஜுரத்தில் அவதிப்பட்டார்' என்றும் சொல்கிறார்கள். 'மூச்சுத்திணறல் மற்றும் இருமல் பிரச்சினையும் அப்போது அவருக்கு இருந்தது' என்கிறது எய்ம்ஸ் அறிக்கை.

**சர்ச்சை -4**

இந்த ஜுரத்துடன் அவர் எப்படி அன்று காலையில் ஓர் அரசு விழாவில் பங்கேற்றார் என்பதும், இவ்வளவு பிரச்சினைகளோடு இருந்தும் அவர் ஏன் முன்கூட்டியே மருத்துவ ஆலோசனை பெறவில்லை என்பதும் விடை தெரியாத கேள்விகள். 'சிறுநீரகத் தொற்றுக்கும் ஜுரத்துக்கும் அவர் சாதாரண ஆன்ட்டிபயாடிக் மாத்திரைகள் எடுத்துக்கொண்டார்' என்கிறது எய்ம்ஸ் மருத்துவக் குழுவின் முதல் அறிக்கை. ஒரு முதல்வருக்கு அளிக்கப்படும் சிகிச்சை இவ்வளவு அலட்சியமானதாகவா இருந்திருக்கும்?

**சர்ச்சை -5**

'அப்பலோ அம்புலன்ஸ் வருவதற்கு முன்பே போயஸ் கார்டனில் அவர் சுயநினைவு இழந்த நிலையில்தான் இருந்தார்' என்பது இந்த அறிக்கைகள் மூலம் உறுதியாகியுள்ளது. 'அவர் ஏன் சுயநினைவு இழந்தார்? அந்த அளவுக்கு அவருக்குத் திடீரென என்ன ஆனது?' என்ற ஓ.பி.எஸ் அணியினர் எழுப்பும் கேள்விகளுக்குத்தான் பதில் இல்லை.

**சர்ச்சை -6**

அட்மிட் ஆனபோது ஜெயலலிதாவின் நுரையீரலில் ஏராளமாக திரவம் சேர்ந்திருந்தது. இது தந்த அழுத்தம் காரணமாக, இதயம் செயற்பட முடியாமல் தவித்தது. நுரையீரலும் இதயமும் முறையாக செயற்படாததால், இரத்தத்தில் ஒட்சிசன் அளவு தாறுமாறாகக் குறைந்திருந்தது. இதனால், கடுமையான மூச்சுத்திணறல் அவருக்கு ஏற்பட்டது. வேறுவழியின்றி பல ட்யூப்களால் அவர் பிணைக்கப்பட்டார். சுவாசம் தருவதற்கு ட்யூப், நுரையீரலில் சேரும் திரவத்தை அகற்றுவதற்கு ஒரு ட்யூப், மருந்துகளும் திரவ உணவும் தருவதற்கு ட்யூப் என எல்லாமும் இருந்தும், பல நாட்கள் அவர் அபாயக் கட்டத்திலேயே இருந்திருக்கிறார்.

**சர்ச்சை -7**

இந்தச் சிகிச்சைகள் தரப்பட்ட போதே அவரது சிறுநீரகம் செயலிழக்க ஆரம்பித்து, சிறுநீர் வெளியேறும் அளவு குறைந்தது. இதற்கும் தனியாகச் சிகிச்சை தரப்பட்டது.

**சர்ச்சை -8**

பெரும்பாலான நாட்கள் ஜெயலலிதா மயக்க நிலையிலேயே வைக்கப்பட்டு இருந்திருக்கிறார். மயக்க மருந்துகள் தரப்பட்டும் பல நாட்கள் ஜெயலலிதா தூங்கமுடியாமல் தவித்திருக்கிறார். தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த பல நாட்களில் அவருக்கு இந்தப் பிரச்சினை இருந்துள்ளது. இரவு முழுக்கத் தூங்க முடியாமல் அவதிப்பட்டு, பகலில் தூங்கி இருக்கிறார் அவர். இயல்பான தூக்க சுழற்சி ஏன் இப்படி மாறியது என்று டாக்டர்களுக்குப் புரியவில்லை.

**சர்ச்சை -9**

எய்ம்ஸ் குழு முதல்முறை வந்த போது, ஜெயலலிதா மிக அபாயமான கட்டத்தில் இருந்திருக்கிறார். அவருக்கு இதயத்தில் மைட்ரல் வால்வு பிரச்சினை மோசமாக இருந்தது. அதாவது, இதயம் சுருங்கும் போது இரண்டு திசைகளிலும் இரத்தம் வெளியேறும். இதனால், உடல் உறுப்புகளுக்குப் போதுமான இரத்தம் கிடைக்காது. இந்தப் பிரச்சினைக்கு சத்திரசிகிச்சை செய்யலாமா என ஆலோசனை செய்து, 'நோய்த்தொற்று மோசமாக இருக்கும் இந்த நேரத்தில் சத்திரசிகிச்சை வேண்டாம்' என முடிவு செய்திருக்கிறார்கள்.

**சர்ச்சை -10**



இவ்வளவு மோசமான நிலையில் ஜெயலலிதாவைப் பார்த்த, லண்டன் மருத்துவ நிபுணர் ரிச்சர்டு பியெல், 'ஜெ. பிழைக்க 60 சதவிகித வாய்ப்பு இருக்கிறது' என்று தெரிவித்துள்ளார்.

**சர்ச்சை -11**

ஒக்டோபர் 14 ஆம் திகதி ஜெ. உடல்நிலையைப் பரிசோதித்த அமெரிக்க மருத்துவர் ஸ்டுவர்ட் ரஸ்ஸல், இங்கிலாந்து மருத்துவர் ஜெயன் பரமேஸ்வர், அப்பலோ மருத்துவர் மாத்யூ சாமுவேல் ஆகிய மூன்று இதய நிபுணர்களும், அவருக்கு அவசரமாக ஆஞ்சியோகிராம் செய்யலாமா என ஆலோசனை செய்துள்ளனர். ஆனால், அவரது உடல் தாங்காது என்பதால் தவிர்த்துவிட்டனர்.

**சர்ச்சை -12**

அப்பலோவில் இருந்த 75 நாட்களிலுமே, அவர் ஒருநாள்கூட எழுந்து நடந்ததாகக் குறிப்புகள் இல்லை. 'படுக்கையின் ஓரமாக சாய்ந்து உட்கார்ந்தார்', '20 நிமிடங்கள் வீல் சேரில் அமர்ந்திருந்தார்' என இரண்டு இடங்களில் சொல்லியிருக்கிறார்கள். இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள முடிவது, 20 நிமிடங்களுக்கு மேல் உட்கார்ந்திருப்பதே அவருக்குச் சிரமமாக இருந்திருக்கிறது. கால்களை இலேசாக அசைப்பதே அவருக்கு பெரும் பிரயத்தனமாக இருந்திருக்கிறது. கிட்டத்தட்ட படுத்த படுக்கையாக இருந்திருக்கிறார்.

**சர்ச்சை -13**

அப்பலோ அறிக்கையில், 'நோயாளி தனது தேவைகள் பற்றி மருத்துவக் குழுவோடு பேசினார்' என்கிறது. ஆனால், எய்ம்ஸ் மருத்துவக் குழு அறிக்கை, 'அவருக்கு நாம் சொல்வது கேட்கிறது. அவர் உதடுகளை அசைத்து ஏதோ சொல்ல முயற்சிக்கிறார்' என்கிறது. அதாவது, ஜெயலலிதா பேச முயற்சி செய்திருக்கிறார். ஆனால், உதடுகளைத் தாண்டி வார்த்தைகள் வரவில்லை. ஜெயலலிதா தனது கால்களை தன் சொந்த முயற்சியால் அசைத்ததை மிகப் பெரிய முன்னேற்றமாகவும் குறிப்பிடுகிறது எய்ம்ஸ் அறிக்கை. அந்த அளவுக்குத்தான் அவர் உடல்நிலை இருந்திருக்கிறது.

**சர்ச்சை -14**

ஜெயலலிதா மரணம் அடைவதற்கு இரண்டு நாட்கள் முன்பாக டிசெம்பர் 3ஆம் திகதி, அப்பலோ வந்த எய்ம்ஸ் குழு, அவருக்கு ஆஞ்சியோகிராம் செய்வது பற்றி ஆலோசனை செய்தது. ஆனால், அவரின் உடல்நிலை முன்னேறிய பிறகு செய்து கொள்ளலாம் என முடிவு செய்தார்கள். ஒருவேளை அப்போது அதைச் செய்திருந்தால், ஜெயலலிதா உயிர் பிழைத்திருக்கக்கூடும். ஆனால், அது மரணத்தை இரண்டு நாட்கள் முன்கூட்டியே வரவழைத்திருக்கவும் கூடும்.

**சர்ச்சை -15**

இந்த டிசெம்பர் 3ஆம் திகதி விசிட் பற்றிய எய்ம்ஸ் குழு அறிக்கை, 'ஜெயலலிதா சுயநினைவோடு இருந்தார். ஆனால், அவர் முழுமையாக நலம் பெற பல வாரங்களோ, மாதங்களோ ஆகலாம்' எனச் சொல்லியிருக்கிறது. ஆனால், 'எய்ம்ஸ் டாக்டர்கள் ஜெயலலிதாவோடு பேசினார்கள். இன்னும் நிறைய சாப்பிடச் சொல்லி அவரிடம் சொன்னார்கள்' என்கிறது அப்பலோ அறிக்கை. தாங்கள் ஜெ-விடம் பேசியதாக எய்ம்ஸ் டாக்டர்கள் தங்கள் அறிக்கையில் குறிப்பிடவில்லை. மொத்தத்தில், 'ஜெயலலிதா வீடு திரும்புவதை அவரே முடிவு செய்வார்' என பிரதாப் ரெட்டி சொன்னபோது, அவர் அதற்கான நிலைமையில் இல்லை என்பதுதான் உண்மை.

**சர்ச்சை -16**

அதேநாளில் அவருக்கு நோய்த்தொற்றும் மூச்சுத்திணறலும் மோசமானது. அவருக்கு நிமோனியா தாக்கியிருப்பதை அப்போதுதான் டாக்டர்கள் கண்டறிந்தார்கள். வென்டிலேட்டரில் வைத்து அவருக்குச் சிகிச்சை அளித்தார்கள்.

**சர்ச்சை -17**

டிசெம்பர் 4ஆம் திகதி மாலை 4.20-க்கு டி.வி பார்த்துக்கொண்டிருந்தபோது, ஜெயலலிதாவுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. வேக வேகமாக அவர் மூச்சை இழுத்து விட்டார். 'டாக்டர்கள் உடனே தீவிரச் சிகிச்சை அளித்தனர். மார்புக் கூட்டைப் பிளந்து எக்மோ கருவியும் பேஸ்மேக்கரும் பொருத்தி, அவரை இயல்புநிலைக்குக் கொண்டு வர் முயன்றனர். ஆனால், 'அதன் பின் சத்திரசிகிச்சை தியேட்டருக்கு அழைத்துச் சென்றும் ஏதும் பலன் இல்லை' என்கிறது அப்பலோ அறிக்கை.

**சர்ச்சை -18**

ஜெயலலிதாவுக்கு டிசெம்பர் 4ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு கார்டியாக் அரெஸ்ட் ஏற்பட்டது' என்கிறது எய்ம்ஸ் குழு அறிக்கை. இதில் நேரத்தை, தனது பேனாவால் திருத்தி, அங்கும் ஒரு கையெழுத்து போட்டிருக்கிறார், எய்ம்ஸ் குழுத் தலைவர், டாக்டர் கில்னானி. (ஆனால், அப்பலோ அறிக்கையில் எந்த நேரத்தில் ஜெயலலிதாவுக்கு கார்டியாக் அரெஸ்ட் ஏற்பட்டது என எதுவும் சொல்லப்படவில்லை.)

**சர்ச்சை -19**

டிசெம்பர் 5ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு எய்ம்ஸ் குழு ஜெயலலிதாவைப் பார்த்தது. எக்மோ கருவியின் செயற்பாட்டை நிறுத்தினால், ஜெயலலிதாவின் இரத்த அழுத்தம் தாறுமாறாகக் குறைந்தது. எனவே, அவரது இதயம் செயற்படவில்லை என முடிவுக்கு வந்தனர். பேஸ்மேக்கர் கருவியை நிறுத்தியதும், ஈ.சி.ஜி.பதிவுகள் நேர்கோடாக வந்தன. எனவே, அவர் மூளைச் சாவு அடைந்துவிட்டார் என்று முடிவு செய்தனர். அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் சசிகலாவிடமும், தமிழக அரசு அதிகாரிகள் மற்றும் மூத்த அமைச்சர்களிடமும் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டது. அவர்களில், ஓ.பன்னீர்செல்வமும் ஒருவர்.

சசிகலா குடும்பம் மட்டுமல்ல... அப்பலோ , எய்ம்ஸ் மருத்துவமனை, லண்டன் மருத்துவர், மாநில அரசு, மத்திய அரசு ஆகிய அனைவரும் மக்கள் காதில் பூ சுற்றுகிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பணி செய்யும் 'கலைமுகம்'

ஈழத் தமிழினத்தின் தனித்துவத்தையும் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களையும் பேணிக் காத்து வளர்ப்பது, முப்பது ஆண்டுகளாக நடந்தேறிய விடுதலைப்போரின் இலட்சியங்களுக்குள் ஒன்றாக இருந்தது, ஒரு தலைமுறையே அழிந்து மண்ணுக்குள் புதைக்கப்பட்டு விட்டது. ஆயிரம் ஆயிரம் உயிர்களைக் காவுகொண்ட பின்னர் எமது பண்பாடு, விழுமியங்களைக் கட்டிக் காத்து காலத்திற்கு ஏற்ப மெருகூட்டி வளர்க்கும் பொறுப்பு இன்றைய தலைமுறையைச் சாருகின்றது...




இவ்வாறு உயிரோட்டத்துடன் யதார்த்தமாக எழுதப்பட்டிருக்கும் ஆசிரியர் குறிப்புடன் 2017 ஆம் ஆண்டு தை-பங்குனி மாதங்களுக்குரிய "கலைமுகம்" கலை இலக்கிய சஞ்சிகையின் 61 ஆவது இதழ் மலர்ந்திருக்கின்றது.

கலை இலக்கியங்களை அழியாமல் தனது கலைப் பயணத்துடன் இணைத்து உயிர்ப்புடன் பாதுகாக்க பாடுபடும் திருமறைக் கலா மன்றம் காலாண்டு சஞ்சிகையாக வெளியிடும் கலைமுகம் சஞ்சிகை நிச்சயம் வரலாற்றில் முக்கிய புள்ளியாக மிளிரும் என்பது உண்மை.

ஈழத்தின் சிறுவர்நாடகம் ஒரு வரலாற்றுப் பார்வை, இரண்டாயிரத்துக்குப் பின் னர் ஈழத்து சிறுகதைகள் ஒரு தசாப்த காலப் பயணம், ஆற்றுகையில் மெய்ப்பா டுகளின் வெளிப்பாடுகள், யாழ்ப்பாணமும் மணற்றியும் கனடாவில் சங்கமித்த திரு மறைக் கலாமன்றத்தின் கலைப் பயணம் 2016 என இன்னும் பல தரமான படைப்புக்களைத் தாங்கி வந்திருக்கின்றது கலைமுகம் சஞ்சிகை.

கலைமுகத்தின் முகப்பு ஓவியம் நாட்காட்டியில் பூ மலர்வது போன்ற ஓவியத்தை தாங்கி நிற்கின்றது.

இதுபல சொல்லாத செய்திகளை வாசகர்களிடத்தே விட்டிருக்கின்றது என்பதை வாசிக்கும் போது உணர்ந்து கொள்ள முடியும்.

கலை, `கலாசார விழுமியங்கள் பற்றி பேசும் இவ்வாறான சஞ்சிகைகள் எம் சமுதாயத்திற்கு தேவை. அத்துடன் மக்களும் அவற்றை தேடிச் சென்று வாசிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

இல்லையேல் கணனி உலகத்திற்குள் வேகமாக ஊடுருவும் எம் அடுத்த சந்ததியிடம் எம் கலை, கலாசார, விழுமி யங்களை கொடுக்க முடியாது என்பதே உண்மை.

எனவே இவ்வாறான சஞ்சிகைகளை வரவேற்போம் பயன் பெறுவோம்.

மாவை. நா.கஜேந்திரன்


# மெக்சிக்கோவில் சுவர்

அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை அமெரிக்கா-மெக்சிக்கோவின் எல்லையில் சுவர் கட்ட 21.6 பில்லியன் டொலர்கள் தேவை என்றும் இதைக் கட்ட 3ஆண்டுகளும் தேவை என்று அண்மையில் செய்த தன் ஆராய்ச்சி முடிவை வெளியிட்டுள்ளது.

2020 இல் கட்டி முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படும் மெக்சிக்கோ எல்லைச்சுவர் ஏறத்தாழ 2000 கி.மீ நீளம் கொண்டது. மூன்று கட்டங்களாக கட்ட முடிவு செய்யப்பட்டிருக்கும் இச்சுவரைக்கட்ட 21.6 பில்லியன் டொலர்கள் செலவாகும் என அமெரிக்க அரசின் பாதுகாப்புத்துறை செயலர் ஜான் கெல்லி கூறியுள்ளார். 1046 கி.மீ தூரத்திற்கு ஏற்கனவே சுவர் கட்டப்பட்டுள்ளது. எனவே மீதியுள்ள சுவரை மாநிலங்களை வளைத்து கட்டினால் போதும். தற்போது முதல் கட்டமாக சான்டியாகோ, கலிபோர்னியா உள்ளிட்ட நகரங்களை கவர் செய்து 46கி.மீ தொலைவுக்கு சுவர் கட்டப்படவிருக்கிறது. யார் பணத்தில் என்று மதர் பிரா மிஸாக கேட்கக்கூடாது பாஸ்!



# மனிதநேய பணக்காரர்!





ஈபே நிறுவனத்தின் பிபெயர்ரே ஓமித்யார் தான் அந்த பணக்காரர். கென்யா மக்களுக்கு அரசு வழங்கும் அடிப்படை ஊதியம் திட்டத்திற்காகத் தான் பணத்தை கொட்டிக் கொடுத்திருக்கிறார். எவ்வளவு? 4,93,000 டொலர்களை சுளையாக கொடுத்திருக்கிறார் என்றால் பாராட் டித்தானே ஆக வேண்டும். கென்யாவில் அடிப்படை சம்பளத்திற்கான ஆதரவில் ஸ்பேஸ் எக்ஸ், நிறுவனர் எலான் மஸ்க், ஒய் காம் பினேட்டர் நிறுவனர் சாம் ஆல்ட்மேன் ஆகியோரோடு தற்போது இணைந்துள்ளார் ஓமித் யார் இன்றைய திகதியில் ட்ரையலாக இருந்தாலும் இதுவே உலகின் மெகா லெஜண்ட் திட்டம். பின்லாந்து கனடாவில் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டமென்றாலும் இது சோம் போறித்தன த்தை வளர்க்கும் என எதிர் பார்ப்பும் இல்லாமலில்லை. கிவ்டை ராக்ட்லி என்ற திட்டத்தின் வழியே இதற்கு நிதி திரட்டும் முயற்சியில் 23.7 மில்லியன் டொலர்களை திரட்டியுள்ளனர்.



அந்தக் கட்சிகூட வாட்ஸ்அப் மாதிரிதான்."
"எப்படிச் சொல்றே?"
"ஏகப்பட்ட குரூப் இருக்குதே."



"மன்னர் ஏன் அந்தச் சேவகனைத் தலைகீழாத் தொங்கவிட்டார்?"
"அவர் வெச்ச ரிங்க்டோனை இவனும் வெச்சிருக்கான்."



"அடுத்த காதலர் தினத்துக்குள்ள நமக்குக் கல்யாணம் ஆகியிருக்கும்."
"அதுக்கு அடுத்த் காதலர் தினத்துக்கு நீ மட்டும் சந்தோஷமா இருப்பேன்னு சொல்லு!"



"தலைவர், ஓர் எளிமையான அரசியல்வாதினு திரும்பவும் நிரூபிச்சுட்டார்."
"எப்படி?" "நாலே நாலு தொண்டர்களை வெச்சு பொதுக்கூட்டம் நடத்தினாரே!"



"மன்னா, ஓலை கொண்டுவந்த புறாவோடு செல்ஃபி எடுப்பதெல்லாம் ஓவர்!"



"கட்சியில ஒற்றுமை இல்லைனு எப்படிச் சொல்றீங்க தலைவரே?"
"வீட்டுல ரெய்டு நடக்கிறப்போ, என்கிட்ட கடன் வாங்கினவன் எல்லாம் வீடு தேடி வந்து பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறான்."



"'மானம், ரோஷம், சூடு, சொரணை இருந்தால், என் எதிரில் வரத் தயாரா?' எனக் கேட்டு, எதிரி மன்னர் ஓலை அனுப்பியுள்ளான் மன்னா, என்ன பதில் அனுப்புவது?"
"'அவை இருந்தால் நிச்சயம் வருகிறேன்' என ஓலை அனுப்பும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்பந்து உலகமே கொண்டாடியது பார்சிலோனாவின் வெற்றி

"Bloody hell!' - ஃபுட்பால் குறித்து மான்செஸ்ட் யுனைடெட் கிளப் முன்னாள் பயிற்சியாளரான ஜாம்பவான் சர் அலெக்ஸ் பெர்குசன் சொன்ன வார்த்தைகள் இவை. உச்சபட்ச பாராட்டு கெட்ட வார்த்தையில் தானே முடியும்!

பெர்குசன் ஏன் அப்படி வர்ணித்தார்... கால்பந்து ஏன் 200-க்கும் மேற்பட்ட நாடுகளில் கால் பதித்திருக்கிறது என்று. எஸ்... ஃபுட்பால் இஸ் ஏ பியூட்டிஃபுல் கேம். ஏன், எதனால்?

இரண்டு வாரங்களுக்கு முன் பாரிஸில் நடந்த சம்பியன்ஸ் லீக் ரவுண்ட் -16 பார்சிலோனா? Catalonia சாம்ராஜ்யம் சரிகிறதா? - கவர் ஸ்டோரிக்கு காத்திருந்தன பத்திரிகைகள். பாரிஸில் அந்த இரவில் கிடைத்த தோல்வி ஸ்பெயினில் பல விடியல்களுக்கு அச்சாரம்.

சம்பியன்ஸ் லீக் தொடரில் நொக் அவுட் சுற்றுகள் Home, Away என இரண்டு கட்டங்களாக (leg) நடக்கும். இரண்டு கட்ட மேட்ச் முடிவில் அதிக கோல்கள் அடித்திருக்கும் அணி, அடுத்த சுற்றுக்கு முன்னேறும். பாரிஸில் நடந்த முதற்கட்ட போட்டியில் பி.எஸ்.ஜி வெற்றி. பார்சிலோனாவுக்கோ 0-4 என என்றென்றும் மறக்க முடியாத



முதற்கட்ட போட்டியில் பார்சிலோனா 4-0 என்ற கோல் கணக்கில் தோல்வி. கிட்டத்தட்ட சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து வெளியேறும் நிலை.

'கடந்த பத்து ஆண்டுகளில் நான்கு முறை (2006, 2009, 2011, 2015) சம்பியனாகி, ஏழுமுறை அரையிறுதிக்கு முன்னேறி, ஐரோப்பிய கால்பந்து உலகை ஆட்டிப் படைக்கும் கிளப்புக்கு இது அழகல்ல'- வரிசைகட்டின விமர்சனங்கள்.

அப்பேற்பட்ட அணியை வென்ற மிதப்பில் இருந்தது பாரிஸ் செயின்ட் ஜெர்மெய்ன் (PSG -பி.எஸ்.ஜி.). கவானி, தியாகோ சில்வா தவிர்த்து சொல்லும்படி பிரபலங்கள் இல்லாத கிளப் அது.

தோல்வியின் விளைவு... 'இந்த சீசனுடன் இந்த கிளப் உடனான என் பந்தம் முடிகிறது' என வருத்தம் தோய்ந்த வார்த்தைகளில் சொன்னார் பார்சிலோனோ கோச் லூயிஸ் என்ரிகே. Messi,Suárez, Neymar என மூன்று ஸ்ட்ரைக்கர்களையும் முன்னிறுத்தி M.S.N. strike force என்ற வார்த்தையை கால்பந்து உலகில் முணுமுணுக்க வைத்தவர் அவர். அவரது நிலைமையைப் பார்த்து, பரிதாபப்பட்டனர் பார்சிலோனாவைப் பிடிக்காதவர்கள். கார்லஸ் பியோல் குட்பை சொல்லி விட்டார்

ஜாவி ஹெர்ணான்டஸ் விடைபெற்று விட்டார் மெஸ்சி, செர்ஜியோ, சுவாரெஸ் முப்பதை நெருங்குகின்றனர். ஜெரார்டு பீக்கே, ஆண்ட்ரஸ் இனியஸ்டா இருவரும் 30+ல் இருக்கின்றனர்.எதிரணியை பார்சிலோனா நிலைகுலைய வைத்ததெல்லாம் புதுமைய செய்தியா? அவ்வளவுதானா

தோல்வி. கிட்டத்தட்ட பி.எஸ்.ஜி காலிறுதிக்குள் ஒரு காலை எடுத்து வைத்து விட்ட நிலை. இருந்தாலும் தங்கள் முறைக்காக காத்திருந்தது பார்சிலோனா. இப்போது இரண்டாவது லெக். அதாவது பார்சிலோனாவின் சொந்த மண்ணில் போட்டி.

சம்பியன்ஸ் லீக் வரலாற்றில், முதல் லெக்கில், அதிக கோல் வித்தியாசத்தில் முன்னிலை பெற்ற அணியை, இரண்டாவது லெக்கில் வீழ்த்திய வரலாறு சொற்பம். ஆனாலும், ஏதாவது அதிசயம் நிகழாதா? எதிர்பார்ப்பில் கேம்ப் E ஸ்டேடியத்தின் 96,000 இருக்கைகளும் நிறைந்திருந்தன. விசில் அடித்த மூன்றாவது நிமிடத்திலேயே லூயிஸ் சுவாரெஸ் ஒரு கோல்... இனியஸ்டா 6 யார்டு பாக்ஸ்க்குள் இருந்து விடாப்பிடியாக மல்லுக்கட்ட, லேவின் குர்ஸவா Own goal அடிக்க வேண்டிய நெருக்கடி... முதல் பாதி முடிவில் ஸ்கோர் 2-0.

டிரஸ்ஸிங் ரூமில் வியூகங்கள். ரசிகர்கள் மனதிலும் கொஞ்சம் நம்பிக்கை. இன்னும் இரண்டே கோல்தான், அதை அடித்து விட்டால் 4-4 (மொத்த கோல் கணக்கு) என சமநிலை. கணக்குப் போட்டான் ரசிகன். ரசிகன் மட்டுமல்ல, பார்சிலோனா வீரர்களும் 'முடிந்த வரை கோல் வாங்கக் கூடாது.

அதேநேரத்தில் எவ்வளவு சீக்கிரம் கோல் அடிக்க முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் கோல் அடிக்க வேண்டும். நம்மிடம் நேரமும் இல்லை. கவனம்...' - என்ரிகே மட்டுமல்ல. ஒட்டுமொத்த பார்சிலோனாவின் கணக்கும் அதுதான்.

இரண்டாவது பாதி தொடங்கிய பத்து நிமிடங்களுக்குள். பெனால்டி பொக்ஸில் புகுந்து விளையாடினார் நெய்மர். பி.எஸ்.ஜி டிஃபண்டர் தாமஸ் மியூனியர், நெய்மரைக் கீழே தள்ளிவிட, விசில் அடித்து' ஸ்பாட் கிக்' திசை நோக்கி கைகாட்டினார் ரெஃப்ரி. இது எல்லாமே பிளான்.

குறிப்பாக நெய்மரின் பிளான். வழக்கம் போல அந்த ஸ்பாட் கிக்கை தன் இடது கால் மூலம் பவர்ஃபுல் ஷாட் மூலம் தெறிக்க விட்டார் மெஸ்ஸி. 'Camp Nouerupts' என அங்கிருந்து ட்வீட் செய்தனர் நிருபர்கள். 3-0 என பார்சிலோனா முன்னிலை. ஒட்டு மொத்தமாக 3-4 என்ற நிலை. இன்னும் ஒருகோல், ஒரே கோல்.... பார்சிலோனா ரசிகர்கள் பிரார்த்தித்தனர். "Sí se puede, sí se puede," -கோரஷாகக் கத்தினர். இதன் அர்த்தம் Yes we can, yes we can...

அடுத்தடுத்து ட்விஸ்ட்டுகளால் நிறைந்ததுதானே கால்பந்து. 62-வது நிமிடத்தில் பி.எஸ்.ஜி. வீரர் கவானி ஒரு கோல் அடிக்க, 'இது ஸ்க்ரிப்ட்லயே இல்லையே...' என நொந்தான் ரசிகன். பார்சிலோனா ரசிகனின் கணக்குப்படி வெற்றிக்கு இன்னும் இரண்டு கோல் தேவை. அதேநேரத்தில் பி.எஸ்.ஜி இன்னும் ஒரு கோல் அடித்தாலும் போச்சு. ஒரு தப்பு செய்தாலும் போச்சு. கால்பந்தில் ஒரு தவறு அடுத்தடுத்த தவறுகளுக்கு வழி வகுக்கும். இன்னும் இருப்பது பத்து நிமிடங்களே. தேவை இரண்டு கோல்கள். முடியுமா? முடியும். முழுதாக பத்து நிமிடங்கள் இருக்கின்றன. அதுபோக, போனஸாக இஞ்சுரி டைம் நிமிடங்கள். கணக்கு மேல் கணக்குப் போட்டான் ரசிகன்.

அவன் கணக்கு பலிப்பது போல, 88-வது நிமிடத்தில் பார்சிலோனாவுக்கு ஒரு ஃப்ரீ கிக். அதுவும் பெனால்டி பாக்ஸ்க்கு மிக அருகில் வைத்து. இந்தமுறை அந்த செட் பீஸை எடுத்தது பிரேசில் சுப்பர் ஸ்டார் நெய்மர். 30 யார்டு பாக்ஸில் இருந்து இரண்டடி தள்ளி மார்க் செய்யப்பட்ட இடத்தில் பந்து வைக்கப்படுகிறது. அதில் இருந்து இரண்டே இரண்டு ஸ்டெப் மட்டும் தள்ளி இருக்கிறார் நெய்மர். இந்த கேப் போதுமா? ஓடி வந்து அடிக்க வேண்டாமா? ஓடி வந்தால்தானே பவர்ஃபுல் ஷாட் அடிக்க முடியும்... ஏகப்பட்ட கேள்வி.

ஆனாலும் நெய்மரிடம் பதில் இருந்தது. போதும். இந்த தூரம் போதும். இந்த இரண்டு ஸ்டெப் ஓட்டம் போதும். ஆம்... அவர் கணக்கு தப்பவில்லை. பி.எஸ்.ஜி கோல்கீப்பரை ஏமாற்றி பந்து வலைக்குள் விழுந்தது. வாட்டே கோல், வாட்டே கர்வ்... துள்ளிக் குதித்தான் ரசிகன். ஆனாலும், காலிறுதிக்குப் போக இது போதாதே. Away goal அதாவது எதிரணியின் மண்ணில் அடித்த கோலை கணக்கில் வைத்தால், பி.எஸ்.ஜிக்குத்தானே வாய்ப்பு. இன்னும் ஒரு கோல். ஏங்கினான் ரசிகன். ஆனால், நேரம்?

அசிஸ்டன்ட் ரெஃப்ரி காண்பித்த அந்த போர்டில், 6 என்ற எண் மிளிர்ந்தது. அப்பாடா... இன்னும் ஆறு நிமிஷம் இருக்கு. பெருமூச்சு விட்டது கேம்ப் E மைதானம். டைம் ஓகே. பிளான் இது சுவாரெஸ் முறை. ஆம், இஞ்சுரி டைமில் பெனால்டி பாக்ஸில் வைத்து அவரை, பௌல் செய்து வாங்கிக் கட்டிக் கொண்டது பி.எஸ்.ஜி. மீண்டும் பார்சிலோனாவுக்கு ஸ்பாட் கிக் வாய்ப்பு. அல்வா போல... அதுவும் இஞ்சுரி டைமில். விடுவாரா நெய்மர்? பளிச்சென ஒரு கோல். 5-5 என சமநிலை. கணக்கு டேலி. 'இருந்தாலும் இன்னும் ஒரு கோல்... அடிச்சா கெத்தா அடுத்த ரவுண்டுக்குப் போகலாம்'- மீண்டும் கணக்குப் போட்டனர் பார்சிலோனா ரசிகர்கள்.

ஒரு கோல்தானே... அடிச்சிட்டாப் போச்சு... நெய்மர் கொடுத்த ஃப்ரீ கிக்கை, பெனால்டி பாக்ஸில் இருந்து லேசாக பறந்து பந்தின் போக்கில் காலை நீட்டி தட்டினார் செர்ஜி ராபர்டோ எனும் யுவன். பந்து கோல் கம்பத்தில் வலையில் பட்டு தெறித்தது. கோல்ல்ல்' - வர்ணனையாளர்கள் அலற, கேம்ப் E மைதானம் முழுவதும் உற்சாகம். ஆட்டம் முடிந்தது. பார்சிலோனா 6-1 என வெற்றி. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 6-5 என வெற்றி. வாட்டே மேட்ச், வாட்டே கம்பேக்... இந்தமுறை பார்சிலோனா மட்டுமல்ல, கால்பந்து உலகமே கொண்டாடியது.

நுணுக்க ரீதியாக இது பிரமாதமான மேட்ச் அல்ல. ஆனால், ஸ்போர்ட்ஸில் எப்போதுமே சேஸிங், கம்பேக் ஸ்டோரிகளுக்கு கிராக்கி அதிகம். அந்தவகையில், இந்தப் போட்டி, திருப்பி அடித்த கதைக்கு நல் உதாரணம். போட்டி முடிந்ததும் என்ரிகே இப்படி சொன்னார்... Like a film, a horror film, not a thriller." (சு)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : மாலையிட்ட மங்கை
இசை :விஷ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர்: ரி.ஆர்.மகாலிங்கம்
வசனம்: கண்ணதாசன்



சில்லென்று பூத்த சிறு நெருஞ்சி காட்டினிலே
நில்லென்று கூறி நிறுத்தி வழி போனாளே
நின்றாது போல் நின்றாள் நெடுந்தூரம் பறந்தாள்
நிற்குமோ ஆவி நிலைக்குமோ நெஞ்சம்
மணம் பெறுமோ வாழ்வே...ஆ...ஆ..ஆ..ஆ..ஆ..

செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

காற்றினில் பிறந்தவளோ புதிதாய்
கற்பனை வடித்தவளோ
சேற்றினில் மலர்ந்த செந்தாமரையோ
செவ்வந்திப் பூச்சரமோ

அவள் செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

கண்களில் நீலம் விளைத்தவளோ
அதைக் கடலினில் கொண்டு கரைத்தவளோ
பெண்ணுக்கு பெண்ணே பேராசை கொள்ளும்
பேரழகெல்லாம் படைத்தவளோ...

அவள் செந்தமிழ் தேன் மொழியாள்
நிலாவென சிரிக்கும் மலர்க் கொடியாள் (2)
பைங்கனி இதழில் பழரசம் தருவாள்
பருகிட தலை குனிவாள்

## கனவுகளும் பலன்களும்



புதிய செயல் செய்யும் முன் பலமுறை சிந்தித்து எச்சரிக்கையாக செய்தால் நல்லது. நீங்கள் தண்ணீரில் தத்தளிக்கும் போது உங்களுக்கு கயிற்றை கொடுத்து யாரோ உதவுவது போல கனவு கண்டால் பெரிய இலாபகரமான விடயங்கள் நீங்களே எதிர் பார்க்காமல் நடக்கும். தடைப்பட்ட சுப நிகழ்ச்சிகளின் தடை விலகும்.

நகையை கனவில் கண்டால் என்ன பலன் நகை வாங்குவது போல கனவு கண்டால் புதிய தொழில் தொடங்குவீர்கள் அல்லது தொழில் விருத்தி உண்டாகும். நற்பலன்கள் தேடி வரும். மனச்சங்கடங்கள் நீங்கி மனநிம்மதியும் சந்தோஷமும் பெறுவீர்கள். கடனுக்காக காத்து இருப்பவர்களாக இருந்தால் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். நகையை அடமானம் வைப்பது போல கனவு கண்டால் எந்தப்பொருளையாவது விற்பீர்கள். அது அசையும் பொருட்களாகவும் இருக்கலாம். அல்லது அசையாத பொருட்களாகவும் இருக்கலாம். இருந்தாலும் குடும்பத்தின் செல்வாக்கு குறையாது. நகை திருட்டு போவது போல கனவு கண்டால் திடீர் தனவரவு உண்டாகும். பாவச் செயலில் ஈடுபடுவீர்கள். தீய சகவாசம் தெருவில் நிறுத்தும் என்பதை அறிந்து செயற்படுவது நல்லது. இறைவனை வணங்கினால் பாதகத்திலிருந்து தப்பிக்கலாம்.

காய், கனிகள் கனவில் வந்தால் என்ன பலன், பழங்களை கனவில் கண்ட ால் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். இலாபகரமான விடயங்கள் தடையில்லாமல் நடக்கும். குடும்பத்தில் இழந்த நிம்மதி திரும்ப கிடைக்கும். நல்ல நிலைக்கு வரும் நேரம் வெகுதொலைவில் இல்லை என்பதை உணர்வீர்கள்.

பழங்களை மற்றவர்களுக்கு கொடுப்பது போல கனவு கண்டால் உங்கள் சந்தோஷத்தை பங்கு போடவே யாராவது வருவார்கள். எடுக்கும் முயற்சியில் பின்னடைவுகள் உண்டாகும். பண விடயத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படும், சண்டை சச்சரவுக்கு போகாமல் இருந்தாலும் உங்களிடம் வீண் சண்டை போடவே சிலர் வருவார்கள். காய்களை நறுக்குவது போல கனவு கண்டால் மனதில் இத்தனை நாட்கள் வாட்டி எடுத்துக் கொண்டிருந்த சங்கடங்களும் பிரச்சினைகளும் விலகும். பெரியோர்களின் வருகையில் மகிழ்ச்சி ஏற்படும். பொதுவாகவே இரவு ஒரு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்திற்குள் பலன் கிடைக்கும். விடியற்காலையில் கனவு கண்டால் ஒரு வருடத்திற்குள் பலன் கிடைக்கும். இரண்டு மணிக்கு கனவு கண்டால் மூன்று மாதத்திற்குள் பலன் கிடைக்கும். மூன்று மணிக்கு கனவு கண்டால் ஒரு மாதத்திற்குள் பலன் கிடைக்கும். விடியற்காலையில் கனவு கண்டால் உடனே பலிக்கும். ஆனால் பகல் கனவு பலிக்காது என்கிறது. கனவு சாஸ்திரம் சிலருக்கு கனவு கண்ட சில நாட்களிலேயே பலிக்கும். நல்ல கனவு கண்டால் மகிழ்ச்சியடைவோம்.

(தொடரும்)

## கண்டிஷன்!



மரகதம் முதலில் கண்ணனுக்கு முடிப்போம். வயசாகுது அவனுக்கு உன் பிடிவாதத்தை விடு. இது நல்ல இடம்.

முடியாது! பொண்ணு குடுத்து பொண்ணு எடுக்கிறோம் என் முடிவை மாத்திக்க முடியாது- மரகதம் உள்ளே போய்விட்டாள். சிவலிங்கமும் தரகரும் ஒருவரை ஒருவர் பார்த்து பெருமூச்சு விட்டனர்.

பெண்ணுக்கு வரன் அமைந்தால் பையனுக்கு பெண் அமையாமலும் பையனுக்குப் பெண் அம்சமாக குதிர்ந்தால் மாப்பிள்ளை அமையாமலும்... தரகர் கூட சலித்துப் போய் விட்டார். ஒரு கட்டத்தில் கொஞ்சம் முன்னே பின்னே ஆனாலும் பேசி முடித்து கல்யாணம் நடந்து இரண்டு ஜோடியும் தேனிலவுக்கும் கிளம்பி விட்டது.

சிவலிங்கம் மரகதம்! ஏன் அப்படி ஒரு பிடிவாதம் பொண்ணு கொடுத்து பொண்ணு எடுக்கணும்னு ... கண்ணனுக்கு எப்பவோ முடிஞ்சிருக்கும்? என்றார். மரகதம் புன்னகையுடன் என்னங்க பண்ணுறது? ஒத்தப் பொண்ணுன்னு ஓவரா செல்லங் குடுத்து வித்யாவ வளர்த்துட்டோம். வாயும் ஜாஸ்தி உடம்பும் வணங்காது பொண்ணு குடுத்து பொண்ணு எடுத்தா, வித்தியாவ கொஞ்சம் பதனமா நடத்துவாங்க. நீக்கு போக்கா இருப்பாங்க... அதுக்குத்தாங்க நான் இந்த விடயத்திலே கண்டிஷனாயிருந்தேன் என்றாள்.

## பாசம்!

ஒரு பக்க முத்திரைக் கதை

வெளிநாட்டில் படித்து அங்கேயே வேலை பார்க்கும் தங்கள் மகன் கிருபாவுடன் கல்யாணப் பத்திரிகை கொடுக்க கிராமத்துக்கு வந்தனர் சங்கரனும் காமாட்சியும்!

ஊரில் ஒவ்வொருவரும் அவனது குழந்தைப் பருவத்தை சிலாகித்துப் பேசியது அவனுக்கு சிரிப்பாக இருந்தது! அனைவரும் மிகைப்படுத்திப் பேசுவது போல தோன்றியது!

இவங்க ஏதோ என்கிட்ட எதிர்பார்க்குறாங்க என்று நினைத்துக் கொண்டான்!

கடைசியாக தூரத்து உறவுப் பாட்டி!

யாருமில்லையாம்! அவருக்கு பத்திரிகை கொடுத்த போது காமாட்சிக்கு கண் கலங்கியது!

கிருபாவை சின்ன வயதில் தூக்கி வளர்த்தது இந்தப் பாட்டிதானாம்!

அவனைக் கூர்ந்து பார்த்த பாட்டி கண்கலங்க அருகில் வந்து தடவிக் கொடுத் தாள்.

பாட்டி பாட்டினு வந்து சில்லறைக் காசு வாங்கிட்டுப் போய் சவ்வு மிட்டாய் வாங்கித் திம்ப! எப்ப காசு வேணும்னாலும் உங்க அப்பா அடிப்பான்னுட்டு எங்கிட்டதான் வந்து காசு கேட்ப! பொக்கை தெரியச் சிரித்தாள்.

சரி தான் பணத்துக்கு அடி போடுறா போல! என்று நினைத்த கிருபா தன் பர்ஸில் இருந்து பணம் எடுக்க ஆயத்தமானான்.

கொஞ்சம் இரு ! என்று சொன்ன பாட்டி வீட்டுக்குள் போய் ஒரு மண் குவளையில் இருந்து கொஞ்சம் காசுகளை எடுத்து வந்து அவனிடம் நீட்டினாள்.

இந்தா உனக்கு வாங்கிட்டு உன் புதுப் பொண்டாட்டிக்கும் ஏதாவது வாங்கிக் கொடு! என்று அவன் கையில் திணிக்க குறுகிப் போனான் கிருபா!.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மொட்ட சிவா கெட்ட சிவா



காஞ்சனா சீரியஸ் மூலம் தொடர் வெற்றிகளை கொடுத்து நீண்ட இடைவேளைக்கு பிறகு வேறு ஒரு இயக்குநர் இயக்கத்தில் லாரன்ஸ் நடித்து வெளிவந்துள்ள படம் தான் மொட்ட சிவா கெட்ட சிவா.



லாரன்ஸ் என்றாலே கமர்ஷியல் மசாலா தான், காமெடி, செண்டிமெண்ட், ஆக்ஷன் என அனைத்தும் அறுசுவை விருந்தாக இருக்கும், அப்படி ஒரு நிறைவான விருந்தை தந்ததா? இந்த மொட்ட சிவா கெட்ட சிவா, பார்ப்போம்.

சென்னை சிட்டி மட்டுமன்றி தமிழகத்தையே தன் கண்ட்ரோலில் வைத்துள்ளார் ஜிகே என்பவர். அவன் அட்டூழியத்தை அடக்கிய தீருவேன் என சத்யராஜ் கங்கணம் கட்டி வருகின்றார்.

ஆனால், ஜிகேவின் அரசியல் வளர்ச்சி சத்யராஜிற்கு பெரும் சவாலாக இருக்க, வம்பாக சென்னைக்கு போஸ்டிங் வாங்கி வருகிறார் லாரன்ஸ்.

லாரன்ஸ் ஆரம்பத்தில் ஜிகேவுக்கு ஆதரவாகவும், சத்யராஜிற்கு எதிராகவும் செயற்படுகின்றார், அப்படி ஒரு கட்டத்தில் ஜிகேவின் தம்பி வம்சி ஒரு பெண்ணை பலாத்காரம் செய்ய, அதிலிருந்தும் லாரன்ஸ் காப்பாற்றுகிறார்.

சத்யராஜ் அந்த பெண்ணை பற்றியும், பொலிஸ் வேலையை பற்றியும் லாரன்ஸிற்கு அரை மணி நேரம் கிளாஸ் எடுக்க, அதன் பிறகு ஹீரோ சும்மா இருப்பாரா? ஜிகேவின் சாம்ராஜியத்தை எப்படி முறியடிக்கின்றார் என்பதே மீதிக் கதை.

லாரன்ஸ் டைட்டில் கார்டிலேயே 'மக்கள் சுப்பர் ஸ்டார்' என தனக்கு தானே போட்டு ஷாக் கொடுக்கின்றார், ஒரு பாடலில் எம்.ஜி.ஆர்க்கு சமர்ப்பிக்கிறார், என்ன திட்டத்தில் இருக்கின்றார் என்றே தெரியவில்லையே..!.



ஆரம்பத்தில் நெகட்டிவ் ஷேட், பிறகு சத்யராஜிற்கும், தனக்குமான உறவு, அது எப்படி பிரிந்தது, அதற்கு சத்யராஜ் கொடுக்கும் விளக்கத்தினால் நல்லவனாக மனம் மாறுவது எல்லாம் 80களிலேயே பலபடத்தில் பார்த்தவைதான்.

ஆனால், லாரன்ஸ் ஆக்ஷன், காமெடி, செண்டிமெண்ட் என அனைத்து ஏரியாக்களிலும் ரவுண்ட் கட்டி அடிக்கின்றார், என்ன ரொம்ப தூக்கலாகவே இறங்கி அடிக்கின்றார், தெலுங்கு பட ரீமேக் தான், அதற்கு என்று படம் முழுவதும் 10 பேரை அடித்துக்கொண்டேவா இருப்பது.

அதிலும் சண்டைக்காட்சிகளில் ஏதோ பேஸ்கட் பால் போல் வில்லன்களை தட்டி தட்டி விளை



யாடுவது எல்லாம் ஓவர் சார், சரி நிக்கி கல்ராணி படத்தில் எதற்கு? வேறு ஒன்றுமில்லை அவர் வந்தால், ஒரு பாட்டு உங்களுக்கு இலவசம், அவ்வளவு தான்.

லாரன்ஸ் எப்போதும் தான் கலந்துக்கொள்ளும் ரியாலிட்டி ஷோக்கள் போல உள்ளது செண்டிமெண்ட் காட்சிகள், பிறகு சார் போதும் நீங்க மாஸ் தான் நாங்க ஒத்துக்கிறோம்ன்னு நாம் சொன்னால் கூட 'நான் மாஸ், பக்கா லோக்கல்' என கத்திக் கொண்டே இருக்கின்றார்.

ஒளிப்பதிவு செம்ம கலர்புல்லாக உள்ளது, தெலுங்கு படம் பார்த்தது போலவே ஒரு அனுபவம் கிடைக்கும், அம்ரிஷின் இசை அனைத்துமே தமன் ரகம்.

லாரன்ஸின் துறுதுறு நடிப்பு, இரண்டாம் பாதியில் வில்லனிடம் செய்யும் சேட்டைகள் பார்த்து பார்த்து பழகிபோன மசாலா கதை, கமர்ஷியல் படங்களில் லாஜிக் மீறல் இருக்கலாம், இதெல்லாம் அத்துமீறல் சார்.

சண்டைக்காட்சிகள் ஆக்ரோஷமாக இருந்தாலும், வில்லன்கள் பறப்பது சிரிப்பு தான் வருகின்றது.

மொத்தத்தில் மொட்ட சிவா 'கெட்ட' சிவா தான். கொஞ்சம் ரூட்ட மாத்துங்க சிவா....







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபுல மீனவர்களின் எதிர்காலமும் இந்திய மீனவர்களின் அத்துமீறலும்

அண்மையில் தமிழ்நாடு தக்கச்சிமடத்தைச் சேர்ந்த 21 வயது மீனவர் பிரிட்ஜோ, கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் கச்சதீவு பகுதியில் இடம்பெற்ற இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குள்ளாகி மரணமடைந்த செய்தியினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் போராட்டங்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. ஒரு தமிழனாகவும் சக மனிதனாகவும் நாமும் அவ்விடயத்தில் எமது அதிருப்தியை வெளிக்காட்டல் பொருத்தமுடையதுதான். ஏனெனில் இலங்கைக்கு கச்சதீவை ஒப்படைத்ததே இந்தியாதான். அவ்வாறிருக்க அந்நாட்டு மீனவனுக்கு இப்படியொரு கொடுமை இன்றைக்கு மட்டும் நடப்பதல்ல. பல ஆண்டுகளாக நிகழ்த்தப்படுகிறது. பல தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டும் காணாமல் செய்யப்பட்டும் கைது செய்யப்பட்டும் உள்ளார்கள். அது தவிரவும் எமது உறவுகள் யுத்தத்தால் அகதிகளாக்கப்பட்டு கடல் மார்க்கமாக தமிழ்நாட்டை அடைந்தபோதெல்லாம் உதவிக்கரம் நீட்டிய மக்களுக்கு இப்படியொரு நிர்க்கதியெனும் போதும் எமது எதிர்ப்பலைகள் வலுப்பெறுகின்றன. ஆனால் எமது தாயக மீனவர்களையும் பற்றி இவ்விடத்தில் சிந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஏனெனில் தமிழக மீனவர்கள் ஏன் எல்லைகடந்து தொழில் செய்ய முனைகிறார்கள் என்ற கேள்வியே இதற்கு காரணமாகிறது.

கடல் ஒரு அரிய வளம். அதனை பாதுகாப்பான முறையில் பயன்படுத்தியமையே இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்குக் காரணமாகிறது. ஒவ்வாத மீன்பிடி உத்திகள் மூலம் தமது நாட்டின் எல்லைக்குட்பட்ட கடல்வளங்களை பாழ்படுத்தி அங்கு கடலுணவுகளின் குடித்தொகையை மட்டுப்படுத்தியமையால் அவர்கள் தொழில் செய்ய முடியாமல் போனது.



உதாரணமாக டைனமைற் கரைவலை மற்றும் இழுவைமடி போன்ற தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகள் இத்தகைய வளப் பற்றாக்குறைவை ஏற்படுத்தின. இம் மீன்பிடிமுறைகள் கடலின் அடித்தளத்தையும் இனப்பல்வகைமையையும் வெகுவாகப் பாதிப்பவை. இழுவைமடி மூலமான மீன்பிடிமுறையானது முருகைக் கற்பாறைகள் மற்றும் மீனினங்களின் இனப்பெருக்க இடங்களையும் நாசம் செய்கிறது. கரைவலையும் அத்தகையதொன்று. அதேபோல் உதாரணமாகக் குறிப்பிட்ட இம்மூன்று முறைகளும் ஒரு குறித்த இனத்தை மட்டும் பிடிப்பதற்கான முறை (Selective fishmy) அல்ல. கடல் வாழ் அங்கிகள் அனைத்தையும் அவற்றின் மூலம் பெறுகின்றனர். ஆனால் அவற்றில் பயன்படுத்தகூடிய உற்பத்திகளைத் தெரிவு செய்து ஏனையவற்றை வீசிவிடுக்கின்றனர். இதன் மூலம் செந்தரவுப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரியவகை இனங்களும் பிறக்கப்படுகின்றன. அத்தோடு சிறிய மீன்குஞ்சுகளும் பிடிபடுகின்றன. இது சாதாரணமாக யாபேரும் அறிந்த ஒன்று. ஆனாலும் இத்தகைய மீன்பிடி உத்திகள் நடைமுறையிலுள்ளதுடன் இத்தகைய உத்திகளாலேயே இந்தியாவின் கடற்பரப்பில் வளச் சுரண்டுகையினால் வளக்குறைவு ஏற்பட்டுள்ளது.

அதன் காரணமாகவே மீன்பிடியை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள தமிழக மீனவர்கள் தமது மீனுற்பத்திகளைக் கூட்டுவதற்காக இலங்கைக் கடலுக்குள் ஊடுருவுகின்றனர் என்பது தான் நிறுதிட்டமான உண்மை.

இவ்வாறு வேறு நாட்டின் எல்லைக்குள் பிரவேசிக்கும் போது சட்டரீதியாக அதனைத் தடுப்பதற்கு அந் நாட்டு அரசிற்கு முழு அதிகாரமும் உள்ளது. அச்சட்ட நடவடிக்கை கொலை செய்யும் அளவிற்குச் செல்வது கவலைக்கிடமானது தான். அதற்காக எமது வளத்தைப் பாதுகாக்க வேண்டியதும் கட்டாயமாகிறது.



எமது வடபுலத்து மீனவர்கள் ஏறத்தாழ இரண்டு இலட்சத்திற்கும் அதிகமானோர் மீன்பிடியை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். முப்பது ஆண்டு கால உள்நாட்டுப் போரினால் பாதிக்கப்பட்டு வாழ்வியலில் உருக்குலைந்து போனவர்கள். பெரும்பாலானவர்கள் ஏழ்மையால் பாதிக்கப்பட்டவர்கள். அவற்றுள் போரினால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்த குடும்பங்களும் உள்ளடங்கும்.

அத்தோடு பாரம்பரிய மீன்பிடிமுறைகள் மற்றும் சிறியளவு முதலீடுகளைக் கொண்ட மீன்பிடி உத்திகளையும் பயன்படுத்தித் தொழில் செய்பவர்கள் தமது வாழ்வாதாரத்தில் கடந்தகாலச் சூழலின் தாக்கத்திலினின்றும் சற்றே நிமிரும் போது இந்திய மீனவர்கள் எமது நாட்டுக் கடற்பரப்பிற்குள் நுழைந்து வளங்களை சூறையாடுதல் பொருத்தமுடையதா? இத்த கைய பொருத்தமற்ற மீன்பிடி முறைகளைப் பயன்படுத்து தலை அனுமதிக்க முடியுமா என்பது நாம் சிந்திக்க வேண்டும்.

வடபுலத்தின் கணிசமான கரையோரவாசிகள் மீன்பிடி வாழ்வாதாரமுடையவர்களாதலால் அவர்களது வளங்களைப் பாதுகாத்துத் தருகின்ற செயற்பாடுகள் துரிதப்படுத்தப்படல் வேண்டும். அதற்கான அச்சுறுத்தல் காரணிகளை இனங்காணல் வேண்டும். எனில் அத்தகைய காரணியே மிகமுக்கியமாக இந்திய மீனவர்களின் வடபுலக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களால் பயன்படுத்தும் அதிவேக இழுவிசைப் படகுகளும் இழுவைமடிப் பயன்பாடும் இலங்கைக் கடற்பரப்பின் அடித்தளத்தையும் முருகைக் கற்பாறைகளையும் அழிக்கின்றன. இதனால் பல கடல்வாழ் உயிர்களின் இனப்பெருக்க நிலையிடம் நிலைகுலைக்கப்படுகின்றது. இது சூழலியல் செயற்பாடு.

அதுமட்டுமன்றி இலங்கை மீனவர்கள் மீன்பிடிப்பதற்காக கடற்பரப்பில் போடுகின்ற வலைகளையும் இப்படகுகள் சேதப்படுகின்றன. ஒன்றுவிட்ட ஒரு நாளுக்கு இவர்களது வாழ்வாதாரம் இவ்வாறு பாதிக்கப்படுகிறது. ஏனெனில் செவ்வாய், வியாழன், சனி போன்ற நாட்களிலேயே இந்திய மீனவர்கள் இழுவை மடியுடன் கூடிய மீன்பிடியை இலங்கைக் கடற்பரப்பில் செயற்படுத்துகின்றனர். ஆக மொத்தத்தில் ஒரு புறம் வளம் சேதப்படுகிறது. அதேவேளை வாழ்வாதாரம் சிதைக்கப்படுகிறது என்பது தான் உண்மை. இது இவ்வாறே நீடிக்குமானால் எதிர்காலத்தில் சில கடல்வாழ் உயிரினங்கள் இல்லாமலேயே போய் விடும். பல்லாயிரக் கணக்காக வடபுல மீன்பிடிக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தால் பாதிக்கப்பட்டு அவர்களும் சட்டபூர்வமற்ற மீன்பி டி முறைப் பயன்பாட்டிற்கு உந்தப்படுவார்கள்.

இவற்றை விளங்கிக் கொண்டு சில முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயம் இரு நாட்டிற்கும் உரியது. அதில் முக்கியமானது இந்திய மீனவர்கள் நாளுக்குநாள் கைது செய்யப்பட்டும் உடைமைகள் பாதிக்கப்பட்டும் வேதனைப்படுத்தல் குறைக்கப்பட வேண்டும்.

அத்தோடு வடபுல மீனவர்களின் நின்று நிலைபெறும் வாழ்வாதாரம் வளக்காப்புடன் உறுதி செய்யப்படல் வேண்டும்.

பொருத்தமான சட்ட மூலம் மூலமாக இந்திய மீனவர்களின் உள்வருகையைத் தடுத்தல் வேண்டும். தமது கடல் எல்லையைத் தாண்டுவதனால் கடுமையான சட்டச்சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் என்பதை உணர்த்துதல் வேண்டும். தமது கடற்பரப்பில் ஏற்பட்ட வளக்குறைவு போல் இலங்கைக் கடற்பரப்பிலும் தம்மால் அத்தகைய செயற்பாடு நிகழும் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

கடல்சார் மாற்று வாழ்வாதாரத்தை அவர்களுக்கு இந்திய அரசு ஏற்படுத்தித் தர வேண்டும். இல்லையேல் எமது நாட்டு வடபுல மீன வர்களின் வாழ்வாதாரம் நிச்சயம் பாதிக்கப்படுவதோடு வடபுலக் கடற்பரப்பில் வளங்களின் சமநிலை அற்றுப் போவதனால் நின்று நிலைபெறும் மீன்பிடியானது சவாலாக மாறும்.

அதுமட்டுமன்றி இல ங்கை மீனவர்களிடத்தும் இந்திய மீனவர்களுக்குப் போட்டியாக சட்டரீதியற்ற மீன்பிடி முறைகளைப் பயன்படுத்துகின்ற தன்மையைக் குறைப்பதற் குப் பொருத்தமான விழிப்புணர்வுகளை மேற்கொள்வதோடு அதற்கெதிரான கடுமையான சட்டங்களை அமுல்படுத்தலும் நிச்சயமாகிறது. அதற்காக மீன்பிடிக் கூட்டுறவு அமைப் புக்களுடன் இணைந்து பொருத்தமான செயலாற்றுகையை முன்மொழிதல் அவசியமாகிறது.

இலங்கையின் கடல் வளத்தின் எதிர்காலமும் மீனவர்களின் பொருளாதார மேம்பாடும் இவ் அத்துமீறிய மீன்பிடியால் கேள்விக்குறியா கின்ற தன்மையை இழிவளவாக்குதல் என்பது மிகவும் நோக்கத்தகுந்தது.

தெய்வீகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook®

# வாய்மையே வெல்லும்

## நேர்மைக்கு என்றுமே அழிவில்லை!

பொதுப் பணித்துறை ஊழியராயிருந்து ஓய்வுபெற்றவர் 'பச்சை தண்ணி' பத்மநாபன். ஊழல் புரையோடிப்போன ஒரு துறையில், பச்சைத் தண்ணீர் கூட அடுத்தவரிடம் கேட்டு வாங்கி குடிக்கமாட்டாராம் பத்மநாபன். அதனால் அவருக்கு சக ஊழியர்களால் கிண்டலாக சூட்டப்பட்ட புட்டப்பெயர் தான் 'பச்சை தண்ணி' பத்மநாபன்.

ஒருநாள் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்தவர், தனது உயிர் பிரியப் போகிறது என்பதை அறிந்து தனது பிள்ளைகளை அழைத்தார்.

"இறைவா... என் பிள்ளைகளை அநாதையாக விட்டுவிட்டுப் போகிறேன். நீ தான் அவர்களை காக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தவர் பிள்ளைகளிடம் "நான் எப்படி வாழ்ந்தேன் என்று [illegible]களுக்குத் தெரியும்.

நீங்களும் எந்தச் சூழலிலும் நீதி தவறாமல் தேவைகளை சுருக்கிக் கொண்டு நேர்மையாய் வாழ்ந்து என் பெயரைக் காப்பாற்றவேண்டும்" என்று நா தழுதழுக்க சொன்னார்.

இரண்டு மகன்களும் அமைதியுடன் கேட்டுக்கொண்டிருக்க, கடைசி மகள் ப்ரியா மட்டும் கோபத்தில் வெடித்தாள். ப்ரியா கல்லூரி முதலாமாண்டு படித்துவருகிறாள். அவள் விரும்பிய கல்லூரியில் கூட அவளை சேர்க்க வழியின்றி ஏதோ அரசு உதவி பெறும் கல்லூரியில்தான்பத்மநாபனால்சேர்க்க முடிந்தது. அதுவே அவளுக்கு கோபம்.

"அப்பா... உங்க பேங்க் அக்கவுண்டில் நையா பைசா கூட இல்லாமல் நீங்கள் எங்களைவிட்டு போவது எங்கள் துரதிர்ஷ்டம். உங்களை என்னால் பின்பற்றமுடியாது. உங்கள் அறிவுரைகளையும் கேட்க முடியாது. ஊழல் பேர்வழிகள், ஊழல் பெருச்சாளிக் என்று நீங்கள் கூறியவர்கள் எல்லாரும் அவர்கள் குழந்தைகளுக்கு பல தலைமுறைகள் சொத்து சேர்த்து விட்டு சென்றிருக்கிறார்கள். ஆனால் நாம் இருக்கும் இந்த வீடு கூட வாடகை வீடு தான். ஸொரி. நேர்மையாயிருந்து நாங்கள்பட்டதெல்லாம், உங்களை என்னால் பின்பற்றமுடியாது. நாங்கள் எங்கள் வழியை பார்த்துக்கொள்கிறோம் என்றாள்.

அவளை உற்று நோக்கியபடி பரிதாபமாக பார்த்த அந்த ஜீவனின் உயிர் அடுத்த சில நிமிடங்களில் பிரிந்தது.

### காலங்கள் உருண்டன

கல்லூரிப் படிப்பை எப்படியோ தட்டுத் தடுமாறி முடித்த ப்ரியா ஒரு புகழ் பெற்ற கட்டுமான நிறுவனப் பணிக்கு அப்ளை செய்து நேர்முகத் தேர்வுக்கு சென்றாள். அந்த பணிக்கு தேவையான தகுதியுடைய நபரை ஏற்கனவே பேனல் உறுப்பினர்கள் தேர் தெடுத்துவிட்டாலும், ஒரு ஃபார்மாலிட்டிக்காக இண்டர்வ்யூவை நடத்திக்கொண்டிருந்தனர். பேனல் மெம்பர்களுக்கு மத்தியில் அந்நிறுவனத்தின் எம்.டியும் அமர்ந்திருந்தார்.

ப்ரியாவின் முறை வந்ததும் உள்ளே அழைக்கப்பட்டாள்.

அவளது ரெஸ்யூமை பார்த்த பேனல் மெம்பர் ஒருவர் "உன் அப்பா மிஸ்டர்.பத்மநாபன் பொதுப்பணித்துறையிலிருந்து ஓய்வு பெற்றவரா?" என்றார்.

"ஆமாம்சார்" உடனே எம்.டி. நிமிர்ந்து உட்கார்ந்தார். ப்ரியாவை நோக்கி கேள்வியை வீசினார் "உங்கப்பாவுக்கு 'பச்சைத் தண்ணி பத்மநாபன் எங்குற பேர் உண்டா?' ஆமாம்சார்" என்றாள்சற்று நெளிந்தபடி.

"ஓ...நீங்க அவரோட டாட்டரா? இந்தக் காலத்துல அவரை மாதிரி மனுஷங்களை பார்க்க முடியாதும்மா. இந்த கம்பனி இன்னைக்கு இந்தளவு வளர்ந்திருக்குதுன்னா, அதுக்கு அவரும் ஒரு காரணம். கடலூர்ல இருக்கும் போது நான் 15 வருஷத்துக்கு முன்ன கவர்மெண்ட் காண்ட்ராக்ட் ஒன்னுக்கு டெண்டர் அப்ளை பண்ணியிருந்தேன். என்னைவிட அதிகமா கோட் பண்ணின நிறையபேர் எவ்வளவோ லஞ்சம் தர்றதா சொன்னாலும் உங்கப்பா அதுக்கெல்லாம் ஆசைப்படாம, அவங்க மிரட்டலுக்கெல்லாம் மசியாம அந்த காண்ட்ராக்ட்டை முறைப்படி எனக்கு ஒதுக்கினார். அன்னைக்கு மட்டும் அவர் அந்த காண்ட்ராக்டை எனக்கு ஒதுக்கலேன்னா இன்னைக்கு நான் இல்லை. இந்த கம்பனியும் இல்லை. ஏன்னா என் சொத்தையெல்லாம் அடமானம் வெச்சு கம்பனி ஆரம்பிச்ச நேரம் அது. அந்த ஒரு காண்ட்ராக்ட் மூலமாத் தான் எனக்கு நல்லபேர் கிடைச்சி, இந்த துறையில ஒரு பெரிய என்ட்ரி கிடைச்சது. ஆனால் அதுக்கு பிறகு உங்கப்பா வேற ஊருக்கு ட்ரான்ஸ்பர் ஆயி போய்ட்டார்."

அவருக்கு என்னோட நன்றிக் கடனை செலுத்த, இதைவிட பெரிய வாய்ப்பு கிடைக்காதும்மா யூ ஆர் செலக்டட். நாளைக்கே நீ டூட்டியில் ஜாய்ன் பண்ணிக்கலாம்." என்றார்.



அந்நிறுவனத்தின் எச்.ஆர்.பிரிவில் தலைமை அதிகாரியாக ப்ரியாவுக்கு வேலை கிடைத்தது. அலுவலகம் வந்து செல்ல ஒரு டூ-வீலர் வாங்கித் தந்தார்கள். பி.எப்., இன்செண்டிவ், ரெண்ட் அலவன்ஸ்என பலப்பல சலுகைகள். கனவிலும் ப்ரியா எதிர்பார்க்காத ஒரு வேலை. இரண்டு ஆண்டுகள் சென்றன. ப்ரியா பணியிடத்தில் நல்ல பெயர் எடுத்தாள்.

இதற்கிடையே அவர்கள் சிங்கப்பூர் கிளை அலுவலகத்தின் தலைமை பொறுப்பில் இருந்தவர் வேலையை ராஜினாமா செய்துவிட, அங்கு தலைமை பொறுப்புக்கு தகுதியான ஆள் தேவைப்பட்டார். **BOARD OF DIRECTORS** ஒன்று கூடி விவாதித்து ப்ரியாவையே சிங்கப்பூர் பிரிவுக்கு தலைமைப் பொறுப்பில் நியமிப்பது என முடிவானது.

மாதம் பத்து லட்ச ரூபாய் சம்பளம். கம்பனி சார்பாக ஒரு கார், அப்பார்ட்மெண்ட் என அத்தனை வசதிகளும் அவளுக்கு கிடைத்தன. கடுமையாக உழைத்து சிங்கப்பூர் நிறுவனத்தின் இலாபத்தை பன்மடங்கு அதிகரிக்கச் செய்தாள் ப்ரியா.

அவளை லோக்கல் பிஸ்னஸ் பத்திரிகை ஒன்று பேட்டி கண்டது. உங்கள் வெற்றிக்கு காரணம் என்ன என்று கருதுகிறீர்கள்?" கேள்வி கேட்கப்பட்டதுமே ப்ரியா உடைந்து அழலானாள்.

"இது எல்லாம் என் அப்பா எனக்கு போட்ட பிச்சை. அவர் மறைந்த பிறகு தான் நான் உணர்ந்தேன். பொருளாதார ரீதியாக அவர் ஏழையாக மறைந்தாலும் ஒழுக்கத்திலும், நேர்மையிலும் நாணயத்திலும் அவர் கோடீஸ்வரராக மறைந்தார்."

அதுக்கு ஏன் இப்போ இவ்வளவு நாள்கழிச்சு அழுறீங்க? என் அப்பா இறக்கும் தருவாயில் அவரது நேர்மைக்காக அவரை நான் அவமதித்தேன். என் அப்பாவின் ஆன்மா என்னை மன்னிக்கும் என்று நம்புகிறேன். இன்று நானிருக்கும் நிலைக்கு வர நான் எதுவும் செய்யவில்லை. அவர் கஷ்டப்பட்டு அல்லும் பகலும் பலவித தியாகங்களுக்கு இடையே போட்ட பாதையில் நான் சுலபமாக நடந்து வந்துவிட்டேன்."

நீங்கள் எப்படி பத்மநாபனை போலவா? உண்மையான நல்ல பெயரை சம்பாதிப்பது என்பது மிக மிகக் கடினம். அதன் வெகுமதி உடனே வருவதில்லை, ஆனால் அது எவ்வளவு தாமதமாக வருகிறதோ அந்தளவு நீடித்து நிலைத்து நிற்கும்.

### நேர்மை, நாணயம், ஒழுக்கம்

சுய-கட்டுப்பாடு, தீயவற்றுக்கு அஞ்சுவது, தன்னம்பிக்கை இவையெல்லாம் தான் ஒரு மனிதனை முழுமையாக்குகின்றன. கோடீஸ்வரனாகவும் ஆக்குகின்றன.


வங்கிக் கணக்கில் இருக்கும் பணம் அல்ல. உங்கள் குழந்தைகளுக்கு நல்லவற்றை விட்டுச் செல்லுங்கள். இதைத் தான் அக்காலங்களில் சொன்னார்கள் பிள்ளைகளுக்கு பணம் சேர்ப்பதைவிட புண்ணியத்தை சேர்க்கவேண்டும் என்று.

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1012

Search for people, places and things · Nagendram · Home

| சுதர்சன் | தாரனி | தனஞ்சயன் |
|---|---|---|







| பிரணவன் | சரவணபவன் கிருபவன் | தாட்சாயினி |
|---|---|---|










நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 75

# பன்றிக் காய்ச்சல் (Swine Flu) தொற்றுநோயும் தடுப்பு நடவடிக்கைகளும்

நமது சமூகத்தினை அச்சத்தில் ஆழ்த்தியிருக்கும் தொற்று நோய்களில் பன்றிக்காய்ச்சலும் ஒன்றாகும். அண்மைக்காலமாக இந்நோயினால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக் கொண்டிருப்பது யாவரும் அறிந்ததே.

பன்றிக் காய்ச்சல் என்பது ஒருவகை வைரஸ் காய்ச்சலாகும். இது இன்புளுவன்ஸா (Influenza) வகை வைரஸ் கிருமியினால் ஏற்படும் ஒருவகை சுவாசநோயாகும். இன்புளுவன்ஸா வைரஸ் கிருமிகள் ஐந்து வகைகள் உள்ளன. அதில் H1 N1 என்பதே பன்றிக் காய்ச்சல் வைரஸ் ஆகும்.

பன்றிக் காய்ச்சலானது 1918 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டில் முதன் முதலாகப் பரவியது. இது ஆரம்பகாலத்தில் பன்றிகளில் இருந்து பன்றிகளுக்குப் பரவியது. பின்னர் பன்றிகள், கோழிகளில் இருந்து மனிதனுக்குப் பரவியது. தற்போது மனிதர்களிலிருந்து மனிதர்களிற்கு பரவிவருகின்றது.

பன்றிக் காய்ச்சல் ஏற்பட்ட ஒருவர் இருமும் போது அல்லது தும்மும் போது மூக்குத் திவளைகளிலிருந்து வைரஸ் கிருமியானது மற்றவரை சென்றடைவதன் மூலமாகப் பரவுகின்றது.

இதன் தாக்கத்திற்கு உள்ளாக்கப்படக் கூடியவர்கள் கூடுதலாக கர்ப்பவதிகள், 2 வயதிற்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதிற்கு மேற்பட்ட வயோதிபர்கள், நாட்பட்ட நோய் நிலையால் பாதிக்கப்பட்டோர் (அதாவது நாட்பட்ட சிறுநீரக வழுவல், நுரையீரல் நோய், நாட்பட்ட ஈரல் நோய், இருதயநோய் போன்றன) மற்றும் நிர்ப்பீடண சக்தி குறைந்தோர் (கசநோயாளர் , காசநோயாளர்) ஆவர்.

பன்றிக் காய்ச்சல் நோயினால் பீடிக்கப்பட்டவர்களிற்கு உரிய அறிகுறிகள் காய்ச்சல், தொண்டைநோ, மூக்கால் நீர் வடிதல், சளித்தொல்லை, சோர்வு, தாங்க முடியாத உடல்வலி, பசியின்மை, வாந்தி, வயிற்றுப் போக்கு இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். மயக்கம் ஏற்படலாம்.

காய்ச்சல் பற்றிக் குறிப்பிட்டு சொல்லுவதாயின் முதல் 5 நாட்களிற்கு சாதாரணகாய்ச்சல் போன்றிருக்கும் பின்னர் காய்ச்சல் கடுமையாகும்.

பன்றிக் காய்ச்சல் தொற்றுக்குள்ளானவர்களை A, B, C என்ற மூன்று பிரிவினராக வகைப்படுத்தலாம்.

A பிரிவினர் - சாதாரண சளிசுரத்துடன் காணப்படுவர்.

B பிரிவினர் - சளிசுரத்துடன் தொண்டை நோவாலும் அவஸ்தை உறுவர்.

A, B - பிரிவினர் வெளிநோயாளராக அங்கீகரிக்கப்பட்ட வைத்தியர் ஆலோசனைப்படி சிகிச்சைமேற் கொள்ளமுடியும். விடுதியில் அனுமதித்து சிகிச்சைபெற வேண்டிய அவசியமில்லை.

C பிரிவினர் - இவர்கள் மருத்துவமனையில் அனுமதித்துச் சிகிச்சையளிக்கப்பட வேண்டியவர்கள்.

இப் பிரிவினருக்குரிய குணங்களாக

### சிறுவர்களிற்கு

- வேகமாக சுவாசித்தல் / சுவாசசிரமம்
- தோல் நீலநிறமடைதல்
- நீராகாரம் போதியளவு உள்ளெடுக்காமை.
- சோர்வாக இருத்தல்.
- அசௌகரியமாக இருத்தல்/ சினத்தல்.
- தோலில் சிவப்புநிற புள்ளிகள் ஏற்படல்.

### பெரியவர்களிற்கு

- சுவாசச்சிரமம் .
- மார்பு, வயிற்றுப் பகுதியில் வலி / அழுத்தமான உணர்வு.
- திடீர் மயக்கம்.
- தடுமாற்றம்.
- கடுமையான வாந்தி.

மேற்குறிப்பிட்ட குணங் குறிகளுடன் காணப்படின் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சையளிக்கப்படல் வேண்டும்.

பன்றிக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டவர்களிற்குரிய சிகிச்சைகள் அவர்களுக்குரிய குணங்குறிகளிற்கு ஏற்ப அமையும். (Tamiflu) ரமிபுளு என்ற மாத்திரை இவர்களிற்கு சிகிச்சையாக அளிக்கப்படுகின்றது.



- தொண்டை நோவிற்கு மிதமான சூடான உப்புக் கலந்த நீரினால் அடிக்கடி கொப்புளித்துவரின் தொண்டைநோ படிப்படியாகக் குறையும்.
- சூடான பானங்கள் அடிக்கடி உள்ளெடுப்பதன் வாயிலாகவும் தொண்டைநோவின் தீவிரத் தன்மையை குறைத்துக் கொள்ளலாம்.
- தினமும் குறைந்த பட்சம் 10 குவளை நீராவது உள்ளெடுக்க வேண்டும்.

பன்றிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களை நோய் நிதானம் செய்ய அவர்களின் தொண்டை மற்றும் மூக்குத்துவாரங்களில் பஞ்சுத்தூரிகையினால் (Swab Culture) மாதிரி எடுத்து ஆய்வு கூட பரிசோதனையினூடாக H1 N1 கிருமியிருப்பதைக் கண்டறியலாம்.

பன்றிக்காய்ச்சல் பரவக்கூடிய காலப்பகுதியானது (Incubation Period) பன்றிக் காய்ச்சல் தொற்றுக்குள்ளான ஒருவரின் அறிகுறி தென்படுவதற்கு ஒருநாள் முதலிலிருந்து நோய்வாய்ப்பட்ட ஏழாம் நாள் வரைக்கும் மற்றொருவரிற்கு இந்நோயானது தொற்றும்.

பன்றிக்காய்ச்சல் நோய் வராமல் தடுக்க கீழ்வரும் சுகாதார பழக்கவழக்கங்கள் கையாளுவதனூடாக நோய்த்தாக்கத்திலிருந்து நம்மையும் நமது சமூகத்தையும் பாதுகாத்துக் கொள்ளலாம்.

- பன்றிக் காய்ச்சல் தொற்றுக்குள்ளானவருடன் நெருங்கிப் பழகுதலைதவிர்த்தல். ஏறத்தாழ ஒரு கிலோமீற்றர் இடைவெளி இருத்தல் வேண்டும்.
- பாதிக்கப்பட்டவரிற்கு முகமூடி அணிதல், பாதிக்கப்பட்டவருடன் நெருங்கிப்பழகவேண்டிய சந்தர்ப்பத்தில் பராமரிப்புக் கொடுப்பவரும் முகமூடி அணிதல்.
- நோய்வாய்ப்பட்டவர் இருமல் தும்முதலின் போது கைக்குட்டை / ரிசுபாவித்தலை பழக்கத்தில் கொண்டுவரல்.
- பாவித்த ரிசுவை முறையான விதத்தில் வெளியகற்றல்.
- கைக்குட்டையை சவர்க்காரமிட்டுக் கழுவி சூரியவெளிச்சம் நேரடியாகப் படக்கூடியவாறு உலரவிடல்.
- இருமல், தும்மல் ஏற்படுகையில் உள்ளங்கையால் மறைத்தபடி இருமுதல், தும்முதல். பின்னர் நன்குகைகளைச் சவர்க்காரமிட்டு கழுவுதல். அற்ககோல் திரவமிருப்பின் கை கழுவுவதற்கு பதிலாக அதனைப் பயன்படுத்தலாம்.

தேவையற்று பன்றிக் காய்ச்சல் தாக்கத்திற்குள்ளானவர்களை பார்வையிடலை தவிர்க்க வேண்டும். குறிப்பாக குழந்தைகள், கர்ப்பவதிகள் மற்றும் முதியோர்கள் இயன்றவரை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இவர்கள் இலகுவில் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகக்கூடிய பிரிவினர் ஆவர்.

நோய்த் தாக்கத்திற்கு உள்ளானவர்களைத் தனிமைப்படுத்தல் இயன்றவரை பொது இடங்கள், சனநெருக்கடியான இடங்கள், மாணவர்கள் எனின் பாடசாலை செல்வதைத் தவிர்த்தல். வீட்டில் குணமடையும் வரை ஓய்வாக இருத்தல். மற்றவர்களை தொற்றிலிருந்து பாதுகாக்க ஏதுவாக அமையும்.

வெளியிடங்களிற்கு சென்று விட்டுவந்தபின் கை, கால், முகம், கழுத்துப் பகுதிகளை நன்கு சவர்க்காரமிட்டு ஓடும் நீரில் கழுவுதல் வேண்டும். ஏனெனில் நோய்த்தாக்கத்திற்கு உள்ளானவரில் இருந்து 20% ஆன வைரஸ் கிருமியானது இருமல், தும்மல் போன்றவற்றினாலும் 80 % ஆன கிருமிகள் அவர்களின் சுற்றாடலில் இருந்து எமது கைகளைச் சென்றடைந்துபின் எமது கைகளிலிருந்து எமது கண், மூக்கு, வாய் போன்றவற்றிற்குள் செல்வதனாலேயே பன்றிக்காய்ச்சல் கிருமி பரவ ஏதுவாக அமையும். எனவே தான் வெளியிடங்களில் சென்று வந்தபின் கைகழுவுதல் வேண்டும்.

ஈரலிப்பான மற்றும் குளிரூட்டப்பட்ட இடங்களில் இருமல், தும்மல் மூலம் பரவும் துளிகளிலிருக்கும் வைரஸ் கிருமிகள் ஒன்று தொடக்கம் இரண்டு நாட்கள் வரை உயிர்வாழக் கூடியவை. எனவேதான் பொது இடங்களில் அதாவது மின்தூக்கி பட்டன். பஸ்ஸில் பிரயாணிப்பவர்கள் எல்லோரும் வீடுவந்தவுடன் கைகளை நன்கு சவர்க்காரமிட்டு 15 தொடக்கம் 20 செக்கன்கள் வரை ஓடும் நீரில் கை கழுவுதல் வேண்டும். தேவையற்று கைகளை மூக்கு, முகம் வாய்ப்பகுதிக்குள் கொண்டு செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

- அடிக்கடி கைகளை சவர்க்காரமிட்டு கழுவுதல்.
- நோய்வாய்ப்பட்டவரின் ஆடைகள், படுக்கை விரிப்புகள் முறையாக சவர்க்காரமிட்டு கழுவி நேரடி சூரியவெளிச்சத்தில் உலரவிடல். அவர்கள் பாவித்தமெத்தை, தலையணை போன்றவற்றைநேரடி சூரிய வெயிலில் காயவைத்தல் மூலம் நோய் பரவலைகுறைக்கலாம்.
- வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் கூடுதலாக இந்நோயினால் பாதிக்கப்பட்டிருக்கலாம். எனவே வெளிநாட்டவருடன் பழகுகையில் எச்சரிக்கையுடன் இருத்தல்.
- தினமும் குளித்தல், நோய் எதிர்ப்பு சக்திவாய்ந்த சவர்க்காரம் பாவித்தல்.
- சத்தான உணவு வகைகள், தானியவகை, காய்கறி, பழவகைகள் போன்றவற்றை உண்ணல்.
- அதிகளவு நீராகாரம் உள்ளெடுத்தல்.
- மிதமான உடற்பயிற்சி கிரமமாக மேற்கொள்ளல்.
- மன அழுத்தம், அதிக வேலைப்பளுக்களை முறையாகக் கையாளல்.
- குறைந்தபட்சம் நாள் ஒன்றிற்கு 8 மணித்தியாலங்கள் நித்திரை கொள்ளல்.
- மது அருந்துபவர்கள் மது அருந்தும் பழக்கத்தை நிறுத்தல். ஏனெனில் மது அருந்துவர்களிற்கு நிர்ப்பீடண சக்தி குறைவாக இருக்கும். எனவே நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகும் வாய்ப்பு கூடுதலாக இருக்கும்.

மேலேகுறிப்பிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையான விதத்தில் கைக்கொள்வதன் மூலமாக பன்றிக்காய்ச்சல் தொன்றிலிருந்து நம்மைப் பாதுகாத்து ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பலாம்.

திருமதி. குயிலினி சுரேஸ்
தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org